விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

ரா
ம்
கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
R A M C O
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 சித்திரை 28 புதன்கிழமை (11.05.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 143

## ஐ.நாவின் அறிக்கை சாதாரணமானதல்ல

# போர்க் குற்றச்சாட்டில் இருந்து

# இலங்கையை இந்தியா காப்பாற்றும்!



## ஜனாதிபதி மகிந்த நம்பிக்கை

(கொழும்பு)

இலங்கை மீது போர்க் குற்றம் சுமத்தியுள்ள ஐ.நா. நிபுணர்குழுவின் அறிக்கையால் எழுந்துள்ள நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு அரசுக்கு இந்தியாவின் ஆதரவு முக்கியமானது. பொருத்தமான நேரத்தில் அந்த ஆதரவு கிடைக்கும் என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (20ஆம் பக்கம் பார்க்க)

## யுத்தத்தின்போது மக்களைக் காப்பாற்ற ஐ.நாவிடம் கப்பல் ஒன்றைக் கேட்டோம்

### அவர்கள் தரவில்லை; குற்றம் சாட்டுகிறார் ஜனாதிபதி

(கொழும்பு)

இலங்கையின் வட பகுதியில் இடம் பெற்ற யுத்தம் தொடர்பில், ஐக்கிய நாடுகள் சபையின் தலைவர் பான் கீ மூனுக்கு விளக்கமளிக்கப்படும் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

எனினும் இலங்கையின் யுத்தக் குற்றச்சாட்டுகள் தொடர்பிலான தருஸ்மன் அறிக்கையை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

நேற்று ஊடக பிரதானிகளுடன் இடம் பெற்ற சந்திப்பு ஒன்றின் போது அவர் இதனை தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கை தொடர்பிலான அறிக்கையில் இலங்கையில் போர்க் குற்றம் இடம்பெற்றதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. எனினும், இறுதி யுத்தத்தின் போது, (20ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய உயர்மட்டக் குழு அடுத்த வாரம் வரும்

(கொழும்பு)

ஐ.நாவின் போர்க்குற்ற அறிக்கை தொடர்பாக அரசுடன் கலந்துரையாடுவதற்கு இந்தியாவின் உயர்நிலை அதிகாரிகள் குழு அடுத்த வாரம் கொழும்பு வரவுள்ளது.

இந்த தகவலை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் நேற்று உறுதி செய்துள்ளார். அலரிமாளிகையில் நடைபெற்ற அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களின் செய்தி ஆசிரியர்களுடனான சந்திப்பின் போதே அவர் இந்தத் (20ஆம் பக்கம் பார்க்க)

## பான் கீ மூனைக் கொல்ல 25 தற்கொலை குண்டுதாரிகள்

### களனியில் காத்திருப்பு—மேர்வின் சில்வா

(கொழும்பு)

பான் கீ மூன் அல்லது வேறு யாரேனும் சர்வதேச சக்திகள் இலங்கையில் தலையிட முயன்றால் அவர்களை கொலை செய்ய இருபத்தைந்து தற்கொலை குண்டுதாரிகள் களனியில் தயாராக இருப்பதாக அமைச்சர் மேர்வின் சில்வா எச்சரித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் நிபுணர் குழு அறிக்கைக்கு எதிராக இரத்தக் கையொப்பங்களைச் சேகரிக்கும் நிகழ்வொன்றை நேற்று கண்டியில் ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போதே அமைச்சர் மேர்வின் சில்வா மேற்கண்ட எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

ஐக்கிய (20ஆம் பக்கம் பார்க்க)

## பல்கலைக்கழக ஆசிரியர்கள் கேட்கும் சம்பள உயர்வை வழங்கமுடியாது

(கொழும்பு)

பல்கலைக்கழக ஆசிரியர்கள் கோரும் 200 சதவீத சம்பள உயர்வு வழங்கப்பட முடியாது எனவும் இக்கோரிக்கை அரசாங்கத்திற்கு எதிரான அரசியல் நோக்கமுடையது எனவும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கூறியுள்ளார்.

பல்கலைக்கழக ஆசிரியர்கள் தமது கோரிக்கை தொடர்பாக கலந்துரையாடுவதற்கு விருப்பம் தெரிவித்தால் அதற்கு ஏற்பாடு செய்ய முடியும் எனவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழக ஆசிரியர்களுக்கு 200 சதவீத சம்பள உயர்வு வழங்கினால் ஏனைய கல்வித்துறை அதிகாரிகளும் இவ்வாறான சம்பள உயர்வு கோருவர். அரசாங்கத்தினால் நிறைவேற்ற முடியாத கோரிக்கையை முன் வைப்பது நியாயமானதல்ல எனவும் ஜனாதிபதி நேற்று தெரிவித்துள்ளார். (ந-5)

## உள்ளே...

ஆசிரியர் புன்னியாமீனின் தரம் 5 புலமைப் பரீட்சை மாதிரி வினாத்தாள்

## நாளை...

சிவல்புரி சிங்காரம் எழுதும் ராகு கேது மாற்ற பலன் (தொடர்)

## மூவின மக்களையும் ஒரு நாட்டின் மக்களாக வாழவைப்பதே எமது நோக்கம்

### அமைச்சர் வாசுதேவ நாணயக்கார யாழில் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தேசிய கீதம் எந்த மொழியில் இசைக்கப்பட்டாலும் அது நாட்டு மக்கள் அனைவருக்கும் சொந்தமானது என தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருங்கிணைப்பு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருங்கிணைப்பு அமைச்சின் ஏற்பாட்டில் அரச கரும மொழிக் கொள்கையும் சம்பந்தப்பட்ட சட்டமும் என்னும் தலைப்பில் நேற்று யாழ்.மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற செயலமர்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

மூன்று இனங்களும் ஒன்றிணைந்து ஒரு நாட்டின் மக்களாக வாழவைக்கவே நாங்கள் (02ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

**Study & Work in UK Canada and India**

Intake Get Register Now Collecting the Application Until June 30th 2011 Start the academic on September



இறுதிச் சந்தர்ப்பம் IELTS தேவையில்லை

Administration & Documentation

என்பன வெற்றிகரமான முறையில் எங்களால் செய்து தரப்படும். ஐரோப்பிய நாடுகளுக்கான வீசா பெறுவதற்கான Sponsorship பிரச்சினையா? உடனடியாக ஏற்பாடு செய்து தரப்படும். (Free Financial Sponsor for UK Visa) இதுவரை உத்தரவாதப் படுத்திய வீஸாக்கள் 40க்கு மேல் கிடைத்துள்ளன.

சகல தொடர்புகளுக்கும்: 0729994777

**வர்த்தகப் பெருமக்களே...**

பெறுமதிமிக்க உங்கள் வியாபார நிறுவனங்களை அரசு உத்தரவாதப் படுத்திய நிறுவனங்களாகப் பதிவு செய்து, அதற்குரிய கௌரவத்தையும் உத்தரவாதத்தையும் நம்பிக்கையும் இலகுவாகப் பதிவு செய்து அடைந்து கொள்ள

தொடர்புகளுக்கு:-0729994777


# இலங்கையின் போர்க் குற்றங்களை ஆராய அனைத்துக் கட்சிக் குழுவை அமைப்போம்

## கனடாவின் முதல் தமிழ் எம்.பி. ராதிகா

(றொறன்ரோ)

இலங்கையில் இடம்பெற்ற இறுதி யுத்தத்தின் போது மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் தொடர்பாக ஆராய்வதற்கு அனைத்துக் கட்சி நாடாளுமன்றக் குழு (APPC-All Party Parliamentary Committee) ஒன்றை அமைப்பதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கைகளை எடுக்கவுள்ளதாக கனடாவின் முதல் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினரான ராதிகா சிற்சபேசன் தெரிவித்துள்ளார்.

ஐ.நாவின் இலங்கைப் போர்க்குற்றங்கள் தொடர்பான அறிக்கையை ஆராய்ந்து அது தொடர்பான பரிந்துரைகளை கனடா அரசாங்கத்திடம் சமர்ப்பித்து தீர்வைப் பெற்றுக் கொள்வதே APPC-யை உருவாக்குவதற்கான நோக்கம் என பி.பி.சி. சிங்கள சேவைக்கான தனது செவ்வியில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்காலத்தில் அமைக்கப்படவுள்ள APPC-யின் இலங்கை விவகாரம் தொடர்பான பரிந்துரைகளுக்கு கனடா அரசாங்கம் மதிப்பளிக்கும் எனத் தான் நம்புவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

எனது பார்வையில் நீதியாகவும் நேர்மையாகவும் சமத்துவத்துடனும் கௌரவத்துடனும் மக்கள் அனைவரும் நடத்தப்பட வேண்டும். இலங்கை விவகாரத்தில் உண்மையான குற்றவாளிகள் யாரென்பதைக் கண்டுபிடிப்பது முக்கியமானது.

தவறிழைப்பவர்கள் இன்னமும் அடையாளங்காணப்படாததால் தற்போதும் தொடர்ச்சியாக தவறுகளைச் செய்துகொண்டிருக்கிறார்கள். அவர்களை மிகவிரைவில் அடையாளங் கண்டு இவ்வாறான தவறுகள் மீண்டும் ஏற்படாதவாறு தடுப்பது மிக முக்கியம்.

இலங்கையில் வாழ்வது பாதுகாப்பற்றது என உணரும் தமிழ்மக்கள் தமது உயிர்களைக் காப்பாற்றிக்கொள்ளும் பொருட்டு எவ்வளவோ கடினமானதும் ஆபத்தானதுமான பிரயாணத்தை எதிர்கொண்டு அடைக்கலம் தேடி கனடா போன்ற நாடுகளில் குடியேறுகிறார்கள் எனக் குறிப்பிட்டுள்ள சிற்சபேசன், இவ்வாறு கனடாவில் தஞ்சம் கோரும் அனைவரும் கௌரவத்துடனனும் சமத்துவத்துடனும் மரியாதையுடனும் நடத்தப்பட வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

கனடாவின் நாடாளுமன்ற உறுப்பினரான ராதிகா யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ந-5)

# மரண அறிவித்தல்

## முருகேசு அருளானந்தம்

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)



தெல்லிப்பழையை பிறப்பிடமாகவும் இருபாலையை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு அருளானந்தம் 10.05.2011அன்று செவ்வாய்க்கிழமை காலமானார். அன்னார் காலஞ்சென்ற முருகேசு-வள்ளிப்பிள்ளையின் அன்பு மகனும், காலஞ்சென்ற மார்க்கண்டு- நாகம்மாவின் அன்பு மருமகனும், லீலாவதி, புஸ்பமலர், ராஜேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், மகேஸ்வரியின் அன்புக் கணவரும், றஜீவன் (யூனியன் அஸ்யூரன்ஸ் A.D.O) அன்புத் தந்தையும், றம்மியா (Bancassurance Commercial Bank Chunnakam) பாசமிகு மாமனாரும், யுகானா, சியானா ஆகியோரது பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் 11.05.2011 நண்பகல்12.00மணி அளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனத்துக்காக இருபாலை கிழக்கு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்

அ.றஜீவன் (மகன்)

(Union Assurance Jaffna)

(4908)

# இலங்கைக்கான ஐ.நாவின் இணைப்பாளர் பதவியேற்பு

ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிட இணைப்பாளராகவும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டத்தின் நிரந்தர பிரதிநிதியாகவும் மனிதாபிமான உதவிகளுக்கான இணைப்பாளராகவும் சுபேனி நந்தி நியமிக்கப்பட்டுள்ளார்.

அவர் தனது உத்தியோகபூர்வ கடிதத்தை நேற்று வெளிவிவகார அமைச்சிடம் கையளித்தார்.

ஐக்கிய நாடுகளின் இலங்கைக்கான வதிவிட பணிப்பாளராக இவரை ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூன் நியமித்துள்ளார்.

இலங்கையிலுள்ள சிரேஷ்ட ஐ.நா. அதிகாரியான இவர் இலங்கையிலுள்ள 20ஐக்கிய நாடுகள் முகவர் நிறுவனங்களுக்கு தலைமை தாங்கவுள்ளார்.

ஐ.நாவில் இருபது வருட அனுபவமுள்ள சுபேனி நந்தி இறுதியாக சீனாவுக்கான ஐ.நா வதிவிட பிரதிநிதியாக கடமையாற்றியதுடன் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டத்தின் பல புதிய திட்டங்களுக்கு தலைமை தாங்கியுமுள்ளார்.

பங்களாதேஷை பிறப்பிடமாக கொண்ட இவர் ஆங்கிலம், ரஷ்ய மற்றும் வங்களா மொழிகளை பேசக்கூடிய பொருளியல் கலாநிதியாவார். (ந-5)

# இந்தியாவின் வெளியுறவு கொள்கை மாறாதவரை

## ஈழத்தமிழருக்கு உதவ முடியாது- திருமாவளவன்

(சென்னை)

இந்திய அரசாங்கத்தின் வெளிவிவகாரக் கொள்கை மாறாத வரையில் ஈழத்தமிழர்களை எவராலும் காப்பாற்ற முடியாது என விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல்.திருமாவளவன் தெரிவித்துள்ளார்.



இராமநாதபுரத்தில் நேற்று முன்னிரவு செய்தியாளர்களுக்கு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இதுகுறித்து செய்தியாளர்களிடம் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இந்திய அரசின் ஈழத்தமிழர் விரோதக் கொள்கையை மாற்றிக் கொள்ள வேண்டும் என முதலமைச்சர் கருணாநிதி நேரிலும், கடிதம் மூலமாகவும் தொடர்ந்து வலியுறுத்தி வந்த போதிலும் மத்திய அரசு இவ்விடயம் குறித்து கவனம் கொள்ளவில்லை.

ஐக்கிய நாடுகள் சபையின் நிபுணர்கள் குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் ஈழத்தமிழர்களுக்கு இழைக்கப்பட்டுள்ள அநீதிகள் குறித்து சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இவ்வறிக்கையில் இடம்பெற்ற தமிழினப் படுகொலைக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை பொதுக் குற்றவாளியாக அறிவித்து விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இலங்கையை இன்று இந்தியா, பாகிஸ்தான், சீனா, ரஷ்யா போன்ற நாடுகள் ஆதரித்து வருவதால் மகிந்த ராஜபக்ஷ அனைவரையும் உதாசீனப்படுத்தி வருகிறார்.

இவ் விவகாரம் குறித்து நடைபெறவுள்ள நாடாளுமன்றக் கூட்டத்தில் கேள்வி எழுப்பப்படும் என்றும் திருமாவளவன் மேலும் தெரிவித்துள்ளார். (ந-5)

## மூவின மக்களை...

செயற்பட்டு வருகின்றோம். அதுவே மகிந்த சிந்தனையுமாகும். நமது நாட்டில் முன்பு நடந்தவற்றை மறந்து அனைவரும் ஒற்றுமையாக வாழ வேண்டும்.

எனது மொழியில் தேசிய கீதத்தைப் பாடும்போது எனது மனம் எவ்வாறு இன்பமடையுமோ அதே போன்ற உங் கள் தமிழ் மொழியில் பாடும்போது உங்கள் மனம் மகிழ்ச்சியடையும்.

சிங்கள மொழியில் தேசிய கீதம் பாடப்படுகிறது. தமிழ் மொழியில் பாடப்படுவதில்லை என குற்றம் சாட்டுகின்றனர். ஆனால் தமிழ், சிங்களம் ஆகிய இரு மொழிகளிலும் தேசிய கீதம் உள்ளதை 1978ஆம் ஆண்டு சட்ட மூலம் குறிப்பிடுகிறது.

உலக நாடுகளை எடுத்துக் கொண்டால் அந்த நாடுகளில் பேசப்படும் அனைத்து மொழிகளிலும் தேசிய கீதம் இருக்கிறதா என்று கேட்டால் இல்லை என்று தான் கூற முடியும்.

குறிப்பாக இந்தியாவை எடுத்துக் கொண்டால் வங்காள மொழியிலேயே தேசிய கீதம் உள்ளது. ஆனால் அந்த மொழி அந்த நாட்டின் தேசிய மொழி அல்ல ஹிந்தி மொழியே அந்நாட்டின் தேசிய மொழி. இதற்காக ஏனைய மொழி பேசுபவர்கள் அரசுடன் முரண்படவில்லை.

அரச திணைக்களங்களுக்கு இரண்டு மொழிகளையும் தெரிந்தவர்களையே நாம் எதிர்பார்க்கின்றோம். மொழி உரிமையை பாதுகாப்பதே எமது அமைச்சின் கொள்கை என தெரிவித்ததோடு எல்லா மக்களையும் ஒன்றிணைத்து ஒரு நாட்டு மக்களாக வாழ வைப்பதே எமது நோக்கம் எனவும் அவர் தெரிவித்தார். (ந-6)


**கடை வாடகைக்கு**

பருத்தித்துறையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட நவீன சந்தைக்கு மேற்குப் புறமாக அமைந்துள்ள புத்தம் புதிய கடைத் தொகுதியில் 2 கடை பூர்த்தியாக்கப்பட்ட நிலையில் வாடகைக்கு கொடுப்பதற்கு தீர்மானித்துள்ளோம். விரும் பியவர்கள் தொடர்பு கொள்ளவும்.

தொலைபேசி இல. :-
0772470590
0778543106

(4903)

**வீடு விற்பனைக்கு**

சோனக தெரு, (புதுப்பள்ளி அருகாமை) நாவாந்துறை, யாழ்ப்பாணத்தில் 1 1/2 பரப்புக் காணியுடன் வீடு விற்பனைக்கு உண்டு

தொடர்புகளுக்கு :-
0776946571
0776568974

(4910)

**தேவி சோதிட நிலையம்**

மனைகளுக்கு காவல் செய்து உங்கள் துன்பங்கள் தீர; கிரக தோஷங்கள் நீக்கி சுகம்பெற; ஜாதகம் எழுத; பலாபலன்கள் அறிய; விவாகப் பொருத்தம் பார்க்க; குணப்படுத்த முடியாத நோய்கள் மாற; 'மலையாள மாந்திரிகம்' கற்றவரைச் சந்தித்து வாழ்கையை வளம் பெறச்செய்யுங்கள்.

தொடர்பு: சா.வசந்தாதேவி
பங்களா லேன், மீசாலை.
(T.P:0775274095)

(4898)

**தவறிவிட்டது**

08.05.2011 ஞாயிறு முற்பகல் முரசுமோட்டைக்கும் பரந்தன் சந்திக்குமிடையில் கறுப்பு நிறப் பிரயாணப் பை வீதியில் தவறிவிட்டது. (பையினுள் உணவுப் பொருட்கள், உடுப்பு, சாவிகள், கைத்தொலைபேசி உள்ளன) கண்டெடுத்தவர்கள் பின்வரும் முகவரியில் ஒப்படைக்கவும் அல்லது தொடர்பு கொள்ளவும்.

திரு.நா.சுப்பிரமணியம் (பூசகர்)
புளியம்பொக்கணைச் சந்தி,
கண்டாவளை.

தொலைபேசி இல. : 0212264015

குறிப்பு :- சன்மானம் வழங்கப்படும்.

(C-3186)

## இன்று ஒரு தகவல்

# தசரதனும் கைகேயியும்

"உங்கள்மீது எனக்கு அளவு கடந்த அன்பு" என்று யாராவது கூறினால் அதை அலட்சியமாக நினைத்து விடக்கூடாது. அது கொஞ்சம் "சீரியஸ்" ஆன விடயம்.

அளவுக்கு மிஞ்சினால் எதுவுமே இடைஞ்சல் தான். அன்பும் அப்படித்தான்.

அதிகமாக அன்பு வைத்தால் அது எப்படிக் கெடுதல் செய்யும்? என்று சந்தேகம் உங்களுக்கு வரலாம்.

தசரதன் கதை என்ன ஆயிற்று?

கைகேயியின் மீது தசரதன் கொண்டிருந்த அளவு கடந்த அன்பு... இராமனைக் காட்டுக்குப் போகுமாறு செய்தது. தசரதன் எப்படிப்பட்ட அரசன்? கம்பராமாயணத்தில் விசுவாமித்திரர் கூறுகிறார்:

"என்னைப் போன்ற முனிவர்களுக்கும் தேவர்களுக்கும் ஏதாவது கஷ்டம் வந்தால், முதலில் முருகனிடம் போவோம். பின்னர் பரமசிவனைப் பார்ப்போம். அதன் பின்னர் திருமாலிடம் செல்வோம். அதன்பின்னர் பிரமன், இந்திரன் ஆகியவர்களைச் சென்று பார்ப்போம். இவர்கள் அனைவராலும் எங்களுக்கு உதவி செய்ய முடியாவிட்டால் அயோத்திக்கு வருவோம். உன்னை விட்டால் எங்களுக்கு வேறு கதி உண்டோ? என்று தசரதனைப் பார்த்து விசுவாமித்திரரே கூறுகிறார்.

அத்தகைய சிறப்பு வாய்ந்த தசரதன் கைகேயியின் காலில் வந்து விழுந்து வணங்குகிறான்! "உன் பாதங்களைத் தொட்டுக் கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன்... இராமனைக் காட்டுக்கு அனுப்பாதே!" என்கிறான்.

தசரதனது இந்த அவல நிலைமைக்கு என்ன காரணம்? அவன் கைகேயி மீது வைத்த அளவு கடந்த அன்பு தான் காரணம். இப்போது சொல்லுங்கள்; அன்பாக இருந்தாலும் அது அளவுக்கு மீறிப் போனால் கெடுதல் செய்யுமா... செய்யாதா? அதுமட்டுமல்ல...

அளவு கடந்த அன்பு நீதிக்கும் நியாயத்திற்கும் புறம்பான காரியங்களையும் செய்யும் நிலைக்கு ஒருவனை ஆளாக்கிவிடும்.

தசரதன் மிகவும் சிறந்த நீதிமான். தர்மத்திற்கு விரோதமாக ஒரு காரியமும் செய்யாதவன். அத்தகையவன் தன் மனைவியைப் பார்த்து என்ன சொல்கிறான் தெரியுமா?

"உனக்காக நான் என்ன செய்யவேண்டும், சொல்... செய்கிறேன், ஒரு குற்றமும் செய்யாத ஒருவனைக் கொல்ல வேண்டுமா? கொல்கிறேன்! மரணதண்டனை விதிக்கப்பட்ட ஒருவனை விடுதலை செய்யச் சொல்கிறாயா... செய்கிறேன்! எந்தப் பிச்சைக்காரனையாவது கோடீஸ்வரனாக்கச் சொல்கிறாயா... ஆக்குகிறேன்! அல்லது கோடீஸ்வரனை பிச்சைக்காரனாக்க வேண்டுமா..." என்று கூறுகிறான்.

நீதிக்கு விரோதமான இந்தப் பாவங்களைச் செய்வதற்கு அப்படிப்பட்ட அரசன் எப்படித் துணிந்தான்! மனைவி பேரில் அளவு கடந்த அன்பு வைத்ததுதான் காரணம்.

"திரிசூலம், வஜ்ராயுதம், வாள் போன்றவற்றால் தாக்கப்பட்டால் கூட லட்சியம் செய்யாத ஒருவன் காமதேவனுடைய மலரம்புகள் தாக்கப்பட்டால்... அதை அவனால் தாக்குப் பிடிக்கமுடியவில்லை... விழுந்து விடுகிறான். காமதேவனுக்கு உள்ள மகிமையே அதுதான் என்கிறார் துளசிதாசர். அதனால்தான் பெரியவர்களெல்லாம் அளவுக்கு மீறிச் செய்யாதே" என்கிறார்கள்.

அப்பா, அம்மா, மனைவி, மக்கள் ஆகிய அனைவரிடமும் அன்பு அவசியம் இருக்க வேண்டும் தான். ஆனால் அந்த அன்பு அறிவுக்குப் புறம்பாக இருந்து விடக்கூடாது. அளவுக்கு மீறியும் இருக்கக்கூடாது. அப்போதுதான் வாழ்க்கை சுகமானதாக இருக்கும். இல்லாவிட்டால் அவஸ்தை தான்!

'அளவுக்கு மீறிய அன்பு' – என்பது புரிகிறது. அது சரி... 'அறிவுக்குப் புறம்பான அன்பு' என்றால் என்ன?

ஒரு தாய்க்கு ஜலதோஷம்...அல்லது ஏதோ ஒரு தொற்று நோய் இருக்கிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். அந்த அம்மாவுக்குக் குழந்தை மீது அளவுகடந்த அன்பு. தனக்கு நோய் இருக்கிறது... அது அடுத்தவர்களைத் தொற்றக்கூடியது என்று தெரிந்திருந்தும்... அன்பைக் காட்டுவதற்காக அந்தக் குழந்தைக்கு முத்தம் கொடுக்கிறேன் என்று தூக்கி வைத்துக் கொண்டு முத்தமிட ஆரம்பித்தால் அது நன்றாக இருக்குமா? இதைத்தான் 'அறிவுக்குப் புறம்பான அன்பு' என்று பெரியவர்கள் கூறுகிறார்கள்.

விலங்குகளிடம் அன்பாக இருக்க வேண்டும் என்று சொல்கிறோம். அதற்காக புலிக்கு முத்தம் கொடுக்க முடியுமா? அப்படிக் கொடுத்தால் அது அறிவுக்குப் புறம்பான அன்பு.

அதனால் அன்புகூட 'அறிவுபூர்வமாக' இருக்க வேண்டும்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# தமிழர் வாழும் பகுதிகளில் தமிழிலேயே தேசிய கீதம் இசைக்கப்பட வேண்டும்

## அமைச்சர் வாசுதேவவிடம் சந்திரகுமார் எம்.பி. வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் மாவட்டங்களில் தேசிய கீதம் தமிழ்மொழியிலேயே இசைக்கப்பட வேண்டும் என தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவிடம் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளார்.

தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சின் ஏற்பாட்டில் அரச கரும மொழிகள் கொள்கையை செயற்படுத்தலுக்கான செயலமர்வும் கலந்துரையாடலும் நேற்று யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இதன் போதே அவர் மேற்கண்டவாறு தமது வேண்டுகோளைவிடுத்தார். இவ்விடயம் தொடர்பாக அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேசியகீதம்எந்தமொழியில்இசைக்கப்படவேண்டும் என்ற இறுதித் தீர்மானத்துக்கு இன்னும் அரசாங்கம் வரவில்லை. இருப்பினும் சிங்கள மொழியில் தான் தேசிய கீதம் பெரும்பான்மையாக இசைக்கப்பட்டுவருகிறது.

இந்த நடவடிக்கை தமிழர் மத்தியில் பாரிய அழுத்தத்தை ஏற்படுத்தியுள்ளதோடுஇவ்விடயம்தொடர்பாக மாறுபட்ட கருத்துக்கள் வெளிவருவதனாலும் மக்கள் குழப்பமடைந்துள்ளனர்.

சிங்கள மொழியில் மட்டும் தான் தேசியகீதம் இசைக்கப்பட வேண்டும் என அரசாங்கம் தீர்மானம் எடுக்காத நிலையில் இவ்வாறு வெளிவரும் தவறான தகவல்கள் மூலம் மக்கள் குழப்பமடைகின்றனர்.

மேலும் தமிழ் மாவட்டங்களில் நடைபெறும் விழாக்களின் போது தேசியகீதம் தமிழ் மொழியிலேயே இசைக்கப்பட வேண்டும் என்ற தீர்மானத்தையும் அரசாங்கம் கொண்டுவரவேண்டும் எனவும் தெரிவித்தார்.

இதேவேளை தமிழர் பகுதிகளில் உள்ளபொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகள் சிங்கள மொழியிலேயே பதிவு செய்யப்படுகின்றன.

இது தொடர்பாக பாராளுமன்றத்திலும் கேள்வி எழுப்பப்பட்டுள்ளநிலையில்பொலிஸ் உயர்அதிகாரிகள்தமிழ்பொலிஸார்தற்போதுதான்பொலிஸ் நிலையங்களுக்கு உள்வாங்கப்பட்டு வருகின்றனர் .வருங்காலத்தில்அவர்களின் பணி அதிகளவில்இருக்கும் என தெரிவிக்கின்றனர்.

ஆனால் தமிழ் பொலிஸ் உத்தியோகத்தர்களைக் கொண்டு முறைப்பாடுகளை பதவி செய்யும் போது அது முறைப்பாடு கொடுக்க வருபவர்களுக்கு சுலபமாக இருக்கும்.

மேலும் சுற்று நிருபங்கள் சிங்கள மொழியில் அனுப்பப்படுவதால் மொழிமாற்றம் செய்வதில் பிரச்சினை ஏற்படுகின்றது என அவர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ–6)

## பாடசாலை மட்ட எழுத்துப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

பாடசாலை மட்ட உங்களுக்குத் தெரியுமா?(DO YOU KNOW) எழுத்துப் பரீட்சையை நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை 10 ஆம் தர மாணவர்களுக்கு நடாத்தி விடைத்தாள்களைத் திருத்தி உயர்புள்ளி பெறும் 5 மாணவர்களின் பெயர் விபரங்களை யாழ்ப்பாண கல்விவலய அபிவிருத்திப் பிரிவுக்கு அனுப்பி வைக்குமாறு சகல அதிபர்களையும் யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். அத்துடன் வினாப்பத்திரங்களை நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு யாழ்.கல்வி வலய அபிவிருத்திப் பிரிவில் பெற்றுக் கொள்ளுமாறும் அவர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ–2)

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 120 | 80 |
| உருளைக்கிழங்கு | 75 | 80 | 70 |
| பச்சைமிளகாய் | 50 | 80 | 60 |
| தக்காளி | 70 | 100 | 90 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 50 | 40 |
| கோவா | 50 | 80 | 70 |
| கரட் | 70 | 100 | 80 |
| பூசணி | 25 | 40 | 30 |
| புடோல் | 30 | 40 | 30 |
| வாழைக்காய் | 20 | 30 | 40 |
| சின்ன வெங்காயம் | 140 | 140 | 130 |
| பெரிய வெங்காயம் | 55 | 50 | 60 |
| பாகற்காய் | 100 | 120 | 100 |
| வெண்டிக்காய் | 40 | 40 | 30 |
| கருணைக் கிழங்கு | -- | 90 | 80 |
| பயற்றங்காய் | 40 | 60 | 60 |
| லீக்ஸ் | 80 | 80 | 80 |
| பீற்றூட் | -- | 60 | 70 |
| கறிமிளகாய் | -- | 120 | 90 |
| முருங்கைக்காய் | 400-450 | 350 | 300 |
| போஞ்சி | -- | 120 | 90 |
| கத்தரிதம்புள்ள | -- | 60 | 40 |
| கீரை – 1 பிடி | 10-15 | 30 | 25 |
| தேசிக்காய் | 100 | 120 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 30-50 | 50 | 60 |

## இராசி பலன்

*11.05.2011*
*சித்திரை 28 , புதன்கிழமை*
*சூரிய உதயம் காலை 5.55 மணிக்கு*
*அட்டமி முற்பகல் 9.20 மணி வரை*
*மகம் பின்னிரவு 4.25 மணி வரை*
*இராகுகாலம் 11.54-1.24 மணி வரை*
*சுபநேரம் 4.24-5.54 மணிவரை*
*அட்டமி- நவமி*

**மேடம்** சுயமுயற்சியின் மூலம் சுகம் காணும் நாள், பிள்ளைகள் குடும்பப் பொறுப்புணர்ந்து நடந்து கொள்வர், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ள அழைப்புக்கள் வந்து சேரலாம்.

**இடபம்** வாகன யோகத்தால் வளம் காணும் நாள், பணிபுரியும் இடத்தில் பேரும் புகழும் கூடும், தொலைபேசி வழியில் ஆச்சரியமான செய்திகள் வந்து சேரலாம்.

**மிதுனம்** குடும்பப் பொறுப்புணர்ந்து செயற்பட வேண்டிய நாள், பகைகளைச் சமாளித்து வளம் காணும் நாள், சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும்.

**கடகம்** நிகழ்காலத் தேவைகளை நிறைவு செய்து கொள்ள முன்வருவீர்கள், தொலைதூரத்திலிருந்து நல்ல செய்திகள் வந்து சேரலாம், வாக்கு மேன்மையுண்டு.

**சிங்கம்** குடும்பப் பொறுப்புக்களும் சுமைகளும் கூடலாம், மனக்குழப்பம் அகல மாற்றினத்தவர்கள் உறுதுணைபுரிவர், திடீர் பயணங்கள் ஏற்படலாம், தேவையற்ற கற்பனைகள் குடிகொள்ளும்.

**கன்னி** அலைச்சல்கள் அதிகரித்தாலும் சிறு ஆதாயமும் பெறுவீர்கள், சயனசுகக் குறைவுண்டு, நண்பர்கள் தொடர்பால் திடீர் விரயங்களும் ஏற்படலாம்.

**துலாம்** செல்வநிலை உயரும் நாள், பயணங்கள் செல்ல போட்ட திட்டங்கள் நிறைவேறலாம், செய்தொழிலில் முன்னேற்றம் காண்பீர்கள், உறவினர்களுடன் கலந்துரையாடி மகிழ்வீர்கள்.

**விருச்சிகம்** தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், விருந்தினர் வருகையுண்டு, பாதியில் நின்ற பணியை மீண்டும் தொடர்வீர்கள், பொது நல ஈடுபாடு அதிகரிக்கும்.

**தனுசு** வீண்பழிகள் அகல விரைந்து நடவடிக்கை எடுப்பீர்கள், மருத்துவச் செலவுகள் குறைந்து மன நிம்மதியைக் கொடுக்கும், தடைப்பட்ட காரியங்கள் தானாக நடைபெறலாம்.

**மகரம்** உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம், தொழிலில் கவனத்துடன் செயற்படுவது நல்லது, பிரயாணத்தில் பொருட்களில் கவனம் தேவை.

**கும்பம்** இனிய அனுபவங்கள் ஏற்படும் நாள், கணவன் - மனைவியரிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும், புதிய தொழில் வாய்ப்புக்கள் தேடி வரலாம், கௌரவமான நாள்.

**மீனம்** நிர்வாகத் திறமை பளிச்சிடும் நாள், நினைத்த காரியத்தை நினைத்த மாத்திரத்திலே செய்து முடிப்பீர்கள், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், சுவாரஸ்யமான நாள்.

வளவன்

# தொலைபேசியில் தொல்லை பொலிஸூக்கு விளக்கமறியல்

(விசுவமடு)

முறைப்பாடு கொடுக்கச் சென்ற பெண்ணுக்கு தொல்லை கொடுத்துவந்த பொலிஸாரை விளக்கமறிலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது.

குறித்த சம்பவம் விசுவமடுப் பகுதியில் நேற்று இடம்பெற்றுள்ளது.

விசுவமடுப்பொலிஸ்நிலையத்திற்கு முறைப்பாடு செய்யச் சென்ற பெண்ணின் தொலைபேசி இலக்கத்தைப் பதிவுக்காகப் பெற்ற பொலிஸார் ஒருவர் இரவு வேளைகளில் குறித்த பெண்ணுக்கு தொலைபேசியில் தொல்லை கொடுத்து வந்துள்ளார்.

இது தொடர்பில் பிரஸ்தாபப் பெண்மணி விசுவமடுப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார்.

இதனையடுத்து சம்பந்தப்பட்ட பொலிஸாரைக் கைதுசெய்து நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த நீதவான் குறித்த நபரை எதிர்வரும் 24ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (ந-6,24)

# காலாவதியான பொருட்கள் விற்பனை செய்த வர்த்தக நிலையங்களுக்கு அபராதம் விதிப்பு

(மல்லாகம்)

காலாவதியான பொருட்களை விற்பனை செய்த வர்த்தக நிலையங்களுக்கு தலா 5 ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டப் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையினால் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போதே மேற்படி குற்றம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

வடலியடைப்பு, பண்டத்தரிப்புப் போன்ற பகுதிகளிலேயே இந்த சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இதன்போது குறித்த இரண்டு வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்களுக்கு எதிராக மல்லாகம் நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டது.

வழக்கை விசாரித்த மல்லாகம் மாவட்ட நீதிபதி அ.அரியநாயகம் ஒவ்வொருவருக்கும் தலா 5ஆயிரம் ரூபாய் அபராதம் விதித்துத் தீர்ப்பளித்தார். (ந-6)

# சாரதி அனுமதிப்பத்திரத்திற்கான கிளிநொச்சி விண்ணப்பதாரிகளுக்கு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட செயலகம் ஊடாக சாரதி அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொள்வதற்காக விண்ணபித்தவர்களில் சுட்டிலக்கம் 3200 வரையிலான பரீட்சார்த்திகளுக்கான எழுத்துப் பரீட்சை நாளை மறுதினம் (13.05. 2011) வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு கரைச்சி உதவி அரசாங்க அதிபர் செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறும். அத்துடன் 2011 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 02 ஆம் திகதியும் அதற்கு முற்பட்ட திகதிகளில் இடம்பெற்ற எழுத்துப் பரீட்சைகளில் சித்தியடைந்தவர்களுக்கான ஓட்டுநர் பரீட்சார்த்தப் பரீட்சை (Trial Exam) நாளை வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் இடம்பெறவுள்ளது.

எனவே உரிய பரீட்சார்த்திகள் தமக்கு வழங்கப்பட்ட பற்றுச் சீட்டுக்களுடன் உரிய நேரத்திற்கு சமுகம் தருமாறு கிளிநொச்சி அரச அதிபர் திருமதி றூ.கேதீஸ்வரன் கேட்டுள்ளார். (ந)

# ஹலோ ரஸ்ற் பணியாளர் படுகாயம்

(ஆனைக்கோட்டை)

நாகர்கோவில் பகுதியில் மிதிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டிருந்த ஹலோ ரஸ்ற் தன்னார்வ தொண்டு நிறுவன ஊழியர் ஒருவர் மிதிவெடி வெடித்ததில் முகத்தில் காயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவத்தில் மூளாயைச் சேர்ந்த எஸ்.நிஷாந்தன் என்பவரே காயமடைந்தவராவார். (ந-5,26)

# இடமாற்றம் பெற்ற ஆசிரியர்கள் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் இருந்தும் வவுனியா மாவட்டத்தில் இருந்தும் கிளிநொச்சி, முல்லைத்தீவு, துணுக்காய், மடு ஆகிய வலயங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டு மேன்முறையீடுகள் நிராகரிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கான ஒன்றுகூடல் இன்று பிற்பகல் 4.00 மணிக்கு யாழ்ப்பாணம் இந்து ஆரம்பப் பாடசாலையில் நடைபெறவுள்ளதால் மேன் முறையீடு செய்த பிரதி, முதல் நியமனக் கடிதம், மேன் முறையீட்டிற்கான காரணம் என்பவற்றுடன் சமுகமளிக்குமாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் அறிவித்துள்ளார். (ந)

# இலங்கை வங்கியின் பரிசு வழங்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

இலங்கை வங்கியால் அறிமுகப்படுத்தப்பட்ட 18+ Super Dream Promotion திட்டத்தின் கீழ் தேசிய ரீதியில் குலுக்கல் முறையில் தெரிவுசெய்யப்பட்ட வடமாகாண அதிர்ஷ்ட சாலிகளுக்கு பரிசு வழங்கும் நிகழ்வு நாளை 12ஆம் திகதி முற்பகல் 11.00 மணிக்கு இலங்கை வங்கியின் வடபிராந்திய யாழ்ப்பாணப் பிரதேச காரியாலய கேட்போர் கூடத்தில் இடம்பெறும். (ந)

# மரண அறிவித்தல்

## இளையதம்பி மகாலிங்கம்

(உரிமையாளர் இளையதம்பி அன் சன்ஸ் கல்லுடைக்கும் ஆலை)



புன்னாலைக்கட்டுவன் தெற்கு, சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி மகாலிங்கம் 10.05.2011 (நேற்று) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இளையதம்பி மற்றும் தங்கம்மா தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வனும், காலஞ்சென்றவர்களான தம்பயா, கதிராசி தம்பதியினரின் அருமை மருமகனும் ருக்குமணியின் அன்புக் கணவரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக் கிரிகைகள் 11.05.2011 (இன்று) பிற்பகல் 1.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று விலங்கன் இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.


இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புன்னாலைக்கட்டுவன் தெற்கு,
சுன்னாகம்.
0212240866

தகவல்:
குடும்பத்தினர்.

(4409)





யாழ்ப்பாணத்தில் அக்ஷய திருதியை கொடுக்கல்-வாங்கல் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இதில் யாழ்.குடாநாட்டு நகையகங்கள் தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டிருப்பதையும் பொது மக்கள் நகையினை வாங்குவதையும் படங்களில் காணலாம்.

# கைதிகளுக்கான வீட்டு விடுமுறை தொடர்பில் மீண்டும் கவனம்

சிறைக் கைதிகளுக்கான வீட்டு விடுமுறை முறைமை தொடர்பில் மீண்டும் கவனம் செலுத்த தீர்மானித்துள்ளதாக புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

சிறைக்கைதிகளை அனுமதிப் பத்திரத்தின் ஊடாக விடுதலை செய்யும் முறைமையில் திருத்தம் மேற்கொள்வதற்கு அமைச்சர் சந்திரசிறி கஜதீரவின் ஆலோசனைக்கு அமைய விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.தற்போது நடைமுறையிலுள்ள சிறைக்கைதிகளுக்கான வீட்டு விடுமுறை முறைமையில் மாற்றம் மேற்கொள்ளப்பட வேண்டுமென யோசனை முன்வைக்கப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் எ. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

சிறைக்கைதி ஒருவர் தண்டனை காலம் நிறைவுறுவதற்கு முன்னர் விடுதலை செய்யப்படுவாராயின் சமூகத்திற்கு அது நன்மையளிக்காது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன் கைதிகளுக்கு வீட்டு விடுமுறை வழங்கப்பட்டு அதனை மூன்று தடவைகள் உரிய முறையில் அவர்கள் பயன்படுத்தி ஒழுக்கமாக செயற்படுவார்களாயின் சிறைக்கைதிகள் அனுமதிப்பத்திரத்திற்கு அமைய விடுதலை செய்யப்படுவார்கள் என அமைச்சின் செயலாளர் எ. திஸாநாயக்க குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# அனுமதிப் பத்திரமின்றி மதுபானம் விற்பனை செய்தவருக்கு 5 ஆயிரம் ரூபா அபராதம்

அனுமதிப்பத்திரமின்றி மதுபானம் விற்பனை செய்த நபருக்கு 5 ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.யாழ்.நகரப் பகுதியில் அரசாங் கத்தால் விற்பனைக்கு அனுமதிக் கப்பட்ட மதுபானத்தைஅனுமதிப்பத்திரமின்றிவிற்பனை செய்த நபரை யாழ்ப்பாண பொலிஸார் நேற்று கைதுசெய்தனர்.

கைது செய்யப்பட்ட நபரை யாழ். நீதிவான் நீதிமன்றில் பொலிஸார் ஆஜர்படுத்தினர். குறித்தவழக்கைவிசாரித்த நீதிவான் நீதிமன்ற பதில் நீதிபதி மு.திருநாவுக்கரசு குற்றவாளிக்கு 5 ஆயிரம் ரூபா தண்டப் பணம் விதித்துத் தீர்ப்பளித்தார். (ஸ்ரீ-6)

# வவுனியா மாவட்ட பாடசாலைகளில் சிறுவர் பாதுகாப்பு குழுக்கள்

பாடசாலை மட்டத்தில் சிறுவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், அவர்களுடைய வரவு, இடை விலகல் ,சிறுவர் பாதுகாப்பு போன்ற விடயங்களை கண்காணிப்பதற்காக வவுனியா மாவட்ட பாடசாலை மட்டத்தில் சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை மாவட்ட இணைப்பாளர் ரி.செல்வகுமார் தெரிவித்தார்.

வவுனியா வடக்கு கல்வி வலயத்தில் நெடுங்கேணி, கனகராயன் குளம் ,புளியங்குளம் போன்ற பாடசாலைகளில் இது தொடர்பான முக்கிய கலந்துரையாடல்கள் நடைபெற்றதாகவும் அவர் கூறினார். மாணவர்களுடைய நலன்களைப் பேணும் வகையில் இந்தக் குழுக்கள் அமைக்கப்படுகின்றன. (ஸ்ரீ-2)

# கிராமப்புறங்களில் மதுபாவனை அதிகரிப்பு

(கொழும்பு)

கிராமப் புறங்களில் போதைப் பொருள் பாவனையுடன் மதுபாவனையும் மிக அதிகரித்துள்ளதாகவும் மலையக தோட்டப் புற மக்கள் பெண்கள் மத்தியிலும் இந்நிலை காணப்படுவதாக நீர்ப்பாசனத்துறை அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா கூறியுள்ளார்.

பதுளையில் நடைபெற்ற கருத்தரங்கொன்றில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மதுபாவனை ஒரு சமூக பிரச்சினையாகியுள்ளதர்கவும் தான் பிரதிநிதித்துவப்படுத்தும் மகாவலி வலயத்தில் பெண்கள் உட்பட பெரும் எண்ணிக்கையிலானோர் மதுவுக்கு அடிமையாகி உள்ளதாகவும் அவர் கூறினார்.

வறுமைக்கு மதுபாவனை பிரதான காரணங்களில் ஒன்றாக இருப்பது உலக வங்கியினால் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றில் கண்டறியப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# மரண அறிவித்தல்

## திருமதி நாகரத்தினம் நடராசா



அத்தியடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகரத்தினம் நடராசா 08.05.2011 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நடராசாவின் அன்பு மனைவியும், பத்மாவதி (கனடா), பத்மினி (பிரான்ஸ்), ரவீந்திரன் (லண்டன்), லலிதா, மீரா (பிரான்ஸ்), சுகுமார் (ஜேர்மனி), சந்திரா (கனடா) ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்ற சற்குணராசா மற்றும் சண்முகராசா (பிரான்ஸ்), தர்மினி (லண்டன்), ஞானசேகரம் (C.T.B.), பாலேஸ்வரன் (பிரான்ஸ்), மாலா (ஜேர்மனி), வசந்தகுமார் (கனடா) ஆகியோரின் மாமியும், காலஞ்சென்றவர்களான பாக்கியம், ராசம்மா, ராசையா, நடராசா மற்றும் மகேஸ்வரி (மலேசியா) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், ராம்மோகன் (பிரான்ஸ்), ஹரிகரன், விஜயராணி (அவுஸ்திரேலியா), மேகலா (அவுஸ்திரேலியா), ஜானகி (கனடா), நிர்மலா (இந்தியா), நிஷாந்தி (பிரான்ஸ்), பிரியாந்தி (பிரான்ஸ்), கமல் (பிரான்ஸ்), அர்ச்சனா (லண்டன்), திலீப் (லண்டன்), சஞ்சீவன் (லண்டன்), விதுரா, சறா (பிரான்ஸ்), பமிலா (பிரான்ஸ்), மார்க் (பிரான்ஸ்), ரதீஸ் (ஜேர்மனி), ரிதூசன் (ஜேர்மனி), ருக்சன் (ஜேர்மனி), அபினா (கனடா), ராகவி (கனடா) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், அபிராமி, சௌமியா, பிரியங்கா, பிருந்தன், ரம்மியா, கோபி, மயூரி, திவ்விய பாரதி, சாய்சுரேகா ஆகியோரின் பாசமிகு பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.104/5, அத்தியடி
குறுக்குவீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
சு.ஞானசேகரம்
(மருமகன்-C.T.B)
தொ.பே: 021 222 5926

(4905)

# விரைவுபடுத்தல் தத்துவமும், இரட்டைத் தன்மைப் பிரயோகமும்

ஒரு ஒப்பந்தத்தின் வலிதான இரு கூறுகளாக இருக்க வேண்டியவை வலிதான முனைவும், ஏற்பும் ஆகும். வலிதான முனைவும் ஏற்பும் ஒன்றுடன் ஒன்று சந்தித்துவிட்டால் இரு மனங்களின் இணக்கமான சந்திப்பின் அடிப்படையில் உருவாகுவது ஒப்பந்தமாகும். சட்ட அறிஞர் *ANSON* கூற்றுப்படி எரிந்து கொண்டிருக்கும் தீக்குச்சியை வெடிமருந்து வரிசைக்குவைத்தால் அதனை எப்படி மீட்டெடுக்க முடியாதோ அதேபோன்று முனைவும் ஏற்பும் சந்தித்து விடுமானால் பின்பு முனைவையோ, ஏற்பினையோ ஏக்காரணம் கொண்டும் மீட்டெடுக்க முடியாது.

*ADAMS-VS-LINDESELL (1818)* என்னும் வழக்கில் ஏற்பு முற்றுப்பெறுவதில் ஏற்பினை துரிதப்படுத்துவது "விரைவுபடுத்தல் தத்துவமே" என்பது முதன்முதலாக அறிமுகப்படுத்தப்பட்டது. இத்தத்துவத்தின்படி ஏற்புக் கடிதம் அஞ்சலகப் பெட்டியில் இட்டுவிட்டால் விரைவுபடுத்தல் தத்துவத்தின் துரித செயற்பாட்டினால் உடன் ஒப்பந்தம் உருவாகிவிடும். பின்பு முனைவை வாபஸ் பெறமுடியாது.

இன்றைய வியாபார உலகில் A என்பவர் தனது பொருளை B என்பவருக்கு விற்பதற்கான முனைவை கடிதமூலம் செய்கிறார். B அம் முனைவினை ஏற்று ஏற்புக்கடிதத்தை உடனே அஞ்சலகப் பெட்டியில் சேர்த்துவிடுகிறார். உடனே ஒப்பந்தம் உருவாகி விடுகின்றது.

ஏற்பு முற்றுப் பெற்றதும் பொருளின் விலை சந்தையில் எதிர்பாராத விதமாக திடீரென உயர்ந்து விடுகிறது. எனவே விரைவுபடுத்தல் தத்துவம் இல்லையெனில் முனைவை செய்தவர் உடனடியாக தனது பொருளை சந்தைப்படுத்தலுக்காக செய்த முனைவை, ஏற்பு முடிந்ததன் பின்பும் வாபஸ் பெற்று விடுவார். எனவே இச் சந்தர்ப்பத்தில் விரைவுபடுத்தல் தத்துவம் ஏற்பினைச் செய்தவருக்கு காப்பரணாக இருப்பதை இங்கு காணலாம்.


மறுவகையாக பார்க்கும் போது A என்பவரால் B என்பவருக்கு முனைவு செய்யப்பட்டபின் B அம் முனைவினை ஏற்று ஏற்புக் கடிதத்தினை அஞ்சலகப் பெட்டியில் சேர்த்து விட்டதும் ஏற்பு முற்றுப் பெற்று விட்டது. ஏற்பு முற்றுப் பெற்றதும் உடனடியாக சந்தையிலே குறித்த பொருளின் விலை எதிர்பாராத விதமாக வீழ்ச்சியடைந்துவிடுகிறது. இதனால் ஏற்பு செய்தவர் விரைவுபடுத்தல் தத்துவம் இல்லையெனில் தனது ஏற்பினை வாபஸ் பெற்றுவிடுவார். இச் சந்தர்ப்பத்தில் விரைவுபடுத்தல் தத்துவம் முனைவை அழியவிடாமல் முனைவிற்கு காப்பரணாக இங்கு இருப்பதனைக் காணக்கூடியதாக இருக்கிறது. எனவே தொகுத்துப்பார்க்குமிடத்து பொருளின் விலை ஏற்றத்தினால் ஏற்புக்கும் விலை வீழ்ச்சியினால் முனைவுக்கும் ஒரே "விரைவுபடுத்தல் தத்துவம்" காப்பரணாக இருக்கும் இரண்டைத் தன்மைப் பிரயோகமானது.

*ADAMS-VS-LINDESELL (1818)* எனும் வழக்கின் தீர்ப்பிலிருந்து கிட்டத்தட்ட இருநூறு (200) வருடங்களாக இன்றுவரை ஒளிவீசிக் கொண்டிருப்பதனைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

மறைந்த தந்தை
எஸ்.ஜே.வி.செல்வநாயகத்திற்கு
என் சமர்ப்பணம்.

இ.சோதிநாதன்,
பகுதிநேர சட்டவிரிவுரையாளர்,
தொழில்நுட்பக் கல்லூரி,
யாழ்ப்பாணம். 10.05.2011

(4906)



அரச கரும மொழிக்கொள்கையும் தொடர்பான சட்டமும் எனும் தலைப்பின் கீழ் நேற்று யாழ்.மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் செயலமர்வு ஒன்று இடம்பெற்றது. இதில் தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருங்கிணைப்பு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார, யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் ஆகியோர் உரையாற்றுவதனையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

## கழகங்களுக்கிடையிலான கிரிக்கெட் போட்டி

(கரவெட்டி)

மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகத்தின் வருடாந்த விளையாட்டு விழாவில் வடமராட்சியில் அழைக்கப்பட்ட 40 கழகங்களுக்கிடையிலான கிரிக்கெட் போட்டியில் நாளை வியாழக்கிழமை பி.ப 3.30 மணிக்கு வல்வெட்டி கழுகு விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கம்பர்மலை கம்பன் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது.

நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு திக்கம் இளைஞர் விளையாட்டு கழகத்தை எதிர்த்து பருத்தித்துறை வீனஸ் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-3-24)

## பெண்ணொருவரின் தாலிக்கொடி இனந்தெரியாதோரால் அபகரிப்பு

(கரவெட்டி)

வடமராட்சிப் பகுதியில் வீதியால் நடந்து சென்றுகொண்டிருந்த குடும்பப் பெண் ஒருவரின் ஏழரைப் பவுண் தாலிக்கொடி இனந்தெரியாதோரால் அபகரிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு இடம்பெற்றுள்ளது. சம்பவதினம் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் பணிபுரிந்துவிட்டு வீடு திரும்பிய வைத்தியசாலை பெண் ஊழியரின் தாலிக்கொடி மோட்டார் சைக்கிளில் வந்த நபர்களினால் அபகரிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இச்சம்பவம் தொடர்பாக வடமராட்சி பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஸ்ரீ-3-24)

## ஆன்மீக நிகழ்வு

(மருதங்கேணி)

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய சூழலில் அமைத்திருக்கும் பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் பிரதி ஞாயிறு தோறும் நடைபெற்றுவரும் ஆன்மீக நிகழ்வுத் தொடரில் எதிர்வரும் 15 ஆம் திகதி பகல் 10 மணிபூசை முடிவுற்றதும் கண்ணாபிரான் கதை சொல்கிறான் எனும் பொருளில் ஆசிரியர் இரா.சண்முகசுந்தரம் உரையாற்றவுள்ளார். (ஸ்ரீ-3-35)

## அனுமதிப்பத்திரமின்றி மணல் ஏற்றி சென்ற நபருக்கு ரூ.51 ஆயிரம் அபராதம்

(கரவெட்டி)

கொடிகாமப் பிரதேசத்தில் அனுமதிப்பத்திரமின்றி வாகனத்தில் மண் ஏற்றிச் சென்ற நபருக்கு 51 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து சாவகச்சேரி நீதிமன்றம் நேற்று தீர்ப்பளித்துள்ளது.

இச்சம்பவ தினமன்று குறித்த சாரதி அனுமதிப்பத்திரமின்றி மண் ஏற்றி வந்துள்ளார்.

பொலிஸார் வாகனத்தை இடைமறித்த போது அவர் வாகனத்தை நிறுத்தாமல் சென்றுள்ளார். பொலிஸார் வாகனத்தைப் பின் தொடர்ந்து சென்று சாரதியைக் கைது செய்துள்ளனர்.

நேற்றைய தினம் சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றில் சாரதியைக் கொடிகாமப் பொலிஸார் நீதிமன்றில் ஆஜர்படுத்தினர்.

வழக்கை விசாரித்த நீதிபதி குறித்த நபர் மன்றில் இரு குற்றத்தையும் ஒப்புக்கொண்டமையால் அனுமதிப்பத்திரமின்றி மண் ஏற்றியமைக்கு 50 ஆயிரம் ரூபாவும் வாகனத்தை நிறுத்தாமல் சென்ற குற்றத்திற்கு ஆயிரம் ரூபாவும் செலுத்தத் தவறின் 5 மாதகால சாதாரண சிறைத்தண்டனையும் அனுபவிக்க வேண்டுமெனத் தீர்ப்பளித்தார். (ஸ்ரீ-3-24-29)

## விபத்தில் முதியவர் படுகாயம்

(கரவெட்டி)

மோட்டார் சைக்கிள், துவிச்சக்கர வண்டி மோதிய விபத்தில் வயோதிபர் ஒருவர் படுகாயமடைந்து சிகிச்சைக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பருத்தித்துறை ஓடக்கரை வீதிப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

சம்பவதினம் துவிச்சக்கர வண்டியில் பயணித்த வயோதிபரை மோட்டார் சைக்கிளில் வந்த நபர் மோதிவிட்டுத் தப்பிச் சென்றுள்ளார்.

இச்சம்பவத்தில் பருத்தித்துறை ஓடக்கரை வீதிப் பகுதியைச் சேர்ந்த பொன்னன்-நவரத்தினம் (வயது 55) என்ற குடும்பஸ்தரே படுகாயமடைந்து சிகிச்சை பெற்று வருகிறார். (ஸ்ரீ-3-24)

## வடமராட்சி வலய ஆங்கில தினப் போட்டிகள்

(அல்வாய்)

வடமராட்சி வலய ஆங்கில தினப் போட்டிகள் எதிர்வரும் 14ஆம் திகதி சனிக்கிழமை 9 மணிக்கு வட இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் தரம் 12இற்கான வாய்மொழிப் போட்டிகளும் ஏனைய மாணவர்களுக்கான உரையாடல் போட்டிகளும் நடைபெறவுள்ளதென வடமராட்சி வலய ஆங்கிலப் பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.சுந்தரமூர்த்தி அறிவித்துள்ளார். (ஸ்ரீ-3-19)

## தென்மராட்சி பாடசாலைகளுக்கிடையிலான தமிழ்த் தினப் போட்டிகள்

(சாவகச்சேரி)

தென்மராட்சி வலயப் பாடசாலைகளிடையே நடைபெறும் தமிழ்த்தினப் போட்டிகள் 2ஆம், 3ஆம் கட்டப் போட்டிகள் எதிர்வரும் 14 ஆம் திகதி சனிக்கிழயையும் மறுநாள் 15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் காலை 8 மணி தொடக்கம் பி.ப 4 மணி வரை நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 14ஆம் திகதி சனிக்கிழமை வாசிப்பு, கதைகூறல், பேச்சு, பாவோதல், இசையும் அசைவும், தனி இசை, குழுஇசை ஆகிய போட்டிகள் நடைபெறவுள்ளன. மறுநாள் ஞாயிற்றுக்கிழமை தனி நடனம், குழு நடனம், நாட்டிய நாடகம், நாட்டார் பாடல், இலக்கிய நாடகம், வில்லுப்பாட்டு, விவாதம், தமிழறிவு, வினா விடை ஆகிய போட்டிகள் நடைபெறவுள்ளன.

போட்டியில் கலந்து கொள்ளும் மாணவர்களை உரிய நேரத்திற்கு சமுகமளிக்குமாறு தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-3-29)

## தொடர் சொற்பொழிவு

தொண்டைமானாறு செல்வச் சந்நிதி ஆலயச் சூழலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரமத்தில் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் நடைபெற்றுவரும் ஆன்மீக நிகழ்வுத் தொடரில் எதிர்வரும் 13ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப 10.30 மணியளவில் தேவி பாகவதம் எனும் விடயம் பற்றி சிரேஷ்ட விரிவுரையாளர் அ.குமாரவேல் தொடர் சொற்பொழிவாற்றவுள்ளார். (ஸ்ரீ-3-35)




## மணவாளக்கோல உற்சவம்

(மருதங்கேணி)

தென்புலோலி புற்றளை சித்திவிநாயகர் ஆலயத்தின் மணவாளக்கோல உற்சவம் எதிர்வரும் 14ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது. அன்று காலை 6.30 மணிக்கு விநாயகப் பெருமானுக்கு 1008 சங்குகளால் அபிஷேகம் செய்யப்பட்டு விசேட பூசைகள் இடம்பெறும்.

அதனைத் தொடர்ந்து வசந்த மண்டப பூசை நடைபெற்று விநாயகப் பெருமான் ஒரு மணியளவில் வெளிவீதி உலா வருவார். (ஸ்ரீ-3-35)

## யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான கிரிக்கெட் போட்டியில் நெல்லியடி ம.ம.வி. சம்பியன்

(கரவெட்டி)

யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற ஆண்களுக்கான கிரிக்கெட் போட்டியின் இறுதிப் போட்டியில் யா/நெல்லியடி மகா வித்தியாலய அணி சம்பியனாகியது.

யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்றுவரும் பெரும் விளையாட்டுக்களில் கிரிக்கெட் போட்டி கடந்த வாரம் யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

இப்போட்டியில் நெல்லியடி ம.ம.வி. அணி யா/இந்துக் கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி, அருணோதயாக் கல்லூரி ஆகிய அணிகளை வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்குத் தெரிவாகியது.

இறுதிப் போட்டியில் கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி அணியை வெற்றி பெற்று யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அணி யாழ்.மாவட்ட சம்பியனாகியது. (ஸ்ரீ-3-24)

## நடைபாதையில் வியாபாரம் செய்தோருக்கு அபராதம்

(யாழ்ப்பாணம்)

போக்குவரத்துக்கு இடையூறாக யாழ்.நகரப் பகுதியில் நடைபாதையில் செருப்பு மற்றும் புடைவை விற்பனை செய்த நபர்களுக்கு யாழ்.நீதிவான் நீதிமன்றம் 2 ஆயிரம் ரூபா அபராதம் விதித்துள்ளது.

குறித்த நபர்களைக் கைதுசெய்த யாழ்ப்பாணப் பொலிஸார் நேற்றைய தினம் யாழ்.நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தினர்.

வழக்கை விசாரித்த யாழ்.நீதிவான் நீதிமன்ற பதில் நீதிவான் மு.திருநாவுக்கரசு குறித்த நபர்களுக்கு தலா ஆயிரம் ரூபா அபராதம் விதித்துத் தீர்ப்பளித்தார். (ஸ்ரீ-3-6)

# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை

# 2011 (ஆகஸ்ட்) மாதிரி வினாத்தாள் - 03


ஆசிரியர் :- புன்னியாமீன்,
மஸீதா புன்னியாமீன்

## பகுதி - I


- **இவ்வினாப்பத்திரம் 40 வினாக்களைக் கொண்டது. ஒவ்வொரு வினாவுக்கும் மும்மூன்று விடைகள் தரப்பட்டுள்ளன. மிகச் சரியான விடையின் கீழ்க்கோடிடுக.**

- **முதலில் உள்ள உருவிற்கு ஒத்த உருவைத் தெரிவுசெய்க.**

1) 1) 2) 3)



2) 1) 2) 3)





- **ஒன்றுக்கொன்று தொடர்புள்ள சொற்கள் கொண்ட கட்டத்தைத் தெரிவுசெய்க.**



| | | | |
|---|---|---|---|
| 3) | மேசை<br>கடை<br>வாரம்<br>வாளி | குவளை<br>கோப்பை<br>கிண்ணம்<br>கேத்தல் | புத்தகம்<br>பந்து<br>பழம்<br>பறவை |
| 4) | திங்கள்<br>மாசி<br>வாரம்<br>ஆண்டு | பயம்<br>முயற்சி<br>விளையாட்டு<br>தோல்வி | நோய்<br>மருந்து<br>வருத்தம்<br>ஓய்வு |

- **முதலில் தரப்பட்டுள்ள 3 சொற்களுக்கும் பொருந்தும் உருவைத் தெரிவுசெய்க.**

5) கொல்லன்பட்டறை சமையலறை கூர்மை

1)  2)  3) 

6) பயணம் பாதுகாப்பு அழகு

1)  2)  3) 

- **தரப்பட்டுள்ள கவிதையை வாசித்து விடைகளைத் தெரிவுசெய்க.**

**மகாவலி, களனி, வளவை கங்கை**
**சிவனொளி பாதமலை பிறக்கும்**
**காடும் மேடும் சமதரை எங்கும்**
**ஊர்ந்து செல்கையில் மண்சிறக்கும்**

7) இக்கவிதை கூறுவது
1) மண்ணின் சிறப்பைப் பற்றி
2) சிவனொளிபாத மலையைப் பற்றி
3) இலங்கையிலுள்ள நதிகள் பற்றி

8) இக்கவிதையில் 'மண் சிறக்கும்' என்பதன் கருத்தாவது
1) மண்ணில் பல்வேறு கழிவுகள் சேர்க்கப்படும்
2) மண்ணின் வளம் அதிகரிக்கும்
3) மண்ணினால் பல்வேறு பயன்களைப் பெறலாம்

- **சரியான விடையைத் தெரிவுசெய்க.**

9) வெளித்தோற்றத்தைக் கொண்டு ஒரு பொருளை மதிப்பிட முடியாது எனும் கருத்தைத் தரும் பழமொழி
1) காக்கைக்கும் தன் குஞ்சு பொன்குஞ்சு
2) மின்னுவதெல்லாம் பொன்னல்ல
3) போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து

10) "அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்" எனும் பழமொழியின் கருத்து
1) விடாமுயற்சி பலன் தரும்
2) பலசாலியும் ஒருநாள் தோல்வி அடையலாம்
3) ஒற்றுமையாக வாழ்ந்தால் பலம் கிடைக்கும்

11) "சிறுதுளி பெரு வெள்ளம்" எனும் பழமொழிக்கு ஒத்தகருத்தைத் தருகின்ற பழமொழி எது?
1) அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு
2) ஆறின கஞ்சி பழங்கஞ்சி
3) குருணி கூடித் தான் கொள்கலன் நிறையும்

- **பின்வரும் பந்தியிலுள்ள உறவுமுறைகளைப் புரிந்துகொண்டு இல 12 - 14 வரையிலான வினாக்களுக்கு விடையளிக்க.**

**திவ்யாவின் தாயார் பத்மா ஆவார். பரசுராமன் பத்மாவின் சகோதரர் ஆவார். ரஞ்சனி பரசுராமனின் மகளாவார். கவின் ரஞ்சனியின் தம்பி ஆவார்.**


12) பரசுராமன் திவ்யாவுக்கு என்ன உறவு?
1) தாத்தா ஆவார் 2) மாமா ஆவார்
3) சிறிய தந்தை ஆவார்

13) திவ்யாவும் ரஞ்சனியும் எத்தகைய உறவுடையவர்கள்?
1) சகோதரிகள் 2) மைத்துனிகள் 3) மாமிமருமகள்

14) கவினுக்கு மாமியாக இருப்பவர் யார்?
1) பத்மா 2) திவ்யா 3) ரஞ்சனி


- **எண்கள் இடப்பட்ட கோலத்திற்கேற்ப வெற்றிடத்துக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

15)




1) 11 2) 40 3) 30


16)





1) 6 2) 3 3) 16

- **கோலத்திற்கேற்ப அடுத்ததாக வரவேண்டிய உருவைத் தெரிவுசெய்க.**

17)



1) 2) 3)



(14ஆம் பக்கம் பார்க்க)

# கோகோஸ் தீவுகளில் சட்டவிரோதமாக நுழையமுயன்ற அனைவரும் இலங்கையர்கள்

## அவுஸ்திரேலியா அறிவிப்பு

(கொழும்பு)

கடந்த இரண்டு வாரங்களுக்கு முன் கோகோஸ் தீவுகளில் சட்டவிரோதமாக நுழைய முயன்ற குடியேற்றவாசிகள் அனைவரும் இலங்கையர்களே என்று அவுஸ்திரேலியா அறிவித்துள்ளது.

கடந்த ஏப்ரல் 23ஆம் திகதி சுமார் எண்பத்தி எட்டுப் பேரைக் கொண்ட சட்டவிரோத குடியேற்றவாசிகள் குழுவொன்று அவுஸ்திரேலியாவின் கோகோஸ் தீவைச் சென்றடைந்திருந்தது. மீன்பிடிப்படகொன்றின் மூலம் அவுஸ்திரேலியாவிற்குள் நுழைந்திருந்த அவர்கள் அனைவரும் இலங்கைத் தமிழர்கள் என்பதாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலிய குடிவரவுத்துறை அதனை அங்குள்ள இலங்கைத் தூதரகத்திற்கு அறிவித்துள்ளது. விசாரணைகளின் பின் கைது செய்யப்பட்ட அவர்கள் அனைவரும் தற்போது அவுஸ்திரேலியாவின் கிறிஸ்மஸ் தீவுகளில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

தற்போதைக்கு அவுஸ்திரேலியாவில் ஆறாயிரத்துக்கும் அதிகமான சட்டவிரோதக் குடியேற்றவாசிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளதுடன் அவர்களில் பெரும்பாலானவர்கள் இலங்கையர்கள் என்பதாகவும் மேலதிக தகவல்களிலிருந்து தெரியவருகின்றது. (ஸ்ரீ-2)

# 2 கோடியே 50 இலட்சம் ரூபா செலவில் பாடசாலைக்கு கட்டடம்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை மகாஜனா கல்லூரியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு வரும் மூன்று மாடிக்கட்டடத்தின் 65 வீதமான பணிகள் முடிபடைந்துவிட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த கட்டட நிர்மாணப் பணிகள் முற்று முழுதாக இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

யாழ். கட்டளைத்தளபதி மகிந்த ஹத்துருசிங்கவின் பணிப்பிற்கமைய சுமார் 80 இராணுவ வீரர்களினாலேயே இந்த நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மூன்றாம் தவணைக்காக பாடசாலை ஆரம்பிக்கப்படும் போது இந்தக் கட்டடப் பணிகள் முற்றாக முடிபடைந்துவிடும் என இராணுவம் தெரிவித்துள்ளது.

பதின்நான்கு வகுப்பறைகளைக் கொண்ட இந்த புதிய கட்டடம் 2 கோடியே 50 இலட்சம் நிதி ஒதுக்கீட்டின் கீழ் மேற்கொள்ளப்படுகிறது. இந்தப் பாடசாலை கடந்த வருடம் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடியது என்பது குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-6)

# உலகின் மிக உயரமான புத்தர்சிலை அ'புரத்தில் அமைக்கப்படவுள்ளது

உலகில் மிக உயரமான புத்தர் சிலையை நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை அனுராதபுரத்தில் அரசாங்கம் அமைக்கவுள்ளது.

வவுனியாவில் தமிழ், முஸ்லிம்கள் அதிகமாக வாழும் பகுதியில் இந்த உயரமான புத்தர் சிலை அமைக்கப்படுவது குறித்து எதிர்ப்புகள் கிளம்பியதை அடுத்து தற்போது அனுராதபுரத்தில் அமைக்கப்படவுள்ளது.

அனுராதபுரத்தில், குடாகெலெத்தவ ஸ்ரீ சாரங்கராமய குருந்துகுளம் பகுதியில் 522 அடி உயரத்தில் சமாதி நிலையிலான இந்த புத்தர் சிலை அமைக்கப்படவுள்ளது.

நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 10.06 மணியளவில் அடிக்கல் நாட்டும் நிகழ்வு நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல மற்றும் பல அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்துகொள்ளவுள்ளனர்.

விடுதலைப்புலிகளுக்கு எதிரான போரில் பங்கேற்ற படைவீரர்களைப் போற்றி கௌரவிக்கும் வகையிலேயே இந்தப் புத்தர்சிலை அமைக்கப்படவுள்ளது. சீனாவின் லுசான் பகுதியில் அமைந்துள்ள 420 அடி உயரப் புத்தர் சிலையே தற்போது உலகில் மிக உயர்ந்த புத்தர் சிலை என்பது குறிப்பிடத்தக்கது. இந்த புத்தர்சிலை அமைந்துள்ள பீடத்துடன் சேர்த்து 502 அடி உயரமானது. இலங்கையில் மிக உயர்ந்த புத்தர் சிலை குருநாகலில் உள்ளது. இது 88 அடி உயரம் கொண்டது குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# நிபுணர் குழு அறிக்கைக்கு பதிலளிக்க வேண்டிய பொறுப்பு அரசுக்குள்ளது

## முன்னாள் பிரதம நீதியரசர் தெரிவிப்பு

(கொழும்பு)

நிபுணர் குழுவின் அறிக்கை தொடர்பில் ஐக்கிய நாடுகளின் உறுப்பு நாடு என்ற ரீதியில் பதிலளிப்பதற்கு இலங்கை நடவடிக்கை எடுக்க வேண்டுமென முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா தெரிவித்துள்ளார்.

இவ்வாறானதொரு அறிக்கை வெளியிடப்பட்டுள்ள நிலையில் அதற்கு பதிலளிக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்கு உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கடந்த 1947 ஆம் ஆண்டு முதல் ஐக்கிய நாடுகள் சபையில் இலங்கை அங்கம் வகிப்பதாக முன்னாள் பிர ம நீதியரசர் குறிப்பிட்டார்.

எனவே குறித்த அறிக்கை தொடர்பில் அரசாங்கம் விரிவாக ஆராய்ந்து குறுகிய காலத்திற்குள் சிறந்த பதிலை அளிக்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

அரசாங்கம் ஐக்கிய நாடுகள் சபைக்கு முரணாக செயற்படுவதற்கு முயற்சிப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

உரிய முறையில் ஐ.நா.விற்கு பதிலளிக்காது ஈரானின் பாதையில் பயணிப்பதற்கு இலங்கை முயற்சிப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இவ்வாறான நடவடிக்கைகள் காரணமாகவே ஈரானில் தற்போது பல்வேறு தடைகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை



**ஏழிலைப்பாலை/சப்தபர்ணி**

Botanical Name- Alstonia Scholaris
Family- Apocynaceae
Engl-Devil tree/Shaitan wood
Sinh: Rukkattana

ஏழிலைப்பாலை உயரமான மரமாகும். 13 தொடக்கம் 26 மீற்றர் உயரமுடைய தண்டுப்பகுதியைக் கொண்டது. சாம்பல் நிறமான பட்டை காணப்படும். உருளைவடிவான கிளைகளைக் கொண்டது.

பட்டைகளின் உட்புறம் மஞ்சள்நிறமாகக் காணப்படும். இதன் பட்டைகளை வெட்டும்போது மஞ்சள் நிறமான பால் வடியும்.

இலைகள் தனியிலை 5 தொடக்கம் 7 இலைகள் நீள்கோள வடிவில் ஒரே அச்சில் அமைந்திருக்கும். இலைகளின் மேற்புறம் கரும்பச்சையாகவும் கீழ்ப்புறம் வெளிறியும் காணப்படுவதோடு கீழ்ப்புறத்தில் மண்ணிறமான அமைப்புகள் காணப்படும்.

ஒழுங்கான இருபாலான பூக்கள் வெள்ளை சேர்த்த பச்சை நிறத்தில் அமைந்திருக்கும். உருளைவடிவ பழங்கள் காணப்படும். நிறைய விதைகளைக் கொண்டிருக்கும். நீளமான தட்டையான விதைகள். விதைகளின் இரு முனையிலும் உரோமன்கள் காணப்படும். சித்திரை மாதத்தில் பூக்களைக் காணலாம்.

**பரம்பலும் இனவிருத்தியும்:**

ஏழிலைப்பாலை மரத்தின் தாயகம் இந்தியாவும், அவுஸ்திரேலியாவும் ஆகும். ஆனால் இலங்கை, இந்தியாவின் வறண்ட பிரதேசங்களில் வளரக்கூடியமரமாகும். விதைகள் மூலம் இனவிருத்திசெய்யலாம்.

**மருத்துவக்குணங்கள்**

♦ சுதேமருத்துவத்தில் சுரநிலைமையிலும் (காய்ச்சல்) அதிலும் மலேரியாக் காய்ச்சலுக்கு இதன் பட்டை சிறந்த மருந்தாகும்.



ஏழிலைப்பாலை

♦ முக்கியமாக இதன் பட்டையில் காணப்படும் லேதியந்பொருளான Alstonine எனும் அல்க் லொயிட்டானது மேலைத்தேய மருத்துவத்தில் மலேரியாவிற்கு பயன்படும் Chloroquine எனும் மருந்திற்கு ஒப்பான லேகியப்பொருளாகும்.

♦ இதன் பட்டையை இடித்து, 8 தொடக்கம் 16 கிராம் (ஒன்று தொடக்கம் இரண்டு தேக்கரண்டி) அளவு எடுத்து 250 மில்லி வெந்நீரில் ஒரு மணிநேரம் ஊறவைத்து தினமும் 3 வேளை 60 மில்லி வெந்நீர் ஊறல் குடிநீராக அருந்த மலேரியாக் காய்ச்சல், சீதக் கழிச்சல் ஆகியவை குணமாகும்.

♦ இதன் வேரை கழுவி, உலர்த்தி, பொடித்து 4 தொடக்கம் 8 கிராம் அளவு இரவில் 3 நாட்கள் கொடுக்க வயிற்றுப்புண், நுண்புழு தீரும்.

♦ அடிக்கடி மலேரியா சுரத்தால் பாதிக்கப்படும் நோயாளிகள் முன்கூறிய ஏழிலைப்பாலைப் பட்டையை வெந்நீரில் ஊறவிட்டு குடிநீராக வாரத்தில் 3 நாட்கள் அருந்திவர சுரத்தின் தாக்கம் தணிந்து, உடலிற்கு வலிமையையும் கொடுக்கும்.

♦ இதன்பட்டைகளை சிதைக்கம்போது வடியும் மஞ்சள்நிறப்பாலை மூட்டுவலிக்கு பூசலாம்.

♦ ஒரு பங்கு இலைக்கு 4 பங்கு நீர் விட்டு 1/4 பங்காக வற்றக்காச்சி 30 தொடக்கம் 60 மில்லி காலை, மாலை அருந்திவர ஈரல்நோய்கள் தணியும்.

♦ சீழ்வடியும் நாட்பட்ட மணம் உடைய புண்களிற்கு இதன் குருத்து இலைகளான (Tender Leaves) மெலிதாக வறுத்து பொடித்து பிளாஸ்டர் மாதிரி (Poultice) புண்களின் மேல் பற்றிட புண்கள் விரைவில் ஆறும்.

♦ சுக்கு, கொத்தமல்லி, ஏழிலைப்பாலை பட்டை, கோனாக்கிழங்கு, இலாமிச்சவேர் ஒவ்வொன்றும் 3 கிராம் வீதம் எடுத்து 2 லீற்றர் தண்ணிரில் போட்டு 250 மில்லியாக சுண்டக்காச்சி கசாயமாக அருந்திவர வாத, பித்து சுரங்கள் தணியும். சிறுநீரும் நன்கு வெளியேறும்.

♦ சமிபாடின்மைக்கு உடன்பட்டைச் சாறு ஒரு தேக்கரண்டி 200 மில்லி காய்சிய பசுப்பாலில் கலந்து கொடுக்கலாம்.

குறிப்பு: இதன் தாவரவியற்பெயரில் சிற்றினப் பெயர் Scholaris என்று வரக் காரணம் Scholaris - School அதாவது சிலேட்டின் விளிம்புகள் ஏழிலைப்பாலை மரப்பட்டையிலிருந்தே தயாரிக்கப்படுவதாகும்.


டாக்டர் திருமதி விவியன் சத்தியசீலன் (M.D.C.S.)
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்தமருத்துவத்துறை,
யாழ். பல்கலைக்கழகம், கைதடி.

# இலங்கையை உலுப்பிவரும்

# ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கை

2009 ஜனவரி 8 ஆம் திகதி பிரபல பத்திரிகையாசிரியர் லசந்த விக்கிரமதுங்க கொழும்பில் வைத்து இனங்காணப்படாதவர்களால் கொலை செய்யப்பட்டார். பாதுகாப்புச் செயலாளர் செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்ட இராணுவக் கொள்வனவுகளில் ஊழலை வழக்கொன்றின் மூலம் பகிரங்கப்படுத்துவதற்காக அவர் தகவலைச் சேகரித்தார்.

அதற்கு இரண்டு நாட்களுக்கு முன்னர் சுயாதீன மகாராஜா தொலைக்காட்சி ஒளிபரப்புப் பின்னலை ஆயுததாரிகள் தாக்கி பாதுகாப்பு ஊழியர்களைத் துப்பாக்கியைக் காட்டி அச்சுறுத்தி அங்குள்ள உபகரணங்களை நொறுக்கினர். இச்சம்பவங்கள் எதுவும் புலனாய்வு செய்யப்படவில்லை.



2006 மற்றும் 2009 ஆரம்பத்திற்கு இடைப்பட்ட காலப்பகுதியில் குறைந்தபட்சம் 10 ஊடகவியலாளர்கள் கொலை செய்யப்பட்டார்கள் இத்தணிக்கை நடவடிக்கைகளின் திரண்ட விளைவாக மற்றும் கொலை செய்யப்படுவோமோ அல்லது தாக்கப்படுவோமோ என்ற அச்சம், ஊடகத்தின் சுயாதீன மேற்பார்வை பங்களிப்பில் தீங்கான தொரு தாக்கத்தை ஏற்படுத்தியது.

"என்னிடம் இரு குழுக்கள் மாத்திரமே உள்ளன. அவை பயங்கரவாதத்திற்கு எதிராகப் போராடும் மக்களும் பயங்கரவாதிகளுமே" எனப்பாதுகாப்புச்செயலாளர் கூறியதாக மேற்கோள் காட்டப்பட்டிருந்தது.

65. எல்.ரி.ரி.ஈ. இனை அதிகளவில் பொறுத்துக் கொள்வது மற்றும் "பயங்கரவாதிகளுக்கு ஆதரவு வழங்குதல்" தொடர்பாக அரசாங்கம் சர்வதேச சமூகத்தைத் தொடர்ச்சியாகப் பகிரங்கமான முறையில் விமர்சித்தும் வந்துள்ளது.

இவ்வுத்தியின் ஓர் அங்கமாக அதனைப்படிப்படியாக யுத்தவலையத் தில் இருந்து அகற்றி யுத்தத்தை நிறுத்துவதற்கான அல்லது யுத்த நிறுத்தம் ஒன்றை ஏற்படுத்துவதற்கான இராஜதந்திர முயற்சிகள் மறுக்கப்பட்டன அல்லது உதாசீனம் செய்யப்பட்டன.

66. 2008 செப்ரெம்பர் அளவில், அதன் கடந்தகாலப் பலத்துடன் ஒப்பீட்டளவில் எல்.ரி.ரி.ஈ.இன் இராணுவத் திறன்கள் கடுமையாகக் குறைந்திருந்தன. அதன் சரியான பலம் அத்தருணத்தில் தெரியாதிருந்த போதிலும் உச்சக்கட்டத்தில் அதன் பலம் 20ஆயிரம் ஆட்களை விஞ்சவில்லை எனலாம். யுத்தத்தின் இறுதிக்கட்டங்களின்போது அதன் முக்கியபோராளிகள் எண்ணிக்கை இப்பலத்தின் ஒரு சிறிய அளவாக 5ஆயிரம் வரை இருந்திருக்கலாம்.

தெற்கில், கொழும்பில் மற்றும் ஏனையஇடங்களில் அதன் வலைப் பின்னல்கள் மற்றும் செயற்படாமல் காத்திருந்த அதன் கூறுகள் நலிவுற்று அரசாங்கத்தின் கிளர்ச்சி எதிர்ப்பு நடவடிக்கைகள் காரணமாக, தற்கொலை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான திறனை அதிக அளவில் இழந்து காணப்பட்டன.

"ஈழம்" தேசம் என இடப்பரப்பை பிடித்து வைத்திருப்பதற்கான எல்.ரி.ரி.ஈ. இன் முயற்சி கெரில்லா அணுகு முறையில் இருந்து விலகி முன் அணிகள் மற்றும் நிரந்தர இடங்களில் யுத்தம் புரிவதற்கான பாரம் பரிய யுத்தமொன்றை மேற்கொள்வதற்கான மாற்றத்தைத் தேவைப் படுத்தியது. யுத்தத்தின் இறுதிக் கட்டங்களின் போது அதன் முயற்சிகள் அநேகமாக தற்காப்பு நடவடிக்கைகளாக இருந்ததோடு, கடந்தகாலத்தில் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்ட அதன் சடுதியான எதிர்தாக்குதல்கள் இடம் பெறவில்லை.

இதன் விளைவாக தொடர்ந்து சுருங்கிவரும் பிரதேசத்தினுள் இக்கட்டான நிலைக்குத்தள்ளப்பட்ட எல்.ரி.ரி.ஈ. மண்அணைகள், அரண்கள், கண்ணிவெடிகள் மற்றும் அகழிகள் மறைந்திருந்து தாக்குதல், கண்ணி வெடிப்பொறிமற்றும் வெடிக்கும் சாதனங்கள் ஆகியவற்றிற் குப்பின்னால் இருந்து கொண்டு தற்காப்பு முயற்சிகளில் ஈடுபட்டது.

67.சுமார் 32 நாடுகளில் தடை செய்யப்பட்ட பயங்கரவாத அமைப்பு என்ற நிலை அதன் சர்வதேச நடவடிக்கைகளை மற்றும் ஆத ரவை மட்டுப்படுத்தியது. இலங்கை இராணுவத்துடன் ஒப்பீட்டளவில் எல்.ரி.ரி.ஈ மிகக்குறைந்த அளவாக இருந்ததோடு பெரும்பாலான அதன் அணியினர் அனுபவமற்றவர்களாக இருந்த போதிலும், அதன் அடிப்படைக் கட்டமைப்பு அதன்கீழ் செயற்படும் இராணுவ மற்றும் அரசியல்பிரிவு ஆகியவற்றுடன் சீர்குலையாமல் இருந்தது.

அவை இரண்டிற்கும் வேலுப்பிள்ளை பிரபாகரன் வழிநடத்தியமத்திய ஆளுமைக் குழுவொன்று தலைமை தாங்கியது. இக் குழு (சூசையின் கீழான) கடற்புலிகள், (பிரபாகரனின் மகன் சார்ள்ஸ் அன்ரனி மற்றும் இரத்னம் மாஸ்டர் தலைமையிலான) வான் புலிகள், சார்ள்ஸ் அன்ரனி பிரிகேட் என்ற சிறந்த தொரு யுத்தம் புரியும் அலகு, கரும்புலிகள், பொட்டு அம்மான் தலைமையிலான உளவுப் பிரிவு மற்றும் நடேசன் தலைமை தாங்கிய அரசியல் அலுவலகம் ஆகிய வற்றை மேற்பார்வை செய்தது. அநேகமாக இத்தலைவர்கள் யுத்தத்தின் இறுதிக்கட்டங்களில் கொல்லப்பட்டார்கள்.

68. அதன் அணிகளைத் தக்க வைப்பதற்காக எல்.ரி.ரி.ஈ. முக்கியமான வலுக்கட்டாயமாக ஆட்சேர்ப்பில் தங்கியிருந்தது. ஆரம்பத்தில் அதன் படைக்கு ஒரு குடும்பத்தில் இருந்து ஒரு பிள்ளையை எடுத்த எல்.ரி.ரி.ஈ. யுத்தம் மும்மரமடைந்தும் கொடூரமாகச் செயற்பட நிர்பந்திக்கப்பட்டு, 14 வயதுடைய இளம் சிறுவர்கள் மற்றும் சிறுமியர் உள்ளிட்ட ஒரே குடும்பத்திலிருந்து பல பிள்ளைகளை அணிசேர்த்தது. அவர்களது யுத்த நடவடிக்கைகளுக்கு வேறுவிதமாகப் பொதுமக்களும் சேர்த்துக் கொள்ளப்பட்டதோடு, அவர்கள் மேலதிக இடர்களுக்கு உட்படும் வண்ணம் உதாரணமாக அவர்களை அகழிகள் தோண்டுவதற்கு, அரண்அமைப்பதற்கு ஈடுபடுத்தியது.

69. குறிப்பாக அதன் மிதக்கும் களஞ்சியங்களின் இழப்புக்குப் பின்னர் எல்.ரி.ரி.ஈ. இன் விநியோகச் சங்கிலித்தொடர் தடைப்பட்ட போதிலும், தொடர்ந்து அது பீரங்கிக் குண்டு மற்றும் மோட்டார் வெடிகள் அத்துடன் சில பல்குழல் எறிகணை செலுத்திகள் உள்ளிட்ட சில ஆயுதக் குவியல்களை பெற்றுக்கொள்ள முடிந்தது. தாம் அமைத்துக் கொண்ட அரண்களுக்குப் பின்னால் இருந்து கடிமான எதிர்ப்பை வழங்கியதோடு சரமாரியான தற்கொலைக் குண்டுத் தாக்குதலையும் அது மேற்கொண்டது. கரும்புலிகள் தொடர்ச்சியாகச் செயற்பட்டு, முன்னேறிக் கொண்டிருந்த இலங்கை இராணுவத்தினருக்கு எதிரான அதிகமான மற்றும் பொது மக்களுக்கு அதிகசேதத்தை விளைவித்த யுத்தவலயத்திற்கு வெளியே சில தற்கொலைத் தாக்குதல்களையும் மேற்கொண்டது.

கடற்புலிகளிடம் தொடர்ந்தும் சில கடற்படை உபகரணங்கள் மற்றும் படகுகள் இருந்ததோடு, 2009 பெப்ரவரியில் எல்.ரி.ரி.ஈ. வசம் எஞ்சியிருந்த செயற்படக் கூடிய விமானம் கொழும்புக்கு மேலாக தற்கொலை நடவடிக்கை ஒன்றின் போது சுட்டு வீழ்த்தப்பட்டது.

70. தனது கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசத்தில் பொதுமக்களைத் தடுத்து வைத்திருப்பது எல்.ரி.ரி.ஈ. இன் வியூகத்திற்கு முக்கியமானதாக விருந்தது. பொது மக்கள் இருப்பதானது தனி நாட்டின் எல்.ரி.ரி.ஈ.



இன் வாதத்தை நியாயப்படுத்துவதாகவும் இலங்கை இராணுவத்தின் தாக்குதலுக்கு எதிரான கேடயமாகவும் இருந்தது.

இதன் காரணமாக வன்னியில் இருந்த பொதுமக்களை அங்கிருந்து சென்று விடாமல் எல்.ரி.ரி.ஈ. தடுத்தது. பொதுமக்களுக்கான சேதம் கணிசமான அளவு அதிகரித்த போதிலும், சர்வதேச தலையீடு ஏற்பட்டு யுத்தம் நிறுத்தப்படும் என்ற நம்பிக்கையில் பொதுமக்கள் வெளியேறுவதை எல்.ரி.ரி.ஈ. தடுத்தது இறுதி நேரம் வரை அதன் தலைமைத்துவத்தைப் பாதுகாக்கும் முயற்சிக்காக பிரங்கிச் சூட்டிற்குப் பெருமளவானோர் பலியாக புதிய மற்றும் நன்கு பயிற்றப்படாத அணியினரையும் பொது மக்களையும் அது பயன்படுத்தியது. ஐ.நா. அலுவலர்களை வெளியேற்ற வேண்டாமெனக் கெஞ்சிய வன்னிமக்கள் ஐ.நா.நிபுணர்குழு அறிக்கை பாகம்-5

**3.யுத்தப்பிரதேசத்தில் இருந்த பொதுமக்கள்**

71. 2008 செப்ரம்பரில் இலங்கை இராணுவம் பலமுனைகளிலிருந்தும் வன்னிநோக்கி முன்னேறியதோடு அதனால் அப்பிரதேசத்திலிருந்து வெளியேறமுடியாத அதிக எண்ணிக்கையிலான பொது மக்கள் அங்கு சிக்குண்டனர்.

அப்பிரதேசத்தை விட்டகலுமாறு கிரமமாக அரசாங்கம் துண்டுப்பிரசுரங்களை மேலிருந்து வீசியது. (ஆயினும் அதனை எவ்வாறு செய்யலாம் என்பது பற்றிய குறிப்பான தகவலை வழங்கவில்லை).

ஆயினும் அதிகமானோர் அங்கேயே இருந்தனர். எல்.ரி.ரி.ஈ.இன் அனுமதிச்சீட்டுத் திட்டத்திற்கு

**தமிழாக்கம் தொடர் 10**

புறம்பாக எல்.ரி.ரி.ஈ.இன் கட்டுப்பாட்டுப்பிரதேசத்தில் பொது மக்கள் சிக்குண்டதற்கு மேலும் பல காரணிகளும் பங்களித்தன. இம் மக்களுக்குள் பெரும்பாலானோருக்கு வன்னியே அவர்களின் குடியிருப்புப் பிரதேசமாகும்.

இராணுவம் யாழ்ப்பாணத்தை கைப்பற்றிய அனுபவம் பலருக்கு இருந்ததோடு 1995 முதல் அவர்கள் எல்.ரி.ரி.ஈ.யுடன் சேர்ந்து நகர்ந்தனர். தம் அனுபவத்தில் இருந்து அவர்கள் அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குச் சென்றால் அவர்கள் அங்கு தடுத்து வைக்கப்படுவார்கள் என அவர்கள் அஞ்சினர்.

அவர்கள் வெள்ளை வான் பற்றியும் அச்சம் கொண்டிருந்ததோடு இராணுவத்தினரால் கற்பழித்து அல்லது சித்திரவதை செய்யப்படுவதையிட்டும் பயந்தனர். மேலும் வலுக்கட்டாயமாக எல்.ரி.ரி.ஈ. அணிதிரட்டல் நடவடிக்கைகளில் ஈடுபட்டதால் அனேக குடும்பங்களின் உறவுகள் எல்.ரி.ரி.ஈ.யில் இருந்தனர். அது எவ்வாறாயிருந்த போதிலும் பல சந்தர்ப்பங்களில் அரசாங்கக் கட்டுப்பாட்டுப்பகுதிகளுக்குச் செல்வதாயிருந்தால், செல்வெடி வரும் திசை நோக்கி, யுத்தம் நடைபெறும் இடங்களை மற்றும் கண்ணி வெடிகள் புதைத்து வைக்கப்பட்டிருந்த இடங்களைத் தாண்டிச் செல்ல வேண்டியும் இருந்தது.

(தொடரும்)

# வியாழமாற்றம் உங்களுக்கு எப்படி?




(பூரட்டாதி 4ஆம் பாதம், உத்தரட்டாதி, ரேவதி)

வசதிகள் பெருகிவரும் ஆவணிக்கு மேல் மாற்றம் வரும்!

*சமுதாயத்தில் தனக்கென ஒரு முத்திரையைப் பதித்துக் கொண்டு செயற்படும் மீன ராசி நேயர்களே!*

குரு உங்கள் இராசியை சொந்த வீடாகக் கொண்டவர். அவர் இப்போது மற்றொரு கிரகமான செவ்வாயின் வீட்டுக்குச் சென்று அங்கு ஓராண்டு தங்கியிருந்து உங்கள் செயற்பாடுகளுக்கு எல்லாம் ஊக்கமும் ஆக்கமும் தரப் போகின்றார்.

நீங்கள் உதவி செய்வதற்குப் பிரியப்படுபவர்கள். உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேச மாட்டீர்கள். ஊர் மற்றும் உற்றார் உறவினர்கள் மீது பற்றுதலும் அதிகமாகவே கொண்டிருப்பீர்கள். எல்லா நெளிவு சுளிவுகளையும் கற்று வைத்திருப்பீர்கள். உங்கள் இராசிக்கு அதிபதி குரு என்பதால் உங்களுக்கு சமூகத்தில் நல்ல மதிப்பும் மரியாதையும் இருக்கும். மக்களைக் கவரும் பேச்சாற்றலும் உங்களுக்குக் கைவந்த கலை. மேலும் பத்தாமிடத்துக்கும் குரு அதிபதி ஆவதால் அந்தக் குருவின் பார்வை பதியும் இடங்களான 6,8,10 ஆகிய இடங்களும் புனிதமடைந்து மே மாதம் முதல் மிகச் சிறந்த பலன்கள் வந்து சேரப் போகின்றன.

ஜென்ம குருவின் ஆதிக்கம் இருக்கும்போது அலைச்சல் மேல் அலைச்சல் உருவாகி இருக்கும். இனி ஆதாயமே அலை மோதும். எனவே குரு வழிபாட்டினை முறையாக மேற்கொள்வீர்கள். பரிகார தலங்களுக்குச் சென்று பார்வை மூலம் பலன் தரும் குருவை பலப்படுத்துங்கள்.

### இனிய பலன்களைத்தரும் குருப் பெயர்ச்சி

இத்தனை மகத்துவம் வாய்ந்த குரு பகவான் உங்கள் ஜென்ம இராசியை விட்டு விலகி இரண்டாம் இடத்தில் 08.05.2011 முதல் சஞ்சரிக்கப் போகிறார். ஜென்ம இராமர் வனத்திலே என்பது பழமொழி. ஜென்மத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுதுதான் இராமர் வனவாசம் போனதாகச் சொல்வார்கள். எனவே ஜென்மத்தில் இருந்தபோது உங்களுக்குப் பயணங்கள் அதிகரித்து இருக்கும். ஆனால் அதன் மூலம் அசதி வந்திருக்குமே தவிர வசதி வந்திருக்காது.

இப்பொழுது நடைபெறப்போகும் இந்தக் குருப் பெயர்ச்சியின் மூலம் இனிய பலன்கள் உங்களுக்கு வந்து சேரப் போகின்றன. அதன் பார்வை பலமும் உங்களுக்கு பக்க பலமாக இருக்கும். குறிப்பாக குரு உங்களுக்குரிய ஆதிபத்தியத்தின் அடிப்படையிலேயே பலன்களை வழங்குவார்.

இராசிநாதனாகவும், பத்துக்கு அதிபதியாகவும் இருக்கும் குரு கேந்திராதிபத்ய தோசம் பெற்றவர்தான். எனவே அவர் மறைவிடங்களில் சஞ்சரிக்கும் பொழுது மிகுந்த நற்பலன்களை கொடுப்பார். வாழ்க்கைத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளவும் அவர் வழிவகை செய்வார். இப்பொழுது அவர் குடும்ப ஸ்தானத்தில் சஞ்சரித்தாலும் கூட சனியின் பார்வையில் உங்கள் இராசி இருக்கிறது. சனிப்பெயர்ச்சிக்கு பின்னாலும் உங்களுக்கு அஷ்டமத்துச் சனியின் ஆதிக்கம் இருக்கிறது. எனவே இந்தக் குருப் பெயர்ச்சி ஓரளவு நன்மைகளைச் செய்தாலும் குருவையும், சனியையும் நீங்கள் தொடர்ந்து வழிபட்டால்தான் உங்களது வளர்ச்சி நிலையானதாக இருக்கும்.

"இரண்டில் குரு வந்தால்
இல்லத்தில் மகிழ்ச்சிவரும்!
திரண்ட செல்வமுடன்
தேனான வாழ்வமையும்!
உறவினர்கள் பகைமாறி
உற்சாகம் குடிகொள்ளும்!
குருவின் வழிபாட்டால்
கொள்கையுடன் வாழ்ந்திடலாம்!"

என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கிறது.

அந்த அடிப்படையில் இரண்டாமிடத்தில் குரு சஞ்சரிக்கும் போது இனிய பலன்களே உங்களுக்கு நடைபெறும். சொன்ன சொல்லை நிறைவேற்றுவதற்கும் குடும்பத்தில் சுப காரியங்கள் நடைபெறுவதற்கும் குருவின் அருள்தான் தேவை. அந்தக் குரு பார்க்கும் பொழுது அதிக பலன்கள் கிடைக்கும். இருந்தாலும் அது இருக்கும் இடத்திற்கும் அதில் பாதி அளவாவது பலன் கிடைக்க வேண்டும். எனவே குருவை வழிபட்டு அதன் மூலம் நற்பலன்களை வரவழைத்துக் கொள்ளுங்கள்.

வாக்குத் தனம், குடும்பம் எனப்படும் இந்த இரண்டாமிடம் வலுப்பெறும் பொழுது வாக்குவாதம் செய்தவர்கள் சரணடைவார்கள். வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் வெற்றிபெறும். குடும்பத்தினரின் தேவைகள் பூர்த்தியாகும் விதத்தில் உங்களுக்கு பொருளாதார நிலை மேலோங்கும். திரண்ட செல்வம் உங்களைத் தேடி வரும்பொழுது அதை உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் கொடுத்து உதவி செய்வீர்கள்.

வறண்ட வாழ்க்கை இனி மாறும். ஆதிபத்தியத்தின் அடிப்படையில் பார்க்கும் பொழுது புதிய தொழில் தொடங்கும் சூழ்நிலைகள் உருவாகும். ஆரோக்கியத்திற்காக இதுவரை செய்த மருத்துவச் செலவுகள் இனிக் குறையும். குழந்தைகளின் சுபச் சடங்குகள் நடைபெறப் போவதற்கான அறிகுறிகள் தோன்றும். குரு வழிபாட்டை முறையாக யோக பலம் பெற்ற நாளில் மேற்கொள்வதன் மூலம் குடும்ப முன்னேற்றம் அதிகரிக்கும்.

### விதியை மாற்றும் வியாழனின் பார்வை

பெயர்ச்சியாகும் குரு உங்களுக்கு வளர்ச்சியை ஏற்படுத்தும் விதத்தில் பார்வை பலத்தைக் கூட்டுகிறார். இதன் விளைவாக 6,8,10 ஆகிய இடங்கள் புனிதமடைகின்றன. அதன்படி எதிர்ப்பு, வியாதி, கடன், இழப்பு, வழக்கு , உடல்நிலை, இடமாற்றம், தொழில்மாற்றம் போன்ற அனைத்திலும் நல்ல மாற்றங்களைக் கொடுக்கப் போகிறார்.

பட்ட கடன் தீரும், பரிதவிப்பு மாறும், கெட்டவர்களின் சகவாசம் மாறும். உற்றார், உறவினர்கள் உங்கள் முன்னேற்றம் கண்டு ஆச்சரியப்படுவர். ஆர்வத்தோடு பணி புரிய முன்வருவீர்கள். ஆதாயம் தரும் காரியங்கள் ஏராளம் நடைபெறும். போதுமான அளவு பொருளாதாரம் வந்து சேரும். இந்த நேரத்தில் பொன்-பொருள் வாங்கிச் சேர்க்கும் எண்ணம் மேலோங்கும்.

மண் , பூமி சேர்க்கைக்கு முக்கியத்துவம் கொடுப்பீர்கள். மாற்றுக் கருத்துடையோர் மனம்மாறி வீட்டுத் தேவைகளை பூர்த்தி செய்து கொடுப்பர். ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்போடு அனைத்துக் காரியங்களிலும் வெற்றி பெறக் கூடிய வாய்ப்புக் கிட்டும். கூடுதல் பொறுப்புகளை ஏற்றாலும் வாடுதல் உங்களுக்கு இருக்காது.

குருவின் பார்வை பலத்தால் செயல் ஸ்தானம் புனிதமடைவதால் செய்யும் காரியங்கள் சிறப்பாக நடைபெறும். சமூகத்தில் மதிப்பும் மரியாதையும் கூடும். தலைமைப் பதவிகள் ஒரு சிலருக்கு வந்து சேரும். எல்லையில்லாத அளவிற்கு வருமானம் பெருக எண்ணற்ற தொழில்களைத் தொடங்க வேண்டும் என்ற எண்ணம் மேலோங்கும். பூமிப் பிரச்சினை அகலும். புதிய இடம் வாங்கி மனைகட்ட வேண்டும் என்ற சிந்தனை உருவாகலாம்.

உறவினர் பகை மாறும். ஊர் மாற்ற சிந்தனைகளை சிறிது காலம் தள்ளி வைப்பது நல்லது. பிள்ளைகளின் கல்வி முன்னேற்றம் கருதியும் கல்யாண காரியங்களுக்காக வாங்கிய தொகையையும்படிப்படியாக அடைப்பீர்கள். புண்ணிய காரியங்களுக்கு பொழுதெல்லாம் செலவழிப்பீர்கள்.

குழந்தைகளின் மனம் கோணாது கேட்டதைக் கொடுக்க வேண்டும் என்ற ஆசை இப்போது பூர்த்தியாகும். கடந்த காலத்தைக் காட்டிலும் இப்போது கணிசமான முன்னேற்றம் கிடைக்கும். அரசியல் செல்வாக்கு மேலோங்கும். தொழில் ரீதியாக எடுத்த முயற்சிகளுக்கு தொகை கேட்ட இடத்தில் இருந்து வந்து சேரும்.

தொழில் நடைபெறும் இடங்களைக் கூட விலைக்கு வாங்கி சொந்தமாக்கிக் கொள்ளும் முயற்சியில் ஈடுபடுவீர்கள். குரு இருக்கும் பாதசார அடிப்படையில் பரிகாரங்களை மேற் கொண்டால், பலன்களை வரவழைத் துக் கொள்ள இயலும்.

### அக்கறை காட்ட வேண்டிய வக்ர காலம்.

மேட இராசியில் சஞ்சரிக்கும் குரு 18.08.2011 முதல் 15.12.2011 வரை வக்ர இயக்கத்தில் சஞ்சரிக்கிறார். இக் காலப்பகுதியில் கூடுதல் விழிப்புணர்ச்சி காட்டினால்தான் கொடிகட்டிப் பறந்த பிரச்சினைகள் நல்ல முடிபிற்கு வரும்.

**அன்பு வாசகர்களே!**
**உங்கள் வலம்புரியில் 12.05.2011 தொடக்கம் இராகு - கேது மாற்றம் வெளிவரும்.**

பாடுபட்டு தேடிய பணம் பல வழிகளிலும் விரயமாகலாம். ஜென்ம இராசிக்கு அதிபதி வக்ர நிலையில் சஞ்சரிக்கும் பொழுது தேவையில்லாத வீண் பிரச்சினைகள் வந்து சேரும். உடல் நிலையில் தொல்லை உருவாகுவது போல் தோன்றி அதற்காக செய்யும் மருத்துவச் செலவு கூடும். வீட்டில் உள்ளவர்களை நீங்கள் அனுசரித்துச் செல்ல வேண்டிய நேரம் இது.

10இக்கு அதிபதியாகவும் குரு அமைவதால் தொழில் மாற்றச் சிந்தனைகள் மேலோங்கும், நண்பர்களிடம் ஒப்படைத்த பொறுப்புகள் மீண்டும் உங்களிடையே வந்து சேரலாம். வளர்ச்சிப் பாதையில் இணையும் புதிய கூட்டாளிகளை நம்பிச் செயற்படுவதை தவிர்ப்பதுநல்லது. இக்காலம் இனிய காலமாக அமைய தெசாபுத்திக்கேற்ற தெய்வ வழிபாடுகளைச் செய்வதே நல்லது.


இந்தக் குருப்பெயர்ச்சி ஆரோக்கியத்தோடும், உற்சாகத்தோடும் செயல்படும் வாய்ப்பை கொடுக்கும். குடும்பத்தில் இதுவரை இருந்த சண்டை சச்சரவுகள் இனி தீரும். கணவன், மனைவிக்குள் அந்நியோன்யம் அதிகரிக்க விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. ஆன்மீகப் பெரியார்களின் ஆலோசனைகளைக் கேட்டு நடப்பதன் மூலமும் அருகில் உள்ளவர்களை அனுசரித்துச் செல்வதன் மூலமும் மகிழ்ச்சியை வரவழைத்துக் கொள்ளலாம். பிள்ளைகளின் சுபகாரியப் பேச்சுக்கள் நவம்பர் மாதத்தில் முடிவடையும்.நல்ல வாய்ப்புகள் வந்து சேர வியாழன் விரதமும், குருவழிபாடும் மேற்கொள்வதோடு பௌர்ணமி நாளில் கிரிவல வழிபாடும் செய்து வருவது நல்லது.

இரண்டாமிடத்துக் குருவால் இனிய பலன்கள் வந்து சேர வியாழன் தோறும் தெட்சிணாமூர்த்தியை வழிபட்டு வருவதோடு சிவன், உமாதேவி, நந்தீஸ்வரரையும் வழிபட்டு வந்தால் தித்திக்கும் வாழ்க்கை அமையும்.

சிவல்புரி சிங்காரம்

(முற்றும்)





கட்டுவன் தெற்கில் யாழ்.மாவட்ட தேசவளவிவசாயிகள் சம்மேளன புதிய கொள்வனவு-விற்பனவு சேவை நிலையம் சம்மேளன தலைவர் க.முதலியார் தலைமையில் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.
இந்நிகழ்வில் பிரதம விருந் தினராகக் கலந்து கொண்ட பாரம்பரிய கைத்தொழிகள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபி விருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தாவிற்கு சம்மேளன தலைவர் மாலை அணி வித்து வரவேற்பதனையும் சம்மேளனச் செயலாளர் சி. திருச் செந்தூர்நாதன் பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பதனையும் படங்களில் காணலாம்.

## அன்னையருக்கு முக்கியத்துவமளிக்கும் நாடுகளில் இலங்கைக்கு 43 ஆவது இடம்

(கொழும்பு)

அன்னையருக்கு முக்கியத்துவம் அளிக்கும் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் பட்டியலில் இலங்கைக்கு 43 ஆவது இடம் கிடைத்துள்ளது.

உலகில் அன்னையருக்கு முக்கியத்துவம் அளிக்கும் நாடுகள் தொடர்பில் மேற் கொண்ட ஆய்வின் அடிப்படையில் அரச சார்பற்ற நிறுவனமான-சேவ் த சில்றன் அமைப்பு தரவரிசைப் பட்டியலை உலக அன்னையர் தினமன்று வெளியிட்டது.

இவ் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் பட்டியலில் கியூபா முதலாவது இடத்திலும் இந்தியா 75 ஆவது இடத்திலும் தரப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

## சிறைச்சாலைகள் ஆணையாளர் நீதிமன்றில் ஆஜராகி விளக்கம்

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தாக்கல் செய்த மனு மீதான விசாரணையின் போது பொன்சேகாவை நீதிமன்றத்தில் ஆஜராக்கத் தவறியமை தொடர்பாக சிறைச்சாலைகள் ஆணையாளர் நேற்று முன்தினம் மேன்முறையீட்டு நீதிமன்றில் ஆஜராகி விளக்கமளித்தார்.

தன்னை நாடாளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து நீக்கியதை ஆட்சேபித்து சரத் பொன்சேகா தாக்கல் செய்த மனு தொடர்பாக கடந்த 3 ஆம் திகதி நடைபெற்ற விசாரணையின் போது பொன்சேகாவை நீதிமன்றில் ஆஜராக்கத் தவறியமை குறித்து விளக்கமளிக்குமாறு சிறைச்சாலை ஆணையாளருக்கு நீதி மன்றம் உத்தரவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அதன்படி சிறைச்சாலை ஆணையாளர் நேற்று முன்தினம் நீதிமன்றில் ஆஜரானார். போக்குவரத்து நெரிசல் காரணமாக பொன்சேகாவை உரிய நேரத்திற்கு நீதிமன்றம் அழைத்துவர முடியவில்லை என அவர் விளக்கமளித்தார்.

அவரின் விளக்கத்தை ஏற்றுக் கொண்ட நீதிமன்றம் அவ்வாறான சம்பவம் எதிர்வரும் காலங்களில் நடைபெறக்கூடாது என வலி யுறுத் தியது.

போக்குவரத்து நெரிசல் ஏற் படலாம் என்பதைக் கருத்திற் கொண்டு விசாரணைகளுக்காக மனுதாரரை உரிய நேரத்தில் நீதிமன்றுக்கு அழைத்துவர நடவடிக்கை மேற் கொள்ளுமாறும் நீதிமன்றம் உத்தரவிட்டது. (ஸ்ரீ-2)

## சாகலவுக்கு தேசியப்பட்டியல் ஆசனம் வழங்குவது குறித்து ரணில் கவனம்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சாகல ரட்நாயக்கவை தேசியப் பட்டியல் ஆசனம் ஊடாக மீண்டும் பாராளுமன்றிற்கு கொண்டுவர கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க முயற்சி மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய தேசியக் கட்சியின் சர்வதேச விவகார செயலாளராக சாகல ரட்நாயக்க தற்போது கடமையாற்றி வருகின்றார். கடந்த 2010 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் மாத்தறை மாவட்டத்தில் போட்டியிட்ட சகல விருப்பு வாக்குப் பட்டியலில் மூன்றாம் இடத்தைப் பெற்றுக் கொண்டார்.

முதல் இரண்டு இடங்களையும் பெற்றுக் கொண்ட மங்கள சமரவீர மற்றும் புத்திக்க பத்திரண ஆகியோர் பாராளுமன்றிற்கு தெரிவு செய்யப்பட்டனர். கட்சியின் சர்வதேச விவகாரப் பொறுப்பாளராக சாகல நியமிக்கப்பட்ட போதிலும் அவருக்கு இராஜதந்திர கடவுச் சீட்டைப் பெற்றுக் கொள்வதில் சிக்கல் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் தேசியப் பட்டியல் ஊடாக சாகலவை பாராளுமன்ற உறுப்பினராக்க எதிர்க்கட்சித் தலைவர் தீவிர முனைப்புக்களை மேற்கொண்டு வருவதாக கட்சி உள் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. ரணில் விக்கரம சிங்கவின் மிக நெருங்கிய சகாக்களில் ஒருவராக சாகல காணப்படுகின்றார்.

சாகலவிற்கு பாராளுமன்ற உறுப்பினர் பதவியை வழங்குவதற்காக தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் பதவி விலக உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை சாகலவிற்கு தேசியப் பட்டியல் மூலம் பாராளுமன்ற உறுப்பினர் பதவி வழங்கப்பட்டால் சஜித்-ரணில் முறுகலை அது மேலும் உக்கிரப்படுத்தும் என அரசியல் அவதா னிகள் சுட்டிக்காட்டுகின்றனர். (ஸ்ரீ-2)

## இவ்வருடம் நன்னீர் மீன் உற்பத்தியில் அதிகரிப்பு

(கொழும்பு)

இந்த வருடம் நன்னீர் மீன் உற்பத்தியை இரட்டிப்பாக்குவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக மீன்பிடி மற்றும் நீரியல் வள அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

நாட்டிலுள்ள 12 ஆயிரம் நீர்நிலைகளில் நன்னீர் மீன் உற்பத்தி மேற்கொள்ளப்படுவதாக அமைச்சர் ராஜித சேனாரத்ன சுட்டிக்காட்டியுள்ளார். குறித்த திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அவற்றுள் 8 ஆயிரம் நீர்நிலைகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் களப்பிலும் விசேட நன்னீர் மீன் உற்பத்தி முன்னெடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.


நாட்டில் மீன் உற்பத்தியை அதிகரிப்பதற்கான நோக்கில் மீன் குஞ்சுகள் பகிர்ந்தளிக்கப்பட் டுள்ள துடன் இந்தத் திட்டம் வெற்றியளித்துள்ளதாகவும் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

இந்தத் திட்டத்தை முன்னெடுப்பதற்கு 180 புதிய அதிகாரிகளும் நியமிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த வருடத்தின் முதல் மூன்று மாதங்களுடன் ஒப்பிடுகையில் இந்த வருடம் நன்னீர் மீன் உற்பத்தி 4 ஆயிரம் மெற்றிக் தொன்களால் உயர்வடைந்துள்ளதாக மீன்பிடி மற்றும் நீரியல் வள அமைச்சர் மேலும் சுட்டிக்காட்டுகின்றார். (ஸ்ரீ-2)

## மனிதாபிமான விடயங்களை மதிக்கவும் நிறைவேற்றவும் அரசு மறந்துவிடவில்லை

### அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவிப்பு



நாட்டில் இடம்பெற்றதாக கூறப்படும் யுத்தக் குற்றங்களை ஆராய வேண்டுமென கூறும் ஐ.நா. செயலாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்ட தாருஸ்மான் அறிக்கையை எதிர்த்த போதும் இலங்கை மனிதாபிமான விடயங்களை மதிக்கவும் நிறைவேற்றவும் தனக்குள்ள கடப்பாட்டை மறந்துவிடவில்லை என நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம் நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு நாடும் தம் உள் நாட்டு பிரச்சினையில் தாம் கைக் கொண்ட வழிமுறைகளை மீள்பார்வைக்கு உட்படுத்தி சுயவிமர்சனம் செய்ய வேண்டும் என்பதில் எமக்கு உடன்பாடு உண்டு. எனினும் குற்றஞ்சாட்டும்போது பாரபட்சம் காட்டக் கூடாது. சுயவிமர்சனம் வல்லரசு நாடுகளுக்கும் பொருந்தும் எம்மைப் போன்ற சிறிய நாடுகளுக்கு மட்டும் அல்ல என ஹக்கீம் கூறினார்.

இலங்கையில் ஆட்கடத்தல் மற்றும் இலாப நோக்கிலான மனித கடத்தல் தொடர்பான வேலைப்பட்டறையில் பேசும் போதே அமைச்சர் இக் கருத்தை வெளியிட்டார்.

இதில் கலந்து கொண்ட அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் கதிகுளுமன் தெரிவிக்கையில், ஆட்கடத்தல் தொடர்புபட்ட குடும்பத்தை கடனில் ஆழ்த்தி விடுகிறது. இது மனித உயிர்களை ஆபத்துக்கு உள்ளாக்குகின்றது. இது மிகவும் ஆபத்தானது என கூறினார். (ஸ்ரீ-2)

## 2011.05 11 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★ 1502 - கொலம்பஸ் தனது கடைசி கடற் பயணத்தை மேற்கிந்தியத் தீவுகளுக்கு ஆரம்பித்தார்.
★ 1812 - லண்டன் நாடாளுமன்றத்தில் வைத்து பிரதமர் ஸ்பென்சர் பேர்சிவல் ஜோன் பெல்லிங்ஹம் என்பவனால் கொல் லப்பட்டார்.
★ 1857 - இந்தியப் புரட்சியாளர்கள் டில்லியை பிரித்தானியர்களிடமிருந்து கைப்பற்றினர்.
★ 1867 - லக்சம்பேர்க் விடுதலை அடைந்தது.
★ 1905 - அல்பேர்ட் ஐன்ஸ்டீன் பிரௌனியன் இயக்கம் பற்றிய தனது கருத்தை வெளியிட்டார்.
★ 1943 - இரண்டாம் உலகப் போர்: அமெரிக்கப் படைகள் அலூசியன் தீவுகளின் அட்டு தீவைக் கைப்பற்றினர்.
★ 1949 - சியாம் நாடு தாய்லாந்து எனப் பெயர் மாற்றம் பெற்றது.
★ 1949 - ஐக்கிய நாடுகள் சபையில் இஸ்ரேல் இணைந்தது.
★ 1953 - டெக்காசில் இடம்பெற்ற சூறாவளியில் 114பேர் உயிரிழந்தனர்.
★ 1960 - முதலாவது கருத்தடை மாத்திரை அறிமுகமானது.
★ 1985 - இங்கிலாந்தில் உதைபந்தாட்டப் போட்டி அரங்கில் ஏற்பட்ட தீ விபத்தினால் 56 பார்வையாளர்கள் உயிரிழந்தனர்.
★ 1987 - முதலாவது இதய மாற்றுச் சத்திர சிகிச்சை மேரிலாந்தில் நடத்தப்பட்டது.
★ 1997 - ஐ.பி.எம். இன் ஆழ்நீலக் கணனி முதன்முதலாக காரிகாஸ்பரவை சதுரங்க ஆட்டத்தில் தோற்கடித்தது.
★ 1998 - இந்தியா போஹரனில் (Pohran) மூன்று அணுச் சோதனைகளை நடாத்தியது.


### பிறப்புகள்

★ 1895 - ஜிட்டு கிருஷ்ணமூர்த்தி, இந்திய தத்துவஞானி (இ.1986)
★ 1897 - சுத்தானந்த பாரதியார், கவியோகி (இ.1990)
★ 1897 - ஜோர்ஜ் பீட்டர் மர்டாக், மானிடவியலாளர் (இ.1985)

### இறப்பு

★ 1976 - அல்வார் ஆல்ட்டோ, பின்லாந்து கட்டடக் கலைஞர் (பி.1898)

# புராதன தொழில்நுட்பம்



## ஆன்மீகம் 14

கேள்வி: எல்லாத்துன்பங்களுக்கும், பதற்றங்களுக்கும் ஆசைதான் காரணம் என்பது நன்றாகத் தெரிகிறது. ஆனால் ஒரு மனைவியாகவோ அல்லது ஒரு தாயாகவோ இருக்கும்போது இந்த ஆசைகளிலிருந்து என்னால் விடுபட முடியவில்லை. இது குறித்து உங்களுடைய அறிவுரைகளை வேண்டுகிறேன்.

சத்குரு: நீங்கள் ஒருவருக்கு மனைவியாக இருப்பதாலோ அல்லது தாயாக இருப்பதாலோ ஆசைகள் வரவில்லை. நீங்கள் யாருடைய மனைவியாகவும் இல்லாதபோது யாரோ ஒருவருக்கு மனைவியாக வேண்டும் என்ற ஆசை உங்களுக்கு இருந்தது. தற்போது ஒருவருக்கு மனைவியாக இருக்கிறீர்கள். இப்போது ஒரு குழந்தைக்குத் தாயாக வேண்டும் என்ற ஆசை இருக்கிறது. உங்களுக்கு ஒரு குழந்தை வந்துவிட்டால் பிறகு சொல்வீர்கள், இந்த இரண்டு விடயங்களால்தான் நான் ஆசைப்படுகிறேன் என்று. அது உண்மையல்ல நீங்கள் உலகில் யாருக்கும் எதுவாக இல்லாவிட்டாலும் உங்களுக்குள் ஆசை கொழுந்துவிட்டு எரியத்தான் செய்கிறது. இல்லையா? எனவே தயவு செய்து உங்கள் குழந்தையின் காரணமாகவோ, அல்லது கணவர் அல்லது குடும்பம் இவற்றின் காரணமாகவோ ஆசைப்படுகிறீர்கள் என்று எண்ண வேண்டாம். எப்படியிருந்தாலும் நீங்கள் அசைப்படுகிறீர்கள். அது தான் உங்கள் இயல்பு.

நீங்கள் இன்னொன்றையும் சொன்னீர்கள். எல்லாத் துயரங்களுக்கும் ஆசைதான் மூலகாரணம் என்று. எல்லாத் துயரங்களுக்கும் ஆசை மூலகாரணம் அல்ல. நிறைவேறாத ஆசைகள்தான் எல்லாத்துயரங்களுக்கும் மூலகாரணங்களாக இருக்கின்றன, இல்லையா? நிறைவேறிய ஆசைகள் உங்கள் சந்தோஷங்களுக்கு மூலகாரணங்களாக இருக்கின்றன. நிறைவேறாத ஆசைகள் தான் உங்கள் துயரங்களுக்கு மூலகாரணங்களாக இருக்கின்றன. அப்படியானால் ஆசையை வைத்துக்கொண்டு என்ன செய்வது? ஆசையைக் கொன்று விடலாமா? எனக்குத் தெரியும் ஒரு சிலர் தொடர்ந்து மக்களுக்கு இப்படிச் சொல்லிக் கொடுத்திருக்கிறார்கள். உங்களுடைய ஆசைகளையெல்லாம் கொன்றுவிடுங்கள். ஆசையை அழிக்காவிட்டால் உங்கள் துயரம் என்பது போகாது. இப்படிப்பட்ட போதனைகள் உங்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கின்றன இல்லையா?

உங்களுடைய எல்லா ஆசைகளையும் அழித்துவிட வேண்டும் என்று நீங்கள் விரும்பினால் உங்களுடைய மிகப்பெரிய ஆசை 'ஆசையை அழிப்பது' என்பதுதான். அது ஒருபோதும் நிறை வேறப்போவதில்லை. எனக்கு எந்த ஆசைகளும் வேண்டாம் என்று நீங்கள் சொன்னால் அதுவும் ஒரு ஆசைதான். இல்லையா? எனவே நீங்கள் தந்திரமாகக் கையாள நினைத்தால் அது வேலை செய்யாது. ஏனென்றால் ஆசையென்பது குறிப்பிட்ட ஏதோ ஒன்றை பெறவேண்டும் என்பதில் இல்லை. நீங்கள் ஆசை என்று எந்த சக்தியை சொல்கிறீர்களோ அதுவும், உயிர் என்று எதைக்குறிப்பிடுகிறீர்களோ அதுவும் வேறானது அல்ல. ஒரு கட்டத்திலிருந்து அடுத்த கட்டத்திற்கு நீங்கள் நகர விரும்பினால் உங்களுக்கு ஆசை தேவைப்படுகிறது. இல்லையா? இன்று உங்களை இங்கே கொண்டு வந்து சேர்த்தது எது? உங்கள் பேருந்தோ அல்லது உங்களுடைய காரோ அல்ல. உங்களுடைய ஆசைதான். உங்களை இங்கு கொண்டுவந்து சேர்த்திருக்கிறது. இல்லையா? இங்கிருந்து உங்களை வீட்டிற்கு எடுத்துச் செல்வது எது? ஆசைதான். உங்களைச் சாப்பிடச் செய்வது எது? ஆசைதான் எனவே எதை நீங்கள் ஆசையென்று அழைக்கிறீர்களோ அதற்கும், எதை நீங்கள் உயிர் என்று அழைக்கிறீர்களோ அதற்கும் வித்தியாசம் இல்லை. உயிர் என்பதே ஆசை தான். உங்களுடைய உயிரின் அடிப்படைத் தன்மையே ஆசைதான். எனவே ஆசையை கொன்றுவிடுங்கள் என்று சொன்னால் நீங்கள் தூக்கிற்தான் தொங்கவேண்டும். வேறு வழியே இல்லை. இப்போது நான் இறந்துபோக விரும்புகிறேன். அதுவும் ஒரு ஆசைதான். எனவே இப்படிப்பட்ட விடயங்களுடன் ஏமாந்து போகாதீர்கள். எனவே ஆசைதான் உங்கள் வாழ்க்கையின் சாரம். அதேநேரத்தில் ஆசை ஒரு முடிவில்லாத விடயம் என்பதை நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும். ஒரு ஆசை நிறைவேறினால் உடனடியாக அடுத்தது தயாராக இருக்கிறது. நீங்கள் அதைப்பூர்த்தி செய்தால் அடுத்து ஒன்று வருகிறது. தொடர்ந்து அப்படித்தான் இருக்கிறது. சாதாரணமாகவே ஒருசில ஆசைகள் நிறைவேறாமல் இருக்கின்றன. அந்த நிறைவேறாத ஆசைகள் தான் உங்கள் துயரங்களுக்கு காரணமாக இருக்கின்றன.

**சத்குரு ஜக்கி வாசுதேவ்**

(தொடரும்)

# இலங்கைத் தமிழ் இலக்கியத்திற்கு மலையகம் புதிய இரத்தம் பாய்ச்சியது

03

கவி சிதம்பரநாத பாவலர் வீரகேசரியில் தொடர்ந்து எழுதினார். 1934 ஆம் ஆண்டு "பௌத்தாயன் என்ற பெயரில் புத்தபெருமானின் சரித்திரத்தை காவியமாக எழுதினார். பாரத கவியரசர் ரவீந்திரநாத்தாகூர், கவிக்குயில் சறோஜினிதேவி போன்ற இந்தியக் கவிகளின் படைப்புக்களாலும் ஆங்கிலக் கவிதைகளாலும் உந்தப்பட்டு கவிதை படைத்தவர் இருவர். ஒருவர் மலையக மக்கள் கவிமணி சி.வி.வேலுப்பிள்ளை மற்றவர் கே.கணேஸ்.

ஆங்கிலத்திலும் தமிழிலும் எழுதும் ஆற்றல்மிக்க தமது எழுத்துக்களால் சி.வி. வேலுப்பிள்ளை மலைமக்களின் துன்ப துயரங்களை அகில உலகத்திற்கே வெளிச்சம் போட்டுக்கட்டினார். அவரது "இன் சிலோன் டி கார்டன்" என்ற கவிதை நூலே இந்த அரும்பணியைச்செய்தது. இதனை மலையகத்தின் மற்றும் ஒரு கவிஞரான சக்திபாலையா "தேயிலைத்தோட்டத்திலே..." என்ற பெயரில் தமிழ் வடிவம் கொடுத்தார்.

"புழுதிப் படுக்கையில்
புதைந்த என் மக்களைப்
போற்றும் இரங்கற்
புகழ் மொழி இல்லை
பழுதிலா அவர்க்கோர்
கல்லறை இல்லை
புரிந்தவர் நினைவுநாள்
பகருவாரில்லை"

என "தேயிலைத் தோட்டத்திலே" என்ற நூலிலே சி.வி. குறிப்பிட்டுள்ளார்.

**"கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை"**

1963 இல் ஆசிய, ஆபிரிக்க கவிதைகளில் முதலாவது தொகுப்பு வெளிவந்த போது இலங்கை, இந்தியா, சீனா, ஹொங்கொங், இந்தோனேசியா, கொரியா, சூடான், தங்கனிக்கா, ரஷ்யா, வியட்னாம் ஆகிய பத்து நாடுகளைச் சேர்ந்த எழுபது கவிஞர்களின் கவிதைகள் இடம்பெற்றன. இதில் இடம்பெற்ற ஒரே தமிழ்க்கவிஞரின் கவிதை இந்திய வம்சாவழியினரான சி.வி. வேலுப்பிள்ளையுடையது ஆகும்.

"இனிப்பாடமட்டேன்" என்ற நாவல் மதுரை அமரிக்கக் கல்லூரியில் எம்.ஏ.உயர்வகுப்புப் பாட நூலாக உள்ளது. மலைய மக்களிடையே காணப்படும் வாய்மொழி இலக்கியமான நாட்டார் பாடல்களைத் தொகுத்து "மலையக மக்கள் பாடல்கள்" என்ற தலையங்கத்தில் நூலாக வெளியிட்டுள்ளார்.



இரட்டையர்களில் ஒருவரான கே.கணேஸ் கவிதை மொழி பெயர்ப்பு என்று தன் ஆளுமையை வெளிப்படுத்தியுள்ளார். 1946இல் கே.இராமநாதனுடன் சேர்ந்து பாரதி என்ற இலக்கியச்சஞ்சிகையை நடத்தியுள்ளார். இந்திய எழுத்தாளர்களான பிரேம்சந்த் கே.ஏ.அப்பாஸ், முல்க்ராஜ் ஆனந்த் போன்றவர் கவிதைப் படைப்புக்களை மொழி பெயர்த்துள்ளார். ஹோசிமின் கவிதைகள், லூசுன் கதைகள் ஆகியவற்றை மொழிபெயர்த்து நூலாக வெளியிட்டுள்ளார்.

1956ஆம் அண்டுக்குப்பின்னரே மலையகத்தில் கல்வி எல்லோருக்கும் உரிய சொத்தாக மாறியது. இதே வேளையில் தமிழகத்தில் மணிக்கொடி சகாப்தம் உதயமாகியது. இதன் தாக்கம் மலையகத்தை எட்டிப்பார்க்கத் தவறவில்லை. பெரியார் ஈ.வே.ராவின் திராவிடக்கழகம், திராவிட முன்னேற்றக்கழகம் ஆகியவற்றின் பிரசார ஏடுகளும் பாரதிதாசன் கவிதைகள் நாடக நூல்களும் மலையகத்திற்கு வரத்தொடங்கின. இதன் தாக்கம் மலைய இளைய தலைமுறையினரிடையே ஒரு மாற்றத்தையும் மறுமலர்ச்சியையும் ஏற்படுத்தத் தவறவில்லை. இதனைத்தொடர்ந்து மலையக இலக்கிய வளர்ச்சியில் ஓர் அபரிமிதமான விழிப்புணர்வு 60 களில் ஏற்பட்டது. இலக்கிய உலகில் புதுமைப்பார்வையும் புதிய வீச்சுக்களும் உதயமாகின.

**அன்ரனி ஜீவா**

(தொடரும்)



சாவகச்சேரி பிரதேச சபைச் செயலர் பதவியிலிருந்து ஓய்வுபெற்று தற்போது வடக்கு உள்ளூராட்சி அமைச்சின் நிர்வாக அலுவலராகப் பணிபுரியும் எஸ்.சிவராஜலிங்கத்தின் பணி நயப்பு விழா அண்மையில் அல்வாய் கலையகத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் ஜப்பான் பயணம் தொடர்பான அனுபவப் பகிர்வு குறித்து விரிவுரையாளர் இ.இராஜேஸ்கண்ணன் உரையாற்றுவதனையும் முன்னாள் அதிபர் கி.கணேசன், ஆசிரியர் ஆ.க.சி.கந்தசாமி ஆகியோர் பணி நயப்புரையாற்றுவதனையும் அதிபர் நவநீதமணியுடன் சிவராஜசிங்கம் அவரது பாரியார் ஆகியோர் நிற்பதனையும் படங்களில் காணலாம்.

# ஐரோ.ஒன்றிய பாராளுமன்றில் நாளை இலங்கை தொடர்பில் அவசர விவாதம்

(கொழும்பு)

நிபுணர்குழு அறிக்கை தொடர்பில் ஐரோப்பிய ஒன்றியம் எவ்வித கருத்துக்களையும் வெளியிடவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய நாடுகள் நிபுணர்குழு அறிக்கை கடந்த மாதம் வெளியிடப்பட்டது.எனினும் இந்த விடயம் தொடர்பில் ஐரோப்பிய ஒன்றியம் தமது நிலைப்பாட்டை முன்வைக்கவில்லை.

நிபுணர்குழு அறிக்கை தொடர்பில் கருத்து வெளியிடமுடியாது எனவும் ஐரோப்பிய ஒன்றியத்தின் நிலைப்பாடு இதுவரையில் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவில்லை எனவும் அந்த அமைப்பின் இலங்கைக்கான பிரதிநிதி பேர்னாட் சவேஜ் தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஐரோப்பிய ஒன்றிய பாராளுமன்றில் நாளை வியாழக்கிழமை இலங்கை தொடர்பில் அவசர விவாதம் நடத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

க்றீன் கட்சியை சேர்ந்த ஐம்பது உறுப்பினர்களால் விடுக்கப்பட்ட கோரிக்கையை அடுத்து இலங்கை விவகாரம் குறித்து விவாதம் நடத்தப்படவுள்ளது. (ஸ்ரீ-2)

# புண்ணிய கிராம நிகழ்ச்சித் திட்டம்

(யாழ்ப்பாணம்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் தீவக பிரதேசத்திற்கான புண்ணிய கிராம நிகழ்ச்சித் திட்டம் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமைகாலை 9மணிக்கு வேலணை பெருங்குளம் முத்துமாரி அம்மாள் ஆலயத்தில் இந்து சமய கலாசார அலுவலக திணைக்கள அபிவிருத்தி உதவியாளர் எஸ். உதயபாலன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் வேலணை பிரதேச சபை செயலாளர் கே.தவராசா கலந்து கொள்ளவுள்ளார்.

அத்துடன் மனித விழுமியங்களை மேம்படசெய்தல் தொடர்பாக யாழ். சின்மயா மிஷன் பிரமச்சாரி யாக்ரத்சைதன்யா சுவாமிகள், சைவவாழ்வியல் தொடர்பாக இரா.செல்வ வடிவேல். சமூகத்தை வழிநடத்தும் ஆன்மீகம் தொடர்பாக ந. நவராஜ் ஆகியோர் கருத்துரை வழங்கவுள்ளனர்.

(ஸ்ரீ-2)

# இறுதிக்கட்ட யுத்த அனுபவங்களை பகிர்ந்து கொள்ள 55 நாடுகளுக்கு அழைப்பு

பயங்கரவாதத்தை தோற்கடித்த இலங்கையின் அனுபவங்களை பகிர்ந்து கொள்ள 55 நாடுகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

விடுதலைப்புலிகளுடான இறுதிக்கட்ட யுத்தத்தின் அனுபவங்களை கொண்டு பயங்கரவாதத்தைத் தோற்கடித்த இலங்கையின் அனுபவங்கள் என்ற தலைப்பிலான கருத்தரங்கொன்றை இராணுவம் ஏற்பாடு செய்துள்ளது.

இதன்போது விடுதலைப்புலிகளுடான இறுதிக்கட்ட யுத்தத்திற்கு தலைமை தாங்கிய முப்படை அதிகாரிகளும் தங்கள் அனுபவங்களை சர்வதேச நாடுகளுடன் பகிர்ந்து கொள்ளவுள்ளனர்.நாட்டில் பயங்கரவாதம் தோற்கடிக்கப்பட்டபின் முப்படை அதிகாரிகள் நடாத்தும் முதலாவது கருத்தரங்கு இதுவாகும் என்று இராணுவம் குறிப்பிட்டுள்ளது.

எதிர்வரும் 31ஆம் திகதி தொடக்கம் ஜுன் மாதம் இரண்டாம் திகதிவரை நடைபெறவுள்ள பிரஸ்தாப கருத்தரங்கில் பங்குகொள்ளுமாறு 55 நாடுகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக இராணுவப்பேச்சாளர் உபய மெதவல அறிவிக்கின்றார்.

கருத்தரங்கில் கலந்து கொள்வது தொடர்பில் தற்போதைக்கு முப்பத்தியொரு நாடுகளின் இராணுவ அதிகாரிகள் தங்கள் வருகையை உறுதிப்படுத்தியுள்ளதாகவும் இராணுவப் பேச்சாளர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.(ஸ்ரீ-2)

# கரவெட்டி கோட்ட தமிழ்த்தின போட்டி முடிபுகள் - 2011

கரவெட்டி கோட்ட பாடசாலைகளுக்கிடையிலான தமிழ் மொழித்தினப் போட்டி முடிபுகள் கோட்டக் கல்விப் பணிப்பாளரினால் அறிவிக்கப்பட்டுள்ளன. இதில் முதல் மூன்று இடங்களைப் பெற்றோர் விபரம் வருமாறு,

**பிரிவு -1**

**எழுத்து- ஆக்கம்**

த.தாரிணி (யா/ஞானாசாரியார் கல்லூரி), ப. சாதுரியா (யா/அல்வாய் சின்னத்தம்பி வித்தி, இ. தசானா (யா/இமையாணன் அ.த.க.பாடசாலை).

**பேச்சு**

ம.அபிநயா (யாழ்/நெல்லியடி மெ.மி.த.க.பா), சி.சுரேந்தர் (யாழ்/மாணிக்கவாசகர் வித்தி, இ.வாகினி (யா/ஞானாசாரியார் கல்லூரி),

**பாவோதல்**

ம.கோபிகா (யாழ்/மாணிக்கவாசகர் வித்தி, ஆ. தர்சினி (யா/நெல்லியடி மெ.மி.த.க.பா) சி.சயந்தினி (யாழ்/இமையாணன் அ.த.க. பாடசாலை)

**வாசிப்பு**

ஞா.கிருஷானி (யா/கரணவாய் ம.வித்தி, வி. சஞ்சித் (யா/நெல்லியடி மெ.மி.த.க.பா), சு. திலக்ஷனா (யாழ்/விக்னேஸ்வர ஆரம்பப் பாடசாலை)

**ஆக்கத்திறன் வெளிப்பாடு**

ஸ்ரீ.ஆரணன் (யா/நெல்லியடி மெ.மி.த.க.பா), ந.சுலைக்ஷன் (யா/கரணவாய் ம.வி), ர.அபிராம் (யா/மாணிக்கவாசகர் வித்தி

**இசையும் அசைவும்**

ந.வின்சிகா(யா/மாணிக்கவாசகர் வித்தி, ர.சங்கவி (யா/நெல்லியடி மெ. மி.த.க.பா), பி. இந்து (யா/கரணவாய் மணியகாரன் தோ. வித்தி, ர.சங்கவி (யா/நெல்லியடி மெ.மி.த.க.பா),

**பிரிவு -2**

**கட்டுரை வரைதல்**

சி.கஜலக்ஷன் (யா/விக்னேஸ்வர ஆரம்ப பா), அ. நிருஷன் (யா/வல்வெட்டி இ.த.க.பா), க.மிலக்ஷன் (யா/ஞானாசாரியார் கல்லூரி),

**வாசிப்பு**

கெ.ரகுராஜ் (யா/விக்னேஸ்வராக் கல்லூரி), சி.வித்தியா (யா/யாக்கரு வி.வி), அ. நூர்ஜன் (யா/ உடுப்பிட்டி. அ.மி.கல்லூரி)

**பேச்சு**

ஜெ.மதுரா (யா/ வடமராட்சி. ம.ம.க), வி. கங்காகௌரி (யா/ வல்வெட்டி இ.த.க.பா), ஸ்ரீ. மதுவர்ணா (யா/ கம்பர்மலை அ.த.க.வி),

**பாவோதல்**

ஜெ. நிலாந்தி (யா/ நெல்லியடி ம.ம.வி), கு.டர்மி (யா/ உடுப்பிட்டி ம.கல்லூரி), மோ. டிஷாஜா (யா/ வல்வெட்டி இ.த.க.வி)

**இசை (தனி)**

ர.ஆர்த்திகா (யா/ வடமராட்சி ம.ம.வி), ஜெ. சூரியகாந் (யா/ தேவரையாளி இ. கல்லூரி), ஜெ.கஜவதனி (யா/உடுப்பிட்டி ம. கல்லூரி)

**நடனம் (தனி)**

சி.லக்சிகா (யா/ நெல்லியடி ம.ம.வி), சு.வைஷ்ணவி யா/ வடமராட்சி ம.ம.வி), ந.அபிஷா (யா/ விக்னேஸ்வராக் கல்லூரி)

**பிரிவு -3**

**கட்டுரை வரைதல்**

தே. கலைமகள் (யா/நெல்லியடி ம.ம.வி), சி. சிந்துஜா (யா/ கரணவாய் ம.வி) , ஸ்ரீ. தேனுகாஷினி (யா/ விக்னேஸ்வராக் கல்லூரி)

**பேச்சு**

த.அபிசேகா (யா/நெல்லியடி ம.ம.வி), வ.சங்கீர்த்தனா (யா/வடமராட்சி ம.ம.கல்லூரி), மு.சுபிர்ணா (யா/ ஞானாசாரியார் கல்லூரி),

**பாவோதல்**

வி.பாலகங்கா (யா/ வல்வெட்டி இ.த.க.பா), கி.யுவேகா (யா/ நெல்லியடி ம.ம. வித்தி, வி.நிதர்சன் (யா/ யாக்கரு வி.வி)

**இசை (தனி)**

ஜெ.லாவண்யா (யா/ வடமராட்சி ம. ம.கல்லூரி), பா. பாரதி, த. சாதித்தியன் (யா/ உடுப்பிட்டி ம.கல்லூரி),

**பிரிவு -4**

**கட்டுரை வரைதல்**

ஈ.தர்சினி (யா/விக்னேஸ்வரக்கல்லூரி), இ.ஸ்ரீதிவாகரன் (யா/நெல்லியடி ம.ம.வி), செ. கீர்த்தனா (யா/ இமையாணன். அ.த.க.பா). (தொடரும்)




# வீதி திருத்தப்படுமா?

சுன்னாகத்தில் இருந்து கந்தரோடை ஊடாக மாகியப்பிட்டி செல்லும் வீதியில் அமைக்கப்பட்டுள்ள மதகுகளில் இரண்டு மதகுகள் திருத்தம் செய்யும் பொருட்டுக் கடந்த மழைக் காலத்திற்கு முன் வீதியின் நடுப்பக்கத்தில் இருந்து வீதியோரம் வரை குறுக்காக வெட்டப்பட்டு கொங்கிறீற் போடப்பட்டது.


மற்றப்பக்கம் இன்னும் கொங்கிறீற் போடப்படவில்லை. கொங்கிறீற் போடுவதற்காக வெட்டிய குழியில் அள்ளப்பட்ட மண்ணை வீதியின் மறுபக்கத்தில் கொட்டி வீதியை அகலமாக்கி விட்டிருந்ததாலும் கனரக வாகனங்கள் போவதால் அந்த வீதி மிகக் கடுமையாகச் சேதமடைந்துள்ளது.


768 பாதை இலக்க மினி பஸ் சேவையும் இந்த வீதி வழியாகவே நடைபெறுகின்றது. வீதி சீரற்று இருப்பதாலும் மதகுகள் சேதமடைந்து இருப்பதாலும் குறிப்பிட்ட நேரத்தில் சேவைகளைச் செய்ய முடியாது மினிபஸ் சாரதிகள் திண்டாட வேண்டி உள்ளது. ஸ்கந்தவரோதயாக் கல்லூரிக்கு மாணவர்கள் வரும் வேளைகளில் போக்குவரத்து நெருக்கடி ஏற்படுவதுண்டு. இந்தத் தடைகளைத் தாண்டி மினிபஸ் சாரதிகளினால் தமக்குரிய நேரத்தில் பிரயாணம் செய்யமுடியாமல் நேரக்கணிப்பாளர்களுக்கு தாமதப்பணம் செலுத்த வேண்டி ஏற்படுகின்றது. இந்த வீதியில் வாகனங்கள் வேகமாக ஓடும்போது வில்லுத்தகடு உடைதல், காற்றுப் போதல், உதிரிப்பாகங்கள் கழன்று விழுதல் எனப் பல்வேறு பிரச்சினைகள் வாகனங்களுக்கு உண்டாகின்றன.

எனவே இவ்வீதி திருத்தப் பணியில் ஈடுபட்டுள்ள வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் இந்த வீதியையும், உடைக்கப்பட்டுள்ள இரு மதகுகளையும் உடனடியாகத் திருத்தி வாகனங்களின் போக்குவரத்துக்கு உதவுவார்களா? என எமது சங்கம் ஆவலாக உள்ளது.


என் கோபிராஜ்,
தலைவர்,
சிற்றூர்தி சேவைச் சங்கம் (768) ,
அளவெட்டி.

18)





19)



20) கீழே ABCDE எனத் தரப்பட்டுள்ள வாக்கியங்களை ஒழுங்கமைக்கும்போது வரும் சம்பவத்தைக் காட்டும் சரியான எழுத்துகள் கொண்ட விடையைத் தெரிவுசெய்க.

A) இப்போது பூஞ்செடிகள் நன்றாக நிமிர்ந்து அழகாக இருக்கின்றன.
B) குமுதினிக்கு நான்றாகச் சுகமில்லை
C) நாங்கள் பூம்பாத்திகளுக்கு நீர் பாய்ச்சினோம்
D) குமுதினியின் பூம்பாத்திக்கு இரண்டு நாட்களாக நீர் ஊற்றப் படவில்லை போலும்
E) குமுதினியைப் பார்க்க வந்த எங்களுக்கு அவளின் பூஞ்செடிகள் வாடிவதங்கிப் போயிருப்பது கண்டு கவலையாக இருந்தது.

1) BDECA 2) BEDCA 3) EDCAB

21) கருத்துப் பிழையில்லாத வாக்கியத்தைத் தெரிவுசெய்க.
1) மெல்ல மெல்ல நடந்து வந்த ஆமை ஒரு முயலைக் கண்டது.
2) மெல்ல மெல்ல நடந்து வந்த முயல் ஓர் ஆமையைக் கண்டது
3) ஆமையைக் கண்ட முயல் மெல்ல மெல்ல நடந்தது.


22) பின்வரும் அறிவுறுத்தல்களை அவதானித்து இலக்கத்தைக் கண்டுபிடியுங்கள். இது ஒரு மூன்றிலக்க எண்ணாகும். 1ம் இலக்கம் 728 இல் உண்டு. 725 இல் இல்லை. இரண்டாம் இலக்கம் 430 இல் உண்டு, 370 இல் இல்லை. மூன்றாம் இலக்கம் 293 இல் உண்டு, 203 இல் இல்லை அவ் எண் யாது?
1) 879 2) 209 3) 849


**23ஆம், 24ஆம் வினாக்களில் முதலில் தரப்பட்டுள்ள சோடிசொற்களிற்கிடையிலான தொடர்பினை புரிந்துகொண்டு தனித்துள்ள சொல்லுக்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.**


23) நீளத்திற்கு - மீற்றர் கோல் எனின் பாரத்திற்கு - ..........
1) தராசு 2) கிராம் 3) தூக்குதல்

24) வேம்பு - கசப்பு எனின் சந்தனம் - ...............
1) இனிப்பு 2) நிறம் 3) மணம்


25) உலகு, பதவி, விறகு எனும் சொற்கள் குறியீட்டு முறையில் எழுதப்பட்டிருக்கும் அவற்றிற்குரிய சரியான குறியீட்டுத் தொகுதிகளாக முறையே இருக்கக்கூடிய விடையைத்தெரிவு செய்க.

1) 

2) 

3) 

26) உரு 1ல் காட்டப்பட்டுள்ள சதுரக் கடதாசியை உரு 2ல் உள்ளவாறு நன்றாக மடித்து உரு 3ல் உள்ள நிழற்றிய பகுதியை வெட்டி யெடுத்து மீதிப்பகுதியை விரிக்கும் போது கிடைக்கும் வடிவம் யாது?




27) இரு பகுதிகளும் சமமாக இருக்கும் நிலையைத் தெரிவுசெய்க.
1) PRYZLMN - PRZYLMN 2) 37AYZ5L8 - 37AY5ZL8
3) மR357பா8 - மR357பா8

28) வீதியைக்கடக்கும் போது முதலில் வலது பக்கமும் பின்பு இடது பக்கமும் மீண்டும் வலது பக்கமும் பார்த்த பின்பே கடக்கவேண்டும். ஏனெனில்,
1) வாகனங்கள் தாமதமின்றி சென்றுவிடுவதற்காக
2) வாகனங்களால் ஏற்படும் விபத்துக்களைத் தவிர்த்துக் கொள்வதற்காக.
3) வீதி சட்டதிட்டங்களை மதிப்பதற்காக

29) மழை காலத்தில் தவளைகள் பெரிய சத்தத்துடன் கத்துகின்றன ஏனெனில்,
1) மழை பெய்யும் போது அவை மகிழ்ச்சி அடைகின்றன.
2) அவற்றிற்கு குளிர் தாங்க முடியாததாகையால்
3) தனது இனத்தவரை அருகில் அழைத்துக்கொள்ள


**ப ர ம த ய ா ள ன் எனும் சொல்லைப் 7 8 3 5 1 2 6 என எண்களில் காட்டலாம் எனின்,**


30) 'தளபதி' எனும் சொல்லை எவ்வாறு எண்களில் காட்டலாம்.
1) 5275 2) 5274 3) 5276

31) 51786 எனும் இலக்கங்களால் காட்டப்படும் சொல் எது?
1) தரயாபன் 2) தயாரபன் 3) தயாபரன்


**32 - 34 வரையுள்ள வினாக்களில் உள்ள முதலாவது படம் அடுத்துத்தரப்பட்டுள்ள மூன்று உருக்களுள் ஒன்றின் மேல் இருந்து பார்க்கும் போது தெரியும் தோற்றமாகும். முதற்படம் குறித்து நிற்கும் சரியான உருவை தெரிவு செய்க.**

32) 

33) 

34) 

**35 - 37 வரையிலான வினாக்களுக்கு விடையளிக்க பின்வரும் வட்ட வரிப்படத்தை அவதானிக்க.**


நீல நிறத்தை விரும்பும் பிள்ளைகள்  சிவப்பு நிறத்தை விரும்பும் பிள்ளைகள்



35) சிவப்பு நிறத்தை மட்டும் விரும்பும் பிள்ளைகள் எத்தனை பேர்?
1) 18 பேர் 2) 30 பேர் 3) 25 பேர்


36) நீல நிறத்தை விரும்பும் பிள்ளைகள் எத்தனை பேர்?
1) 23 பேர் 2) 7 பேர் 3) 30 பேர்

37) இங்கு காட்டப்பட்டுள்ள மொத்த சிறுவர்கள் எத்தனை பேர்?
1) 41 பேர் 2) 58 பேர் 3) 30 பேர்

**38 - 40 வரையிலான வினாக்களில் தரப்பட்டுள்ள உருக்களில் வித்தியாசமான உருவைத் தெரிவுசெய்க.**

38) 

39) 

40) 

(பகுதி II வெள்ளிக்கிழமை)

# அதிக சுகம் பெறும் யோகக்காரர் யார்?

### ஸ்திரீவச்ச யோகம்

சதுர்த்த கேந்திரமாகிய நான்காம் வீட்டுக் குரியவன் அல்லது அஷ்டமாதிபதி அல்லது லக்னாதிபதி குரூர அம்சம் பெற்றிருந்தாலும் குரூர கிரகங்களுடன் சேர்ந்திருந்தாலும் 4,6,8,12 போன்ற இடங்களில் குரூரக் கிர கங்கள் இருக்கப் பெற்றாலும் 4,6,8,12 பாவ இராசியாக அமைந்து குரூர கிரகங்கள் பாவ வீட்டில் இருந்தாலும் அவர்களுடன் கூடி குருபகவான் இருக்க இந்த யோகம் உண்டாகும்.

இந்த ஜாதகர் பெரிய முயற்சியால் அதிக சுகத்தை அடைவார். நல்ல செயல்களை அதிகமாகச் செய்வார். நீண்ட ஆயுளை

## ஜோதிடக் களம்

அடைவார்.இவருக்கு நிறையக் குழந்தைகள் உண்டு.சிலருக்கு இருதார யோகம் உண்டாகும். புத்தியால் பிரச்சினை களைச் சமாளிப்பார்.சந்தர்ப்பத்துக்குத் தகுந்தபடி வளைந்து கொடுப்பார். பெண்களால் பாராட்டப்படுவார்.

பிறந்த குலத்தின் பெயரால் இவர் அழைக்கப்படுவார்.உயர்ந்த வாகனங்களைப் பெற்று வாழக்கூடியவர். உறுதியான மனதைக் கொண்டவராக விளங்குவார். அதேநேரத்தில் நிறையப்பணம் சம்பாதித்து தான தருமங்கள் செய்வார்.30 வயதிற்கு மேல் சுகத்தை அடைந்து அரசியலில் ஈடுபடுவார். பெரும் பணம் தேடி வரும். பின்வயதில் மூச்சு சம்பந்தப்பட்ட தொல்லைகளால் அவதியுறுவார்.

### நஹூஷ யோகம்

லக்ன கேந்திரத்தில்குரூர கிரகம் இருந்து உச்ச அம்சத்தில் அல்லது திரிகோணத்தில் குரு இருந்து சனி அல்லது புதன் லக்னத்தை அடைய இலாபஸ்தானத்தில் பாவக்கிரகம் இருக்க இந்த நஹூஷ யோகம் உண்டாகும்.

இந்த ஜாதகர் அரசியலில் ஈர்க்கப்பட்டு மக்களால் தேர்ந்தெடுக்கப்படுவார். மந்திரியாவார்.எதையும் எளிதில் புரிந்து கொள்ளக் கூடியவர். இவரை சௌக்கியங்கள் தானே தேடி வரும்.

### மாதங்க யோகம்

பூர்வபுண்ணிய ஸ்தானமாகிய 5 ஆம் வீட்டுக்கு உடையவன் பகைவன் வீட்டில் இருந்து பகைவனுடன் கூடினாலும் பார்க்கப் பட்டாலும் 1,9,11 சுபக்கிரகங்கள் குரூர கிரகங்களுடன் கூட மாதங்க யோகம் உண்டாகும்.

இந்த ஜாதகர் பூர்வ ஜென்மத்தில் சிவபக்தராக இருந்து சிவனை பூஜித்ததால் பெரிய குடும்பத்தில் உயர்ந்த குணங்களையுடைய தகப்பனாருக்கு மகனாகப் பிறந்திருப்பார். முன்னோர்கள் செய்த தொழிலால் இவர் பெரும் புகழை அடைவார்.

எப்போதும் உறவினர்கள் இவரைச் சுற்றியே இருப்பார்கள். புகழும் இவரைத் தேடி வரும். தன் சுயபுத்தியால் நல்ல புகழை சிறிய வயதிலேயே அடைவார். ஒரு குழுவுக்குத் தலைவராகவோ, சிறந்த அரசியல் வாதியாகவோ விளங்குவார். அதேநேரத்தில் சிவபூஜையை தொடர்ந்து செய்வதாலும் வில்வ மரத்தை நடுவதாலும் பழி பாவங்களிலிருந்து மீண்டு வருவார்.

ஒருவரது ஜெனன ஜாதகத் தில் சூரியன் ஆட்சி உச்சமாகவோ, கேந்திர திரிகோணங்களிலோ அமைந்தால் (அந்த ஜாதகத்திற்கு யோகம்செய் யக்கூடியவராக அமைந்தும்) அந்த ஜாதகர் நிறைந்த செல்வத்தை சுலபமாகப் பெறுவார்.அரசியல் செல்வாக்கு மிக்கவராக விளங்குவார். சூரியன் வலுக் குறைந்தால் ஊழியனாக இருப்பார். பெயரளவில் அரசாங்க சம்பந்தம் பெறுவார்.




### கிரகங்கள் ஆட்சி செய்யும் வஸ்திரங்கள்

ஆரூடத்திலோ, ஜோதிடத்திலோ துணி சம்பந்தமான விடயம் வரும்போது, காணாமல் போனவரது துணியைப் பற்றியோ அல்லது ஒருமனிதன்உபயோகப்படுத்தும்துணியை அறிய வேண்டிய சந்தர்ப்பம் வரும் போதோ மஹரிஷி கீழ்க்கண்டவாறு உபதேசிக்கிறார்.

சூரியனது அம்சம் பிரதானமாக வரும் போது தடித்த ஆடையை பிரதானமாகச் சொல்லுவார். கிழிந்த அல்லது பழைய துணிகளை அல்லது கந்தல் துணிகளை சனி பகவானுக்கும் நடுத்தரமான துணிவகைகளை குருபகவானுக்கும் மிக தடித்த அழுத்தமான துணியை சுக்கிரனுக்கும் புதிய துணியை அல்லது வெண்மையான துணியை சந்திரனுக்கும் சிவப்புத்துணி அல்லது நெருப்புப் பற்றி எரிந்த துணியை செவ்வாய்க்கும் ஈரமான துணி, சிறிய அளவு கிழிந்த துணியை புதனுக்கும் பல துண்டுகள் சேர்த்து தைக்கப்பட்ட துணி இராகுவுக்கும் பல வர்ணங்கள் உடைய துணி கேதுவுக்கும் சொல்லப்பட்டுள்ளது.

சாதுர்யமான பண்டிதர்கள் பிரசன்னம், ஜோதிடம் போன்ற சந்தர்ப்பங்களில் இவற்றை உபயோகித்து பலன்கள் சொல்ல மஹரிஷிகள் வழிகாட்டுகிறார்கள்.

# த.தே.கூட்டமைப்புடனான பேச்சுவார்த்தையில் முஸ்லிம் தரப்பையும் இணைக்க வேண்டும்

## முஸ்லிம் காங்கிரஸ் வலியுறுத்து

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான அதிகாரப் பகிர்வு தொடர்பான பேச்சுவார்த்தைகளின் போது முஸ்லிம் தரப்பையும் இணைத்துக் கொள்ளுமாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வலியுறுத்தியுள்ளது.

யுத்தம் நடைபெற்ற காலத்தில் பாதிப்புக்குள்ளான ஒரு சமுதாயம் என்ற அடிப்படையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் அரசுக்கும் இடையில் நடைபெறும் பேச்சுக்களில் முஸ்லிம் தரப்பையும் இணைத்துக் கொள்ள வேண்டும். அத்துடன் பேச்சுக்களின் விபரங்கள் நாட்டு மக்களுக்குத் பகிரங்கப்படுத்தப்பட வேண்டும் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தவிசாளரும் பிரதி அமைச்சருமான பஷீர் சேகுதாவூத் தெரிவித்துள்ளார்.

உலகம் பூராவும் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளை எடுத்து நோக்கும் போது பகிரங்கத் தன்மை பேணப்படாத பேச்சுவார்த்தைகள் அனைத்தும் தோல்வியில் முடிவடைந்துள்ளமை வரலாறாகும். பிரச்சினைகளுக்கு உள்ளாகியுள்ள இரு தரப்புகளுடனும் பேச்சுக்கள் நடைபெறுகின்ற பொழுது அது குறித்து பொதுமக்களுக்குத் தெரியப்படுத்தப்பட வேண்டும். மக்களுக்குத் தெரியப்படுத்தப் படாத பேச்சுவார்த்தைகள் சட்டபூர்வமான பேச்சுவார்த்தைகள் அல்ல.


அத்துடன் பேச்சுக்களின் விபரங்கள் மக்களைச் சென்றடையாமல் தடுப்பது மக்களுக்குச் செய்யப்படுகின்ற துரோகமாகும். கடந்த 2002 ஆம் ஆண்டில் இருந்து இந்த நாட்டில் அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுக்களின் போது பகிரங்கமாகச் சொல்லப்பட்ட விடயங்களில் எந்தத் தோல்வியும் இடம் பெறவில்லை எனவும் இரகசியமாக நடத்தப் பட்ட பேச்சுக்களில் காணப்பட்ட உடன்பாடுகளால் பேசுக்கள் தோல்வியடைந்தன எனவும் பஷீர் சேகுதாவூத் சுட்டிக்காட்டியுள்ளார். (ஸ்ரீ-2)

# அம்மா பகவான் ஆன்மீக பிரார்த்தனை

ஸ்ரீ அம்மா பகவான் மூல மந்திர அர்ச்சனை நிகழ்வு நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை தொடக்கம் எதிர்வரும் 15 ஆம் திகதி வரை சுழிபுரம் ஸ்ரீ அம்மா பகவான் சற்சங்க ஆன்மீக பிரார்த்தனை மையத்தில் பி.ப. ஒரு மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

ஸ்ரீ அம்மா பகவானிடம் ஜஸ்வர்யம் வேண்டியும் அதற்கான தடைகளை நீக்கும் முகமாக 108 மூல மந்திர அர்ச்சனை நிகழ்வு நடைபெறவுள்ளது.

குடும்பமாக பக்தர்கள் வருகை தந்து பிரார்த்தனையில் ஈடுபடும் படி பிரார்த்தனை மையத்தினர் கேட்டுள்ளனர். ஏனைய யாழ். மாவட்டத்தில் உள்ள ஸ்ரீ அம்மா பகவான் சற்சங்கங்களிலும் மேற்படி நிகழ்வு இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-3)



வடமாகாண சபையின் நிதியுதவியுடன் கிளிநொச்சி, முல்லைத்தீவு, துணுக்காய் ஆகிய வலயங்களைச் சேர்ந்த வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு பிக்கப் வாகனங்கள் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறியினால் அண்மையில் வழங்கப் பட்டது. இதில் துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ். மேகநாதனிடம் வாகனத்தைக் கையளிப்பதைப் படத்தில் காணலாம். *(படங்கள்:- என்.குமார்)*

# கனிமொழி தவறு செய்திருந்தால் நிச்சயம் கைது செய்யப்படுவார்

## காங்கிரஸின் மூத்த தலைவர் ஹனுமந்தராவ் தெரிவிப்பு

(திருப்பதி)

கனிமொழி தவறு செய்திருந்தால் நிச்சயம் கைதுசெய்யப்படுவார் என காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவரும் மாநிலங்களவை உறுப்பினருமான வி.ஹனுமந்தராவ் தெரிவித்தார்.

கடந்த திங்கட்கிழமை திருமலை வந்த அவர் பெருமாளை வழிபட்ட பின்னர் செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்தபோது மேலும் கூறியதாவது,

சோனியா தலைமையிலான காங்கிரஸ் கட்சி ஊழலுக்கு எதிரானது. அதனால்தான் அண்ணா ஹசாரே போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து அவரது கோரிக்கையையும் நிறைவேற்றியது.

மேலும் பொதுநலவாய விளையாட்டுப் போட்டியில் ஊழல் நடைபெற்றதால் கல்மாடி கைதுசெய்யப்பட்டார். 2ஜி அலைக்கற்றை ஊழல் விவகாரத்தில் முன்னாள் மத்திய அமைச்சர் ஆ.ராசா கைதுசெய்யப்பட்டு சிறையிலுள்ளார். தி.மு.க. மாநிலங்களவை உறுப்பினர் கனிமொழி தற்போது நீதிமன்ற விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளார். அவர் தவறு செய்திருந்தால் நிச்சயம் கைதுசெய்யப்படுவார்.

அதேபோல அதிகளவில் சொத்து வைத்துள்ள ஆந்திர முன்னாள் முதல்வர் வை. எஸ். ராஜசேகர ரெட்டியின் மகன் ஜெகன் மோகன் ரெட்டி மீதும் விசாரணை மேற்கொள்ளப் படும். அவரும் தவறு செய்தது தெரியவந்தால் கைதுசெய்யப்படுவார் என்று தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# அரசு-கூட்டமைப்பு பேச்சுவார்த்தையின் அடுத்த சுற்று வெற்றி அளிக்கும்

## சஜின் டி.வாஸ் குணவர்த்தன எம்.பி. நம்பிக்கை

(கொழும்பு)

அரசு–தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பேச்சுவார்த்தையின் அடுத்து சுற்று வெற்றியளிக்கும் என சஜின்.டி.வாஸ் குணவர்த்தன எம்.பி. நம்பிக்கை தெரிவித்தார்.

ஒன்றையாட்சி என்ற தாரக மந்திரத்தை அடிப்படையாக வைத்து அரசாங்கத் தரப்பினருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கும் இடையில் நடைபெற்ற ஐந்து சுற்றுப் பேச்சுவார்த்தைகளின் போது கருத்துக்கள் பரிமாறிக்கொள்ளப்பட்டன.

இதுவரை இருதரப்பினருக்குமிடையில் கருத்து மோதல்களை தோற்றுவிக்கக் கூடிய எவ்வித பிரச்சினைகளும் எழவில்லையென வெளிவிவகார அமைச்சின் செயற்பாடுகளை கண்காணிப்பதற்காக நியமிக்கப்பட்டுள்ள பாராளுமன்ற உறுப்பினரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் அரசாங்கத் தரப்புக்குமிடையிலான பேச்சுவார்த்தைகளை ஒன்றிணைக்கும் குழுவின் செயலாளருமான சஜின்.டி.வாஸ் குணவர்த்தன தெரிவித்தார்.

அரசியல் சாசனத்துக்கு கொண்டுவரப்பட்ட அரசியலமைப்புக்கான 13ஆவது திருத்தத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கும் அதிகாரங்களை அடிப்படையாக வைத்தே இந்தப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றது என்று தெரிவித்த அவர் இதில் பொலிஸ் மற்றும் காணி அதிகாரத்தைத் தவிர மற்றைய அதிகாரங்களை வழங்குவதற்கு அரசாங்கத்தரப்பினர் கொள்கையளவில் இணக்கப்பாட்டைத் தெரிவித்ததாக கூறினார்.

பொலிஸ் அதிகாரத்தை மாகாண சபைகளுக்கே பெற்றுக்கொடுப்பதில் பிரச்சினை இருக்கிறது என்பதை சுட்டிக்காட்டிய அரசாங்கத்தரப்பினர் உடனடியாக எழுநூறு தமிழ் பொலிஸ் உத்தியோகஸ்தர்களை நியமிப்பதற்கும் தயாராக இருக்கின்றது என்ற தனது நிலைப்பாட்டை இந்தப் பேச்சுவார்த்தைகளின் போது எடுத்துரைத்தது.

அவசியமாயின் 10 ஆயிரம் தமிழ் பொலிஸ்காரார்களைக் கூட அரசாங்கம் நியமிக்க தயாராக இருக்கிறது என்பதையும் அங்கு அரசாங்கத் தரப்பினரால் முன்வைக்கப்பட்டதாக சஜின்.டி.வாஸ் குணவர்த்தன மேலும் தெரிவித்தார்.

அரசியலமைப்புக்கான 13ஆவது திருத்தத்தில் உள்ள காணி அதிகாரங்கள் மற்றும் அதிகாரத்தைப் பகிர்ந்துகொள்ளும் செயற்பாடுகளுக்கும் கூடியவரையில் இணக்கப்பாட்டை தெரிவிக்க அரசாங்கம் தயாராகவிருக்கிறது. அதிகாரப் பரவலாக்கலின் முதல் நடவடிக்கையாக அரசாங்கத் தரப்பினர் செனட் சபை ஒன்றை அதாவது இரண்டாவது சபையொன்றை இலங்கை அரசியல் சாசனத்தின்கீழ் அமைப்பதற்கும் விருப்பம் தெரிவித்துள்ளனர் என்று அவர் மேலும் கூறினார்.

இந்த யோசனையின் படி செனட் சபையை எந்த நடைமுறையின் கீழ் உருவாக்குவது என்பதில் இதுவரையில் இறுக்கமான கருத்துக்கள் எதுவும் முன்வைக்கப்படவில்லையென்று தெரிவித்த சஜின்.டி.வாஸ் குணவர்த்தன செனட் சபையை பாராளுமன்ற உறுப்பினர்களின் வாக்குகளிலிருந்து தெரிவு செய்வதா அல்லது உள்ளூராட்சி மன்றங்களின் மூலம் தெரிவு செய்வதா அல்லது வேறு ஒரு வகையில் தேர்தல் மூலம் தெரிவுசெய்வதா என்பது பற்றி இதுவரையில் தீர்க்கமான முடிபு எதுவும் எடுக்கப்படவில்லையென்றும் கூறினார்.

எவ்வாறாயினும் செனட்சபையில் உள்ள உறுப்பினர்களில் மூன்றில் ஒரு பங்கிற்குக் கூடுதலாக சிறுபான்மையினர் பிரதிநிதித்துவம் வகிப்பார்கள் என்று அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.



13ஆவது திருத்தம் பற்றி விளக்கமளித்த சஜின் டி.வாஸ். குணவர்த்தன இந்திய அரசாங்கத்தின் ஆதரவைப்பெற்றுள்ள 13ஆவது திருத்தச் சட்டத்தை சரியான முறையில் நடைமுறைப்படுத்தினால் இப்போது இருப்பதைவிட மாகாண சபைகளுக்கு ஆகக் கூடிய அதிகாரங்களை பெற்றுக்கொடுக்க முடியும் என்றும் கூறினார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் ஒரு நியாயமான தீர்வை எதிர்பார்க்கிறார்கள் என்றும் ஆகவே சில தினங்களில் நடைபெறவுள்ள 6ஆவது சுற்றுப் பேச்சுவார்த்தை நல்ல வெற்றியளிக்குமென்று தமக்கு நம்பிக்கையிருப்பதாகவும் அவர் கூறினார். (ஸ்ரீ-2)

## தஞ்சம் கோரும் அகதிகளால் அரசியல் நெருக்கடிக்குள்ளாகும் அவுஸ்திரேலியா

அவுஸ்திரேலியாவில் தஞ்சக் கோரிக்கை விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படும் போது குடியேற்றவாசிகள் தங்க வைக்கப்படும் முகாம்களில் ஆட்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றமை அந்நாட்டு அரசாங்கத்துக்கு வெறும் ஆளணி வளப்பிரச்சினையை மட்டுமல்ல பெரும் அரசியல் ரீதியான நெருக்கடியையும் ஏற்படுத்தி வருகின்றது.

இந்து சமுத்திரத்தில் அவுஸ்திரேலியாவின் ஆளுமைக்குட்பட்ட கிறிஸ்மஸ் தீவிலுள்ள முகாமிலும் சிட்னியிலுள்ள விலாவூட் உயர் பாதுகாப்பு பிராந்திய முகாமிலும் கடந்த ஆறு வாரங்களாக நடந்து வரும் வன்முறைகள் நிலைமையை இன்னும் மோசமாக்கி விட்டிருக்கின்றன.

அவுஸ்திரேலியாவில் வெளிநாட்டுக் குடியேறிகள் வந்து நுழைகின்ற வழியை மறிப்பதற்காக அந்நாடு மலேசியாவுடன் உடன்பாடு ஒன்றுக்கு வருவது பற்றி பேசியுள்ளது.

இந்தோனேசியாவிலிருந்து ஆட்களைக் கொண்டுவரும் கடத்தல்காரர்களை எதிர்கொள்ள இந்த உடன்படிக்கை மிக வசதியாக இருக்கும் என்று அரசாங்கம் கூறுகின்றது.

கடத்தல்காரர்களின் உத்திகளை முறியடிக்க இந்த புதிய வழி பெரிதும் உதவும் என்பது தான் எதிர்பார்ப்பு. கைச்சாத்தாக வேண்டிய நிலையில் இருக்கின்ற இந்த திட்டத்தின் கீழ் தஞ்சம் கோருவோரில் 800 பேரை அடுத்த நான்கு ஆண்டுகளில் பொறுப்பேற்க மலேசியா இணங்கியுள்ளது. அவர்களின் கோரிக்கைகள் ஐ.நா.வால் பரிசீலிக்கப்படவுள்ளது.

அவுஸ்திரேலியாவின் கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழைவோர் இனிமேல் நேரடியாக மலேசியாவுக்கு அனுப்பப்படமுடியும். அவர்களின் கோரிக்கைகள் வரிசை அடிப்படையில் மலேசியாவிலேயே பரிசீலிக்கப்படும் என்று அவுஸ்திரேலிய பிரதமர் ஜூலியா கில்லார்ட் கூறியுள்ளார்.

ஆனால் தஞ்சம் கோருவோரால் அவுஸ்திரேலியா சந்தித்துள்ள பிரச்சினைகளுக்கு சற்றும் பொருந்தாத தீர்வு என்று இதனை கூறியுள்ள அந்தநாட்டின் எதிரணியினர் அரசாங்கம் பதற்றத்தில் எடுத்திருக்கின்ற நடவடிக்கை இதுவென்றும் வர்ணித்துள்ளனர்.

அண்மைக்காலமாக கப்பல்களில் வந்து குவியும் அகதிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றமையால் இந்த விவகாரத்தில் மிகக்கடுமையான நடவடிக்கைகள் தேவை என்ற கோரிக்கை அங்கு பெருமளவில் வலுத்து வருகின்றது. (ஸ்ரீ-2)

## நிபுணர்குழு தொடர்பான ஐ.தே.கட்சியின் அறிக்கை அடுத்த வாரத்தில் சமர்ப்பிப்பு

ஐக்கிய நாடுகள் நிபுணர் குழு தொடர்பான ஐக்கிய தேசியக் கட்சியின் அறிக்கை அடுத்த வாரமளவில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

நிபுணர் குழு அறிக்கையின் உட்கிடக்கைகள் தொடர்பில் ஆய்வு நடத்தும் நோக்கில் முன்னாள் பிரதமரின் செயலாளர் பிரட்மன் வீரக்கோன் தலைமையிலான குழுவொன்று நியமிக்கப்பட்டிருந்தது.

நிபுணர் குழு அறிக்கையின் விபரங்கள் உன்னிப்பாக அவதானிக்கப்பட்டு இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டு வருவதாக கட்சி வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த மாதத்தில் வெளியிடப்பட்ட நிபுணர் குழு அறிக்கை தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் உத்தியோகபூர்வ நிலைப்பாடு இதுவரையில் வெளியிடப்படவில்லை. பிரட்மன் வீரக்கோன் தலைமையிலான ஆய்வுக் குழுவின் அறிக்கையை பரிசீலனை செய்ததன் பின்னரே உத்தியோகபூர்வ நிலைப்பாடு வெளியிடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

## விலங்கு விசர்நோய் தடுப்பூசியேற்றல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைக்குட்பட்ட குருநகர் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவிற்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த்தடுப்பூசி வழங்கப்படவுள்ளது.

இதற்கமைய நாளை வியாழக்கிழமை காலை 9.00 மணி தொடக்கம் மதியம் 12.30 மணிவரை யுவானியார் ஆலயத்திலும், நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9.00 மணி தொடக்கம் மதியம் 12.30 மணி வரை சந்தன மாதா கோவிலடியிலும் வைத்து ஏற்றப்படவுள்ளது.

எனவே இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தமது வளர்ப்பு நாய்களுக்கு மேற்படி தடுப்பூசியினை ஏற்றிக்கொள்ளுமாறு யாழ். மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ம.மரியதாசன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)


சீர்மேவு பச்சிலைப்பள்ளி (பளை) புலோப்பளை பதிதனில்
கோயில்கொண்டு எழுந்தருளி இருக்கும்
அருள்மிகு அறத்திக் கண்ணகா பரமேஸ்வரி அம்பாள் திருக்கோயில்
வருடாந்த பொங்கல் உற்சவ விஞ்ஞாபனம்

அம்பிகை அடியவர்களே!

ஸ்வஸ்திஸ்ரீ மங்கலகரமான கரவருடம் வைகாசித் திங்கள் பௌர்ணமியாந்த விசாகப் பொங்கல் பெருவிழா எதிர்வரும் (17.05.2011) செவ்வாய்க்கிழமை நடைபெற எல்லாம் வல்ல அம்பிகையின் திருவருள் கைகூடியுள்ளது. எனவே நேர்த்திக்கடன் நிறைவேற்றும் அடியவர்கள் மற்றும் அம்பிகை அடியவர்களுக்கு மேற்படி விஞ்ஞாபனத்தை அறியத் தருகின்றோம்.

இங்ஙனம்

ஆதீனகர்த்தாவும் பிரதமகுருவுமாகிய சிவஸ்ரீ ந.பிரபாகரக்குருக்கள்
சிவத்திரு–காண்டீபன் ஐயர் மற்றும் ஆலய பரிபாலனசபையாரும்.


## வடக்கின் விவசாய நடவடிக்கைக்காக அமெரிக்கா 572 மில். ரூபா நிதியுதவி

(கொழும்பு)

வடக்கில் மீளக்குடியேறிய மக்களின் விவசாய நடவடிக்கை அபிவிருத்திக்காக அமெரிக்கா 572 மில்லியன் ரூபாவை இலங்கைக்கு நிதியுதவியாக அளித்துள்ளது.

அதன் ஒரு கட்டமாக வடக்கின் விவசாயிகளுக்கு நீரிறைக்கும் இயந்திரங்கள் யு.எஸ். எயிட் நிதியுதவியுடன் அண்மையில் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளன. அவை வடக்கின் 17 ஆயிரம் குடும்பங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படவுள்ளன.

அதன் மூலம் வடக்கில் விவசாயத்துறையில் மறுமலர்ச்சியொன்றை உருவாக்கி, வடக்கு மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தக் கூடியதாக இருக்கும் என்று எதிர்பார்ப்பதாக அமெரிக்கத் தூதரகம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

அண்மையில் அமெரிக்காவின் துணை இராஜாங்கச் செயலாளர் ரொபேர்ட் பிளேக்கின் இலங்கை விஜயத்தின் போது வடக்கு விவசாய அபிவிருத்திக்கென இயந்திராதிகள், உபகரணங்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(ஸ்ரீ-2)

வாக்குறுதி கொடுப்பவன் அதற்கு கடனாளி ஆகிறான் -தலாமூத்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# நிபுணர் குழுவின் பரிந்துரைகளுக்கு பிரான்ஸ் பூரண ஆதரவை வழங்கும்

## அந்நாட்டு வெளிவிவகார அமைச்சு அறிவிப்பு

ஐ.நா.நிபுணர் குழுவின் அறிக்கைக்கு சர்வதேச சமூகத்துடன் இலங்கை இணைந்து செயற்பட வேண்டும் என்று பிரான்ஸ் வெளிவிவகார அமைச்சு வெளியிட்டுள்ளஅறிக்கையில் தெரிவித்துள்ளது.

ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூன் அமைத்த நிபுணர் குழுவின் பரிந்துரைகளுக்கு பிரான்ஸ் பூரண ஆதரவை வழங்கும்.

நிபுணர் குழுவின் அறிக்கையில் இலங்கையில்இடம்பெற்ற போரின் போது மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை மீறல்கள் மற்றும் சர்வதேச சட்டத்தை மீறியமை தொடர்பாக சுயாதீன விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த 2009 ஆம் ஆண்டு தெரிவித்ததை போல அனைத்துலக சர்வதேச விசாரணைக்குழு அமைக்கப்படவேண்டும் என்பதை நாம் வலியுறுத்துகின்றோம் என்று பிரான்ஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2010 ஆம் ஆண்டு கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவை இலங்கை அரசாங்கம் அமைத்துள்ளது. இந்த ஆணைக்குழுவும் ஐ.நா செயலாளர் நாயகத்தினால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவும் முக்கியமானவை.

எனவே இலங்கை அரசாங்கம் இன நல்லிணக்கம் ஏற்பட முயற்சிக்க வேண்டும் என்று பிரான்ஸ் மேலும் தெரிவித்துள்ளது. (ஶ்ரீ-2)

# மந்திரியும் தளபதியும் இரு வடிவத்தில் கூறிய ஓர் உண்மை

உயர் பாதுகாப்பு வலயம் என்ற ஒன்று இனிமேல் இல்லை. இவ்வாறு அமைச்சர் பசில் ராஜபக்ஷ நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார்.

உயர் பாதுகாப்பு வலயமாக இருந்த வலி. வடக்கு மீள் குடியேற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய அமைச்சர் பசில் ராஜபக்ஷ கூறிய விடயமும்- வலி. வடக்கில் மக்களை மீள் குடியமர்த்தும் ஆரம்ப நிகழ்வும் திருப்தி தருவனவாகும்.

தமிழ் மக்களின் வாழ்விடங்களில் இனிமேல் உயர் பாதுகாப்பு வலயம் இல்லை என்பதன் கருத்து பொதுமக்கள் தங்கள் சொந்த இருப்பிடங்களுக்குச் செல்லவும் அங்கு குடியிருக்கவும் முடியும் என்பதாகும்.

எனவே உயர் பாதுகாப்பு வலயம் நீக்கப்படுவதும், அப் பகுதிகளில் மக்களைக் குடியமர்த்துவதும் வெற்றிகரமாக அமைவதற்கு மீள் குடியமர்விற்கான அடிப்படை வசதிகள் வழங்கப்படுவது கட்டாயமாகும்.

சுமார் 20 வருடங்களாக தங்கள் இருப்பிடங்களை விட்டு வெளியேறி, அகதி அந்தஸ்துடன் வாழ்ந்த மக்கள் தமது சொந்த இடங்களுக்கு செல்லும்போது அவர்களுக்கு இருக்கக் கூடியது எதுவுமில்லை.

குடியிருந்த வீடுகள் கற்கும்பலாகிய கோலம், ஓடித்திரிந்த நிலங்கள் காடாகிப் போன காட்சி, இந் நிலையில் இங்கு குடியிருப்பதற்கான சூழமைவு சாதகமாக அமையாது.

எனவே மக்கள் குடியிருப்பதற்கு வசதியாக அவர்களின் வாழ்விடங்களிலுள்ள பற்றைகள்- காடுகளை அழித்து உதவும் பணியை அரச அமைப்புக்கள் எடுத்தாக வேண்டும்.

அதேநேரம் அவர்களுக்குத் தேவையான குடியிருப்பு வசதிகள், குடிநீர் வசதிகள், மருத்துவ வசதிகள், பாலர் பாடசாலை உள்ளிட்ட பல்வேறு தேவைகளையும் ஏற்பாடுகளையும் விரைவாகச் செய்து கொடுக்கும் பொறுப்புக்களை அரசும், பொது அமைப்புக்களும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

தமிழர் பகுதிகளில் உயர் பாதுகாப்பு வலயம் என்பது இனிமேல் இல்லை என்ற அமைச்சர் பசில் ராஜபக்ஷவின் முக்கியமான செய்தி வெளிவருவதற்கு முதல் நாள்,

யாழ்ப்பாணக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க, யாழ்ப்பாணம் கத்தோலிக்கப் பாதுகாவலன் மண்டபத்தில் யாழ் வர்த்தகர்களுடனான சந்திப்பொன்றில் உரையாற்றும்போது, யாழ். குடாநாட்டில் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகள் என எதுவும் இருக்க மாட்டாது என குறிப்பிட்டுள்ளார்.

அதாவது யாழ். குடாநாடு முழுவதிலும் இராணுவத்தின் பாதுகாப்பு நடவடிக்கைகளும் ரோந்து நடவடிக்கைகளும் இருக்கும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

இதைச் சுருங்கக் கூறின் குடாநாட்டு மக்களின் இருப்போடு படையினரின் பிரசன்னமும் இருக்கும் என்பதாகும்.

இங்குதான் மந்திரியும், தளபதியும் ஒரு கருத்தை- உண்மையை இரு வடிவங்களில் கூறியுள்ளனர். அதாவது உயர்பாதுகாப்பு வலயம் இல்லை என்பது உண்மை. அதற்காக படையினர் இல்லாமல் இல்லை. படையினர் இருந்தால் அவர்களுக்கு இருப்பிடம் தேவை.

ஆக, உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயர் இல்லாதொழிக்கப்பட்டாலும் படையினரின் இருப்பிடங்கள் இருக்கவே செய்யும்.

# 2010ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பட்டியல் இம்மாத இறுதியில் உறுதிப்படுத்தப்படும்

## தேர்தல்கள் செயலகம் தெரிவிப்பு

(கொழும்பு)

2010ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பட்டியல் எதிர்வரும் 31ஆம் திகதி உறுதிப்படுத்தப்படும் என தேர்தல்கள் செயலகம் குறிப்பிட்டுள்ளது.

வாக்காளர் பெயர்ப்பட்டியலுக்கான அனைத்துத் திருத்தங்களும் தற்போது தயாரிக்கப்பட்டுள்ளதாக மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் டபிள்யூ.பி. சுமனசிறி தெரிவிக்கின்றார்.

உறுதிப்படுத்துவதற்காக வாக் காளர் பெயர்ப்பட்டியல் தேர்தல்கள் ஆணையாளரிடம் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதன்பின்னர் 2010ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பெயர்ப்பட்டியல் நாடு முழுவதிலும் உள்ள பிரதேச செயலகங்களில் காட்சிப்படுத்தப்படவுள்ளன.

வாக்காளர் பெயர்ப்பட்டியலை கணனிமயப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் குறிப்பிடுகின்றார். (ஶ்ரீ-2)

# இலங்கை மற்றும் சர்வதேச நாடுகளுக்கு இடையில் இருதரப்பு வர்த்தக மேம்பாடு

(புத்தளம்)

இலங்கை மற்றும் சர்வதேச நாடுகளுக்கிடையில் இரு தரப்பு வர்த்தகத்தை மேம்படுத்துவது தொடர்பாக வெளிநாட்டு தூதுவர்களுடன் நேற்றையதினம் சந்திப்பொன்று இடம் பெற்றுள்ளது.

இச்சந்திப்பின்போது கைத்தொழில் வணிகத்துறைஅமைச்சர்றிசாத்பதியுதீனை எதியோப்பியா, கானா,மோல்டோவா, சிலி,பங்களாதேஷ் மற்றும் ஜப்பான் ஆகிய நாட்டுத் தூதுவர்கள் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் அலுவலகத்தில் இந்தச் சந்திப்பு இடம் பெற்றுள்ளது.

இலங்கையின் ஏற்றுமதியை அதிகரித்தல், புதிய முதலீட்டுச் சந்தர்ப்பங்களை இலங்கையில் ஏற்படுத்திக் கொடுத்தல் அத்தோடு வெளிநாட்டு வர்த்தகர்களை இலங்கையின் தற்போதைய அபிவிருத்தி நிலைகுறித்து கண்டறிய வருமாறு அமைச்சர் றிசாத் பதியுதீன் தூதுவர்கள் மற்றும் உயர்ஸ்தானிகரிடத்தில் வேண்டுகோள் விடுத்தார். (ஶ்ரீ-2)

# இவ்வருடத்தில் டெங்கு காய்ச்சல் காரணமான 42பேர் உயிரிழப்பு

## சுகாதார அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் டெங்கு காய்ச்சல் காரணமாக 42பேர் உயிரிழந்துள்ளதாக சுகாதார அமைச்சு குறிப்பிடுகின்றது. இந்தக் காலப்பகுதியில் 4 ஆயிரத்து 916பேர் டெங்குத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர்.

அத்துடன் கடந்த ஏப்ரல் மாதத்தில் மாத்திரம் டெங்குக் காய்ச்சல் காரணமாக எட்டுப்பேர் உயிரிழந்துள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்றுநோய் ஆய்வுப் பிரிவு தெரிவித்துள்ளது.

இம்மாதத்தின் கடந்த 10 நாட்களில் மாத்திரம் 90பேர் டெங்குக் காய்ச்சலினால் பீடிக்கப்பட்டுள்ளமை இனங் காணப்பட்டுள்ளது.

இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் கொழும்பு மாவட்டத்திலேயே அதிகளவான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (ஶ்ரீ-2)

# காரைநகரில் இருந்து மன்னாருக்கு பேருந்து

(யாழ்ப்பாணம்)

காரைநகரிலிருந்து பூநகரி ஊடாக மன்னார் வரையான பேருந்துச் சேவை யாழ் பேருந்து நிலையத்திலிருந்து தினமும் காலை 7, 8 மணிக்குப் புறப்பட்டு யாழ்ப்பாணம், சாவகச்சேரி, தனங்கிளப்பு ஊடாக பூநகரி- மன்னார் வரை பயணிக்கவுள்ளது.

அத்துடன் திருக்கேதீச்சர மகோற்சவத்தை முன்னிட்டு கடந்த 8ஆம் திகதி தொடக்கம் எதிர்வரும் 19 ஆம் திகதி வரை திருக்கேதீச்சரம் ஆலயத்திற்குச் செல்லும் பக்தர்களின் நன்மை கருதி திருக்கேதீச்சரம் ஆலயம் வரை சேவையிலீடுபடும் என கோண்டாவில் வடக்கு இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பிரதான பிராந்திய முகாமையாளர் கே. கேதீசன் அறிவித்துள்ளார். (ஶ்ரீ-2)

# சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்



மனிதன் இவ்வுலகில் தாமரை இலை யைப் போல வாழ வேண்டும் என்று ஶ்ரீகிருஷ் ணர் சொன்னார். அது தண்ணீரில் வளர்கிறது. ஆனால் தண்ணீரால் நனைவதில்லை. அது போல மனிதன் இந்த உலகில் வாழவேண்டும். இதயத்தை இறைவன்பால் வைத்து கைகளால் வேலை செய்ய வேண்டும். இவ்வுலக நன்மை அல்லது மறுவுலக நன்மை கருதி, இறைவனிடம் அன்பு செலுத்துவது நல்லது தான்.

ஆனால் அன்புக்காகவே அவனை அன்பு செய்வது சிறந்தது. 'எம்பெருமானே, எனக்குச் செல்வமோ, பிள்ளைகளோ, கல்வியோ வேண்டாம். உனது திருவுள்ளம் அதுவானால் நான் மீண்டும் மீண்டும் பிறக்கத் தயாராக இருக்கிறேன். ஆனால் நான் பலன் கருதாது உன்னிடம் அன்பு கொள்ளவும், தன்னலமின்றி அன்புக்காகவே அன்பு செய்யவும் அருள் செய்' என்கிறது ஒரு பிரார்த்தனை.

# 600 பேருடன் சென்ற படகு கவிழ்ந்ததில் நூற்றுக்கணக்கானோர் பலியென அச்சம்

(திரிபோலி)

லிபியாவிலிருந்து அகதிகளை ஏற்றிக் கொண்டு ஐரோப்பா நோக்கிச் சென்ற படகொன்று மத்திய தரைக்கடலில் கவிழ்ந்ததால் நூற்றுக்கணக்கானோர் பலியாகியிருக்கலாம் என அஞ்சப்படுவதாக அகதிகளுக்கான ஐ.நா. உயர்ஸ்தானிகராலயம் (யு.என். எச்.சி.ஆர்) தெரிவித்துள்ளது.

சுமார் 600 குடியேற்றவாசிகளுடன் சென்று கொண்டிருந்த இப்படகு கடந்த 6ஆம் திகதி கவிழ்ந்துள்ளது. இதுவரை 16 உடல்கள் மாத்திரம் கரையொதுங்கியுள்ளதாக அதிகாரிகள் நேற்று முன்தினம் அறிவித்தனர்.

விபியா மீது நேட்டோ படைகள் தாக்குதல் நடத்திவரும் நிலையில் அங்கிருந்து மேற்படி குடியேற்றவாசிகள் வெளியேற முற்பட்டுள்ளனர்.

மீட்பு நடவடிக்கைகளுக்கு யார் பொறுப்பாகவுள்ளனர் என்ற விபரம் வெளியாகவில்லை. எனினும் தமது கப்பல்களோ விமானங்களோ இம்மீட்பு நடவடிக்கையில் ஈடுபடவில்லை என நேட்டோ தெரிவித்துள்ளது.

குடியேற்றவாசிகளுடன் லிபியாவிலிருந்து ஐரோப்பாவுக்கு சென்றுகொண்டிருந்தபோது பல நாட்களாக அலைக்கழிந்த மற்றொரு கப்பலிலிருந்த 72 பேரில் 61 பேர் தாகத்தினாலும் பசியினாலும் உயிரிழந்ததாக செய்திகள் வெளியாகி ஒருநாளின் பின்னர் 600 பேருடன் மேற்படி படகு கவிழ்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

நேட்டோ அமைப்பின் கப்பலும் ஹெலிகொப்டரும் 72 பேருடன் சென்ற படகு தத்தளித்துக்கொண்டிருப்பதைக் கண்டபோதிலும் புறக்கணித்துச் சென்றதாகக் குற்றம் சுமத்தப்படுகிறது. எனினும் நேட்டோ அமைப்பு அதை மறுத்துள்ளது. குறித்த நாட்களில் இத்தாலிய யுத்தக் கப்பலான கரிபால்ட்டி மாத்திரமே அப்பகுதியிலிருந்த நேட்டோ தலைமையிலான கப்பல் எனவும் அதுவும் 100 மைல் தொலைவிலேயே இருந்ததாகவும் நேட்டோ தெரிவித்துள்ளது.

இந்நிலையில் ஆபத்தான நிலையிலிருக்கும் படகுகளைக் கண்டால் உதவியளிக்குமாறு மத்திய தரைக்கடலில் பயணிக்கும் கப்பல்களுக்கு யு.என்.எச்.சி.ஆர். வேண்டுகோள் விடுத்துள்ளது. (ஸ்ரீ-2)

## மன்மோகன்சிங், ஒபாமா தொலைபேசியில் பேச்சு

அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவுடன் இந்திய பிரதமர் மன்மோகன் சிங் கடந்த திங்கட்கிழமை இரவு தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு கலந்துரையாடியுள்ளார்.

இது குறித்து பிரதமர் அலுவலக செய்தித் தொடர்பாளர் ஒருவர் கூறுகையில், இந்திய-அமெரிக்க உறவுகளை மேலும் வலுப்படுத்துவது, இரு பிராந்தியங்களிலும் தற்போதைய சூழ்நிலை ஆகியவை குறித்து இரு தலைவர்களும் ஆலோசனை நடத்தியுள்ளனர். இந்த பேச்சுவார்த்தை மிகவும் சுமுகமான முறையில் இருந்தது என்று தெரிவித்தார். (ஸ்ரீ-2)

## சிரியாவை முற்றுகையிட்டது பீரங்கிப் படை; துப்பாக்கிச் சூட்டில் ஏராளமானோர் பலி!!!

(டமாஸ்கஸ்)

சிரியா நாட்டின் தலைநகர் டமாஸ்கஸின் மேற்குப் பகுதியிலுள்ள புறநகர்ப்பகுதியை நேற்று முன்தினம் பீரங்கிப்படைகள் முற்றுகையிட்டன. நாடு முழுவதும் பல்வேறு இடங்களில் பீரங்கிப் படைகள் குவிக்கப்பட்டுள்ளன. கடந்த இரண்டு நாட்களில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் ஏராளமானோர் பலியாகியிருக்கக் கூடும் என அஞ்சப்படுகிறது.

சிரியாவில் அதிபர் பஷர் அல் அசாத்துக்கு எதிரான போராட்டம் கடந்த ஒரு வாரத்தில் மேலும் தீவிரமடைந்துள்ளது. ஆர்ப்பாட்டக்காரர்களின் மீதான அரசின் வன்முறையும் மேலும் அதிகரித்துள்ளது.

கடந்த மார்ச் மாதம் தொடங்கிய இப்போராட்டத்தில் இதுவரை 800 பேர் பலியாகியுள்ளனர். இவர்களில் 220 பேர் டரா நகரில் பீரங்கிப் படைகள் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் பலியாகியிருக்கக் கூடும் என சிரியாவிலிலுள்ள மனித உரிமை அமைப்புகள் குற்றம் சாட்டியுள்ளன.

கடந்த 6ஆம் திகதி நண்பகல் தொழுகைக்குப் பின் நாடு முழுவதும் ஆயிரக்கணக்கான மக்கள் கூடி நகரங்களில் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர். இந்த ஆர்ப்பாட்டம் நேற்று முன்தினமும் தொடர்ந்தது. இந்நிலையில் தலைநகர் டமாஸ்கஸின் புறநகர்ப்பகுதியான முவாதாமியாவை பீரங்கிப் படைகள் முற்றுகையிட்டன. இதனால் அந்நகர் டமாஸ்கஸிலிருந்து முற்றிலும் துண்டிக்கப்பட்டது.

நகரின் முக்கிய வீதிகளில் பீரங்கிகளும் வீரர்களும் நிறுத்தப்பட்டனர். உயரமான கட்டடங்களின் உச்சியில் நவீனரக துப்பாக்கிகள் ஏந்திய வீரர்கள் நிறுத்தப்பட்டனர். தொடர்ந்து நேற்று அந்நகரில் பலர் கைதுசெய்யப்பட்டனர். நகரில் மின்சாரம் மற்றும் தொலைபேசி இணைப்புகள் துண்டிக்கப்பட்டுவிட்டன.

இதேபோல் அலப்போ, ஜெப்லா, பனியாஸ், ஹமா, ஹோம்ஸ் ஆகிய வடபகுதி நகரங்களும் தென்பகுதியில் உள்ள டராவும் பீரங்கிப் படைகளால் முற்றுகையிடப்பட்டுள்ளன. ஹோம்ஸ் நகரில் வீடு வீடாகப் புகுந்து மக்களைப் பொலிஸார் கைது செய்தனர். பனியாஸ் நகரில் நேற்று முன்தினம் குடிநீர், மின்சாரம் மற்றும் தொலைபேசி இணைப்புகள் முற்றி லும் துண்டிக்கப்பட்டன.

டராவில் நேற்று முன்தினம் ஒரு சிற்றூர்தியில் 10 பணியாளர்கள் கொல்லப்பட்ட நிலையில் கிடந்தனர். இவர்கள் அனைவரும் அண்டை நாடான லெபனானைச் சேர்ந்தவர்கள். இதற்கு ஆர்ப்பாட்டக்காரர்கள் நடத்திய துப்பாக்கிச் சூடுதான் காரணமென இராணுவம் குற்றம் சாட்டியுள்ளது.

அதிபர் அசாத் நேற்று முன்தினம் அளித்த பேட்டியில், விரைவில் இப்பிரச்சினை முடிவுக்கு வந்துவிடும். நிர்வாக, அரசியல் மற்றும் ஊடகச் சுதந்திரங்கள் முன்னேற்றப்படும் எனத் தெரிவித்தார். (ஸ்ரீ)

## பாகிஸ்தான் அடைக்கலம் அளித்தது உறுதியானால் அமெரிக்கா நடவடிக்கை?

சர்வதேச பயங்கரவாதி ஒசாமா பின்லேடனுக்கு பாகிஸ்தான் அடைக்கலம் அளித்ததாக விசாரணையில் உறுதியானால் அமெரிக்கா என்ன நடவடிக்கை எடுக்கும் என்ற எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது.

பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத் அருகே அபோதாபாத் நகரில் பயங்கரவாதி ஒசாமா பின்லேடனை அமெரிக்க சிறப்புப் படை கடந்த 2ஆம் திகதி அதிகாலை சுட்டுக் கொன்றது. பல ஆண்டுகளாக பின்லேடன் அங்கு பாதுகாப்பாக வசித்தது தெரியவந்துள்ளது. பின்லேடன் அங்கிருந்தது பாகிஸ்தான் உளவு அமைப்பான ஐ.எஸ்.ஐ. க்குத் தெரியாமல் இருக்க முடியாதென்றும் இராணுவ பயிற்சி மையம் அருகில் பங்களா இருப்பதால் அது இராணுவத்திற்கும் தெரிந்திருக்கலாம் என்றும் அமெரிக்கா சந்தேகிக்கின்றது.

இது தொடர்பாக பாகிஸ்தானிடம் அமெரிக்க அரசு விளக்கம் கேட்டுள்ளது. பின்லேடனுக்கு பாகிஸ்தான் அடைக்கலம் அளித்து வந்ததாக எழுந்துள்ள குற்றச்சாட்டு குறித்து அமெரிக்க புலனாய்வு முகவர் அமைப்புகள் விசாரணை நடாத்தத் தொடங்கியுள்ளன.

இந்நிலையில் பின்லேடனுக்கு பாகிஸ்தான் அடைக்கலம் அளித்ததாக உறுதியாகத் தெரியவந்தால் அந்நாட்டின் மீது அமெரிக்கா நடவடிக்கை எடுக்குமா என்ற கேள்விக்கு ஒபாமா அரசு பதிலளிக்க மறுத்துள்ளது. இதுபற்றி வெள்ளை மாளிகை தேசிய பாதுகாப்பு ஆலோசகர் டாம் டோனிலான் கூறுகையில், யூகத்தின் அடிப்படையில் கருத்துத் தெரிவிக்க விரும்பவில்லை. அதுபோன்ற சூழ்நிலை வரும்போது பதிலளிக்கப்படும். விசாரணை நீடிக்கிறது, பிறகு பார்ப்போம் என்றார். (ஸ்ரீ-2)

## கோழி கொழுப்பில் விமான எரிபொருள்; அமெரிக்க விஞ்ஞானிகள் சாதனை

(நியூயோர்க்)

அமெரிக்காவின் நாசா விஞ்ஞானிகள் விலங்குகளின் கொழுப்பிலிருந்து சுற்றுச் சூழலுக்குப் பாதுகாப்பான விமான எரிபொருள் தயாரித்துள்ளனர்.

அமெரிக்காவின் கலிபோர்னியா மாநிலத்திலுள்ள நாசா ட்ரைடன் விமான ஆராய்ச்சி நிறுவனம் கடந்த 2 மாதங்களாக இது தொடர்பாக தீவிர ஆய்வு நடாத்தியது.

கோழி மற்றும் மாட்டிறைச்சியில் உள்ள கொழுப்பில் இருந்து தயாரிக்கப்பட்ட பயோ எரிபொருளை விமானத்தில் பயன்படுத்தி சோதனை நடாத்தியது.

முதற்கட்டச் சோதனையில் எரிபொருளின் தரம் இயந்திரங்களின் செயற்றிறன், பாதுகாப்பு ஆகியவை உறுதிப்படுத்தப்பட்டன. அடுத்த கட்டமாக எரிபொருளிலுள்ள நச்சுத்தன்மை சோதனைக்குட்படுத்தப்பட்டது.

நைதரசன் மற்றும் ஐதரோகாபன் சுற்றுச் சூழலில் மாசுபாட்டை ஏற்படுத்தும் என்பதால் எரிபொருளில் இதன் அளவு குறித்த கட்டுப்பாடுகள் உள்ளன.

இந்தப் பரிசோதனையிலும் கோழி எரிபொருள் வெற்றி பெற்றுள்ளது.

இறுதிக்கட்டமாக நிறம், தரப் பரிசோதனைக்கு எரிபொருள் உட்படுத்தப்பட்டது. இதில் 90 சதவீதம் காபன் மாசுபாடு இல்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் சல்பேட் ஆர்கானிக் ஏரோசெல் உள்ளிட்ட ஜெட் எரிபொருளுக்கு விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை திருப்திகரமாகப் பூர்த்தி செய்துள்ளது. இறுதிக்கட்ட ஒப்புதலுக்கு பிறகு விரைவில் கோழி எரிபொருள் அறிமுகப்படுத்தப்படுகிறது. (ஸ்ரீ-2)




## ஆஸியில் புகலிடம் கோருவோரை மலேசியா அனுப்பும் திட்டத்திற்கு பலத்த எதிர்ப்பு

அவுஸ்திரேலியாவில் புகலிடம் கோரிவரும் மக்களை மலேசியாவுக்கு அனுப்புவதற்கு அவுஸ்திரேலிய அரசு முற்பட்டுவருவதானது, அனைத்துலக மட்டத்தில் எதிர்ப்பலைகளை தோற்றுவித்துள்ளதாக பிரித்தானியாவைத் தளமாகக் கொண்ட த இன்டிபென்டன்ட் நாளேடு செய்தி வெளியிட்டுள்ளது.

ஆஸி.யில் புகலிடம் கோரிச் சென்றவர்களை மலேசியாவுக்கு அனுப்புவதற்கு அவுஸ்திரேலிய அரசு திட்டமிட்டுள்ளபோதிலும் ஐ.நா.வின் அகதிகளுக்கான உடன்பாட்டில் கையொப்பமிட மறுத்து வருகின்றது.

அவுஸ்திரேலியாவில் உள்ள 800 அகதிகள் மலேசியாவுக்கு அனுப்பப்படுவார்கள் என்று பிரதமர் ஜூலியா கில்லார்ட் அறிவித்திருந்தார்.

எதிர்வரும் 4 வருடங்களில் மலேசியாவிலுள்ள 4 ஆயிரம் மக்களைஅவுஸ்திரேலியா ஏற்றுக்கொள்ளும் என தெரிவிக்கப்படுகிறது. அவர்களில் பலர் பர்மாவைச் சேர்ந்தவர்களாவர்.

அவுஸ்திரேலியாவுக்கு வரும் மக்களை மலேசியாவுக்கு அனுப்புவதன் மூலம் அவர்கள் மிக நீண்ட வரிசையில் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்படுவதால் அகதிகளின் வரவை குறைக்க முடியும் என்று கில்லார்ட் தெரிவித்துள்ளார்.

இதனை அனைத்துலக மன்னிப்புச்சபை வன்மையாகக் கண்டித்துள்ளது. இது அகதிகள் மீது மேற்கொள்ளப்படும் மோசமான கொள்கை என அனைத்துலக மன்னிப்புச் சபையின் அவுஸ்திரேலிய பிரதிநிதி கிரஹம் தோம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, மலேசியாவில் தங்கியிருக்கும் புகலிடக் கோரிக்கையாளர்களைக் கைது செய்யப்படும் அல்லது நாடு கடத்தப்படும் சாத்தியங்கள் உள்ளதாக ஐ.நா.வின் அகதிகளுக்கான அமைப்பு தெரிவித்துள்ளதாக அந்த நாளேட்டில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# DLF IPL ஐ.பி.எல் கொண்டாட்டம்

ஏப்பிரல் 8 முதல் மே 28 வரை

# துளித்துளியாய்...

### பாக் .டெஸ்டில் சந்தர்போல்

பாகிஸ்தானுக்கு எதிரான ஒரு நாள் தொடரில் மேற்கிந்தியத் தீவுகள் அணியில் சந்தர்போல் அதிரடியாக நீக்கப்பட்டார். இதையடுத்து அவர் கிரிக்கெட் சபையை கடுமையாக சாடினார். இந்நிலையில் பாகிஸ்தானுக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் சந்தர் போலுக்கு வாய்ப்பு கொடுக்கப்பட்டுள்ளது. சர்வானும் அணியில் இடம் பிடித்துள்ளார். கயானாவில் நாளை முதல் டெஸ்ட் ஆரம்பமாகிறது.

### சிறிலங்கா லீக்கில் பாகிஸ்தான் வீரர்கள்

இலங்கை கிரிக்கெட் சபை சார்பில் எஸ்.எல்.பி.எல் இருபது-20 தொடர் எதிர்வரும் ஜுலை மாதம் நடத்தப்படுகிறது. இந்தத் தொடரில் பங்கேற்க பாகிஸ்தான் வீரர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. அப்ரிடி,மிஸ்பா உல்ஹக் உள்ளிட்ட 8 முன்னணி வீரர்கள் பங்கேற்பார்கள் என தெரிகிறது.

### பின்லேடன் இறந்த நகரத்தில் ஒரு நாள் போட்டி

சர்வதேச தீவிரவாதி ஒசாமா பின்லேடனை கடந்த 2 ஆம் திகதி அமெரிக்க படைகள் பாகிஸ்தானின் அபோதாபாத் நகரில் சுட்டுக்கொன்றது. இந்நிலையில் இந்த நகரத்தில் எதிர்வரும் 29 ஆம் திகதி பாகிஸ்தான் ஆப்கானிஸ்தான் அணிகள் இடையே ஒரு நாள் போட்டி நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2009 ஆம் ஆண்டு இலங்கை அணி பாகிஸ்தானில் சுற்றுப் பயணம் செய்து விளையாடியபோது அந்த அணி மீது தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தினர். இதில் இலங்கை அணியின் முன்னணி வீரர்கள் சிலர் காயமடைந்தனர். அதன் பின்னர் எந்த அணியுமே இதுவரை பாகிஸ்தான் நாட்டிற்கு சுற்றுப் பயணம் மேற்கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

### சிக்கலில் அப்ரிடி

பாக். கிரிக்கெட் அணியின் தலைவர் அப்ரிடிக்கும் அணி நிர்வாகத்திற்கும் இடையேயான மோதல் முற்றியுள்ளது.மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான ஒருநாள் போட்டி முடிந்ததும் அணி நிர்வாகத்தை அப்ரிடி கடுமையாக விமர்சித்தார். தேவையில்லாமல் அடுத்தவர் விஷயத்தில் யாரும் தலையை நுழைக்கக் கூடாது என அப்ரிடி பரபரப்பாக பேட்டி அளித்தார்.

அப்ரிடியின் இந்தச் செயலால் பாக்.கிரிக்கெட் சபை அதிருப்தியடைந்துள்ளது. இதற்கிடையே மேற்கிந்தியத் தீவுகள் சுற்றுப்பயணம் தொடர்பாக அணி நிர்வாகம் அறிக்கை அளித்த பின்னர் அப்ரிடி மீது நடவடிக்கை எடுக்கப்படும் என தகவல் வெளியாகி உள்ளது.

# மும்பையை பந்தாடியது பஞ்சாப்

(சண்டிகார்)

மும்பை இந்தியன்ஸ் அணியை 76 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தியது பஞ்சாப் அணி.

ஐ.பி.எல். தொடரில் சண்டீகாரில் நேற்று நடைபெற்ற 54 அவது போட்டியில் கில்கிறிஸ்ட் தலைமையிலான கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணியும் டெண்டுல்கர் தலைமையிலான மும்பை இந்தியன்ஸ் அணியும் மோதின.

இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மும்பை இந்தியன்ஸ் அணித்தலைவர் டெண்டுல்கர் முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணிக்கு வால்தாரி, கில்கிறிஸ்ட் ஜோடி ஆரம்பம் வழங்கினர்.

இதில் வால்தாரி 14 பந்துகளில் (3 பவுண்டரிகள் உட்பட) 14 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தார்.

அடுத்து களமிறங்கிய மார்ஷ் சிறப்பாக துடுப்பெடுத்தாட, கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணியின் ஓட்ட எண்ணிக்கை வேகமாக அதிகரித்தது.

எனினும் அணித்தலைவர் கில்கிறிஸ்ட் 28 பந்துகளில் (2 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 28 ஓட்டங்களை எடுத்து மலிங்க வேகத்தில் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து களமிறங்கிய தினேஸ் கார்த்திக் அதிரடியாக ஆட கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணி 12 ஓவர்களில் 100 ஓட்டங்களை எட்டியது.

### வந்தார் பட்டேல் சரிந்தது பஞ்சாப்

இதில் ஷோன் மார்ஷ் 34 பந்துகளில் (5 பவுண்டரிகள் அடங்கலாக) 43 ஓட்டங்களை எடுத்து பட்டேலின் பந்தில் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து டேவிட் ஹசி பூச்சியத்துடனும் மான்டீப் சிங் 8, ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர்.

அடுத்துச் சிறப்பாக துடுப்பெடுத்தாடிய தினேஸ் கார்த்திக் 24 பந்துகளில் (4 பவுண்டரிகள் ஒரு சிக்ஸர் உட்பட)31 ஓட்டங்களுடன் பட்டேலின் பந்தில் ஆட்டமிழக்க கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணி 20 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களையிழந்து 163 ஓட்டங்களை எடுத்தது.

பந்து வீச்சில் முனாப்பட்டேல் 4 ஓவர்கள் பந்துவீசி 21 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட்டுக்களையும் லசித் மலிங்க 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு 20 ஓவர்களில் 164 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய மும்பை இந்தியன்ஸ் அணிக்கு ஆரம்பமே அதிர்ச்சியளித்தது.

அணித்தலைவர் டெண்டுல்கர் 6, ரோகித் சர்மா 5, பிலியாட் 15 , சைமன்ஸ் 8, ராயுடு 13, சுமன் 4 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேற மும்பை இந்தியன்ஸ் அணி 9.1 ஓவர்களில் 69 ஓட்டங்களை மாத்திரம் சேர்த்து 6 விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது.

பின்வரிசையில் ஹர்பஜன் சிங் 12, பொல்லார்ட் 17, குல்கர்னி 2 ஓட்டங்களுடனும் முனாப்பட்டேல் பூச்சியத்துடனும் பாட்ரின் பந்தில் ஆட்டமிழக்க மும்பை இந்தியன்ஸ் அணி 12.5 ஓவர்களில் 87 ஓட்டங்களை மாத்திரமெடுத்து சகல விக்கெட்டுக்களையுமிழந்தது.

இதன்மூலம் கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணி 76 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

பந்துவீச்சில் பாட் 4விக்கெட்டுக்களையும் பிரவீன் குமார் 2 விக்கெட்டுக்களையும் விபுல் சர்மா, ஹரிஸ், சிறிவஸ்தாவ ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இப் போட்டியில் தோல்வியடைந்தாலும் மும்பை இந்தியன்ஸ் அணி பிளே ஓப் சுற்றிற்கு ஏற்கெனவே தகுதி பெற்றுவிட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

# புனே வாரியர்ஸ் இலகு வெற்றி டெக்கான் சோகம் தொடர்கிறது

(ஹைதராபாத்)

மிட்சல் மார்ஷின் சிறப்பான பந்து வீச்சுக் கைகொடுக்க புனே வாரியர்ஸ் அணி 6 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் டெக்கான் சார்ஜர்ஸ் அணியை வீழ்த்தியது.

இந்தியன் பிரிமியர் லீக் (ஐ.பி. எல்) அமைப்பின் 10 அணிகள் மோதும் 4 ஆவது இருபது-20 தொடர் இந்தியாவில் நடைபெற்று வருகிறது.

இதில் ஹைதராபாத்தில் நேற்று நடை பெற்ற 53 ஆவது போட்டியில் யுவராஜ் சிங் தலைமையிலான புனே வாரியர்ஸ் அணியும்சங்கக்கார தலைமையிலான டெக்கான் சார்ஜர்ஸ் அணியும் மோதின.

இப் போட்டியில் புனே வாரியர்ஸ் அணியில் கங்குலி இணைக்கப்பட்டார். நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய டெக்கான் சார்ஜர்ஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களையிழந்து 136 ஓட்டங்களை எடுத்தது.



இதில் ரவி திஜா, போல் டுமினி தலா 30 ஓட்டங்களையும் கிறிஸ்ரியன் 18 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் மிட்சல் மார்ஷ் 4 விக்கெட்டுக்களையும் யுவராஜ் சிங் 2 விக்கெட்டுக்களையும், பார்னல் ராகுல் சர்மா தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு இலகுவான இலக்கை விரட்டிய புனே வாரியர்ஸ் அணி பாண்டியின் சிறப்பான ஆட்டத்தின் மூலம் 18.2 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை மாத்திரமிழந்து 137 ஓட்டங்களை எடுத்து 6 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

இதில் மனிஷ் பாண்டி 42 பந்துகளில் (6 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் உட்பட) 49 ஓட்டங்களையும் ஜெசி ரைடர் 20 பந்துகளில் (5 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் உட்பட) 35 ஓட்டங்களையும் சௌரவ் கங்குலி ஆட்டமிழக்காமல் 32 பந்துகளில் (3 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 32 ஓட்டங்களையும் எடுத்தனர்.


பந்துவீச்சில் கிறிஸ்ரியன் 2 விக்கெட்டுக்களையும் ஒஜா, மிஸ்ரா தலா ஒரு விக்கெட்டையும் சாய்த்தனர்.

இவ்வெற்றியின்மூலம்புனேவாரியர்ஸ் அணி தான் விளையாடிய 11 ஆவது போட்டியில் 4 ஆவது வெற்றியைப் பதிவு செய்தது.

இப் போட்டியில் புனே வாரியர்ஸ் அணியின் மிட்சல் மார்ஷ் ஆட்டநாயகனாகத் தெரிவானார்.




# குரங்குகளிடம் சிக்கிய ரூனே!



இங்கிலாந்து கால்பந்து வீரர் ரூனி சமீபத்தில் மனைவி குழந்தைகளுடன் வனப் பகுதிக்கு சுற்றுலா சென்றார். அப்போது பபூன் குரங்குகள் கூட்டத்தில் அவரது கார் சிக்கிக் கொண்டது. குரங்குகள் காரின் மேல் ஏறி குதித்து வைப்பரை முறித்தன. கண்ணாடிகளை நாசம் செய்தன. கால்பந்து விளையாட்டின்போது ரூனி எதிரணியினரிடம் எப்படி நடந்து கொள்வாரோ அதேபோல் குரங்குகளும் செய்துள்ளன. குரங்குகள் எப்போதும் நாம் என்ன செய்கிறோமோ அதை திருப்பி செய்யும் என ஒரு இலண்டன் தொலைக்காட்சி விமர்சித்துள்ளது.

# புள்ளிப் பட்டியல்

| அணிகள் | போட்டி | வெற்றி | தோல்வி | சமனிலை | முடிபில்லை | புள்ளிகள் | நிகர ஓட்ட எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|
| மும்பை இந்தியன்ஸ் | 11 | 8 | 3 | 0 | 0 | 16 | +0.314 |
| சென்னை | 11 | 7 | 4 | 0 | 0 | 14 | +0.509 |
| கொல்கத்தா | 11 | 7 | 4 | 0 | 0 | 14 | +0.464 |
| றோயல் சலஞ்ஜர்ஸ் | 10 | 6 | 3 | 0 | 1 | 13 | +0.786 |
| ராஜஸ்தான் றோயல்ஸ் | 11 | 5 | 5 | 0 | 1 | 11 | -0.504 |
| கொச்சி | 11 | 5 | 6 | 0 | 0 | 10 | -0.624 |
| புனே வாரியர்ஸ் | 11 | 4 | 7 | 0 | 0 | 8 | -0.003 |
| டில்லி | 11 | 4 | 7 | 0 | 0 | 8 | -0.312 |
| கிங்ஸ் லெவின் பஞ்சாப் | 10 | 4 | 6 | 0 | 0 | 8 | -0.432 |
| டெக்கான் சார்ஜர்ஸ் | 11 | 3 | 8 | 0 | 0 | 6 | -0.177 |

# போர்க் குற்றச்சாட்டில் இரு...

நேற்று காலை அலரி மாளிகையில் உள்ளூர் அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களின் செய்தி ஆசிரியர்களைச் சந்தித்துக் கலந்துரையாடிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அங்கு தொடர்ந்து கருத்து வெளிட்ட ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ,

பொய்யான குற்றச்சாட்டுக்களை உள்ளடக்கியஐநாவின்அறிக்கையோ அதன் உள்ளடக்கத்தையோ அரசாங்கம் ஒருபோதும் ஏற்கப் போவதில்லை.

ஆனாலும் ஒரு அரசாங்கம் என்ற வகையில், நாட்டுக்கு ஏற்பட்டுள்ள அவப்பழியை துடைக்க இந்தப் பொய்யான குற்றச்சாட்டுகள் தொடர்பாக ஐ.நாவுக்குப் பதில் ஒன்றை அனுப்பவுள்ளோம்.

இந்த அறிக்கையை அரசாங்கம் சாதாரணமாக எடுத்துக் கொள்ளவில்லை. தீவிரமாகவே எடுத்துக் கொண்டுள்ளது.

ஐ.நா. பொதுச் செயலருக்கு அனுப்புவதற்கான பதில் தயாரிக்கப்பட்டு வருகிறது. இந்தக் குற்றச்சாட்டுக்கள் பொய்யானதாக இருந்த போதும் ஓர் அரசாங்கம் என்ற வகையில் அவர்களுக்கு பதிலளிக்க வேண்டிய தேவை உள்ளது. பொருத்தமான முறையில் அரசாங்கம் அதற்கு பதிலளிக்கும்.

போரின் போது பொதுமக்களுக்கு ஏற்பட்ட இழப்புக்கள் தொடர்பான எந்தவொரு புள்ளிவிபரத்தையும் வழங்கும் நிலையில் நான் இல்லை. ஏனென்றால் போர் நடந்த போது அந்தப் பகுதியில் எவ்வளவு பொதுமக்கள் இருந்தார்கள் என்ற சரியான புள்ளிவிபரம் ஏதும் கிடையாது.

அரசாங்கம் மேற்கொண்டது மனிதாபிமான நடவடிக்கையே. மக்களை மீட்கின்ற அந்த நடவடிக்கையின் போது பொதுமக்களை படையினர் இலக்கு வைக்கவில்லை.

இராணுவ நடவடிக்கைகள் விடுதலைப் புலிகளால் மனித கேடயங்களாகப் பாவிக்கப்பட்ட மக்களை மீட்பதற்காகவே நடத்தப்பட்டன.

எமது படைகள் நன்கு பயிற்சி பெற்றவர்கள். அவர்களுக்கு மனித உரிமைகள் மற்றும் அனைத்துலக மனிதாபிமானச் சட்டங்கள் குறித்த அறிவு போதிக்கப்பட்டுள்ளது. அதை அவர்கள் எப்பொழுதும் கடைபிடிக்கிறார்கள்.

இலங்கை மீது போர்க்குற்றம் சுமத்தியுள்ள ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கையால் எழுந்துள்ள நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு எமக்கு இந்தியாவின் ஆதரவு முக்கியமானது.

இந்தியா எப்போதும் எங்களுடன் ஒத்துழைத்து உதவிவருகிறது. எமது உறவுகள் எல்லா வேளைகளிலும் நன்றாகவே உள்ளன.

ஐ.நாவின் இந்த அறிக்கை தொடர்பாக இந்தியா பொருத்தமான வேளையில் பொருத்தமான பதிலைவழங்கும். ஐரோப்பியநாடாளுமன்றத்தில் இலங்கைக்கு எதிரான விவாதம் ஒன்று நடைபெறவுள்ளது. அந்த விவாதத்தில் உண்மை நிலையை பகிரங்கப்படுத்த ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினர்களின் குழுவொன்று தயாராகி வருகிறது என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

இந்தச் சந்திப்பில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் அமைச்சர்கள் பசில் ராஜபக்ஷ, நிமால் சிறிபால டி சில்வா, ஜி.எல்.பீரிஸ், ஹெகலிய ரம்புக்வெல, அனுர பிரியதர்சன யாப்பா மற்றும் ஜனாதிபதியின் செயலர் லலித் வீரதுங்க ஆகியோரும் கலந்து கொண்டனர். (ந-5)

# யுத்தத்தின்போது மக்...

பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்படாமல் விடுதலைப் புலிகளை தோற்கடிப்பதையே அரசாங்கம் இலக்காக கொண்டிருந்தது.

இறுதி யுத்தம் நடைபெற்ற போது, பாதிக் கப்பட்டவர்களை வெளியேற்றுவதற்காக ஐக்கிய நாடுகள் சபையின் சின்னத்துடனான கப்பல் ஒன்று கோரப்பட்டது. எனினும் ஐக்கிய நாடுகள் சபை இதனை வழங்கவில்லை. எனினும் அரசாங்கம் அந்த பணிகளை சிறப்பாக மேற் கொண்டது.

எமது அரசாங்கம் மாறினாலும், சர்வ தேசத்தின் அழுத்தங்கள் தொடர்ந்தும் காணப்படும் என்றார்.

மேலும் தம்மால் நியமிக்கப்பட்ட கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு தொடர்பில் கருத்து தெரிவித்த ஜனாதிபதி, இந்தக் குழு முழுமையான அறிக்கை ஒன்றை வழங்கும் பொருட்டு, காலத்தை நீடிக்குமாறு கோரியுள்ளது.

எனினும் தற்போது இந்த ஆணைக் குழு இடைக்கால அறிக்கை ஒன்றை சமர்ப்பித்துள்ளது. அதில் கூறப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் ஆராய்வதற்காக 7 அமைச்சின் செயலாளர்கள் உள்ளடங்கிய குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இந்திய விசேட குழுவொன்று இலங்கைக்கு வருவதாக தெரிவித்துள்ள போதும் அந்தக்குழு தற்போதைக்கு இலங்கை வராது என்றார்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்புடன் இடம் பெற்ற சந்திப்புக்கள் குறித்து கருத்துரைத்த ஜனாதிபதி, இரண்டு தரப்பின் இணக்கப்பாடு தொடர்பிலும் பொது செனட்சபை ஒன்றை ஸ்தாபிப்பது தொடர்பில் கலந்துரையாடப்படுகின்றது.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு முன்வைத்த யோசனைகள் குறித்து ஏனைய தமிழ்க்கட்சிகளுடன் பேசவுள்ளோம்.

தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு இலங்கைத் தமிழர்களை பிரதிநிதித்துவப் படுத்தும் ஒரே ஒரு கட்சியில்லை.

விடுதலைப் புலிகள் கோரியதை ஒரு போதும் வழங்க முடியா தெனவும் அவர் தெரிவித்துள்ளார். (ந-5)

# பான் கீ மூனைக் கொல்...

நாடுகள் செயலாளர் நாயகத்துக்கு நான் ஒன்றைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இலங்கையில் உள்நாட்டு விடயங்களில் தலையிட முற்படாதீர்கள்.

அவ்வாறு தலையிட முற்பட்டால் அது எந்த சர்வதேச விசாரணைக்குழுவாக இருந்தாலும் அவர்களை படுகொலை செய்ய இருபத்து ஐந்து தற்கொலை குண்டு தாரிகள் தற்போதைக்கு களனியில் தயாராக இருக்கின்றனர்.

நிபுணர் குழுவின் தலைவர் தருஸ்மன் தாயொருவரின் வயிற்றில் இருந்து பிறந்தவராக இருக்கமுடியாது. அவர் நிச்சயமாக விலங்கொன்றின் வயிற்றில் இருந்து பிறந்தவராக தான் இருக்க வேண்டும் என்றும் அமைச்சர் மேர்வின் சில்வா மேலும் குறிப்பிட்டுள்ளார். (ந-5)

# இந்திய உயர்மட்ட...

தகவலை வெளியிட்டார். இந்திய வெளிவிவகார செயலர் நிருபமா ராவ், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன், பாதுகாப்பு செயலர் பிரதீப் குமார் ஆகியோரை உள்ளடக்கிய குழுவே அடுத்த வாரம் கொழும்பு வரவுள்ளது என்றும் ஜி.எல். பீரிஸ் மேலும் கூறியுள்ளார். (ந-5)

NOTICE

CITY COLLEGE OF ENGLISH

இது வரை காலமும் British College of English என்ற பெயருடன் கல்வி நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்த எமது நிறுவனம் City of London College உடன் இணைந்து பல்வேறு கல்வி நடவடிக்கைகளையும் மேற்கொள்ள இருப்பதால் மே மாதம் 16ம் திகதியிலிருந்து City College of English என்ற பெயரில் கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்வோம் என மாணவர்களிற்கும், பெற்றோர்களுக்கும் அன்புடன் அறியத்தருகின்றோம்.

CITY COLLEGE OF ENGLISH

Affiliated With

UNIVERSITY of CAMBRIDGE ESOL Examinations English for Speakers of Other Languages

City & Guilds

BRITISH COUNCIL

DIRECTORS

Mr.K.NAGARAJAN. B.A (cey)
* M.A (Kelaniya)
* TKT (Cambridge. UK)

Rev. Fr. A. SAHAYATHASAN
* Bachelor of Arts (English), University of Jaffna.
* Master of Arts (English Literature), University of Sydney, Australia.
* Master of Arts (50% research, English Literature), Griffith University, Australia.

கடந்த 08 வருடங்களாக நூற்றுக்கணக்கான மாணவர்கள் எமது கல்லூரியில் படித்து சர்வதேச சான்றிதழ்களை பெற்றிருக்கிறார்கள். வருங்காலங்களிலும் தொடர்ந்தும் எமது பணியை செய்வோம் என உறுதிகின்றோம்.

City College LONDON



CITY COLLEGE OF ENGLISH
143, Adiyapatham Road,
Thirunelvely.
0213216027, 0778803887

(C-3179)

ESOL Diploma in English

City & Guilds Approved Centre

City & Guilds a Royal Chartered Institution is one of the world's leading vacational qualification awarding bodies. எமது கல்லூரி City & Guilds Rayal Charter இனதும் Cambridge பல்கலைக் கழகத்தினதும் பதிவு செய்த நிலையமாகும்.



Our Lecturers

1. Mr.K.NAGARAJAN. B.A (cey)
M.A (Kelaniya) TKT (Cambridge. UK)
a. 15 வருடங்கள் கிழக்குப் பல்கலைக்கழக ELTU வில் போதனாசிரியராக இருந்தவர்.
b. 20 வருடங்களுக்கு மேலாகத் திறந்த பல்கலைக்கழக வருகை தரு ENGLISH Tutor ஆக இருப்பவர்.
c. Served as a tutor for the promotion of the Quality Improvement of Teachers by Secretary for Education chaired by the State Secretary for Education.

2. Rev.Fr.A.Sahayathasan
M.A (English Language) University of Sydney
M.A (English Litterature) University of Sydney

Why City & Guilds English Qualifications?

Recogized by UK Universities and UK Border Agency
Directly Linked to the Common European Framework
Certificate for Lifetime

We are pleased to announce that City & Guilds IESOL*at B2 (Communicator) and C1 (Expert) levels has been recognised as meeting the requirements of the Home Office Border and Immigration Agency's Points Based System

B2,C1 மட்டங்களில் பல மாணவர்கள் எமது கல்லூரியில் படித்து பரீட்சையில் சித்தியடைந்து City & Guilds ன் சான்றிதழ்களையும் பெற்று வெளிநாடுகளிற்கு சென்றுள்ளனர். பரீட்சைகள் யாழ்ப்பாணத்தில் நடைபெறும்.



குறுகியகாலத்தில் பூரண ஆங்கில அறிவினைப் பெற சரளமாக எந்தச் சூழ்நிலையிலும் ஆங்கிலத்தில் பேச, இலக்கணப்பிழைகள் இல்லாமல் எழுத, எந்த ஆங்கிலப் பத்திரிகையையும் இலகுவாகப் படிக்க ஏற்ற ஓர் பாடநெறி. அடிப்படையில் இருந்து ஆங்கிலம் போதிக்கப்படும்.

திருமணம் செய்த இல்லத்தரசிகள் அல்லது British பிரஜைகளை திருமணம் செய்ய இருக்கும் அனைவரும் கட்டாயமாக ஆங்கிலத்தில் தேர்ச்சியடைய வேண்டும். UK Border Agency அங்கீகரிக்கும் பாடநெறி City & Guilds இன் Diploma in English (A1, A2) மட்டுமே எல்லா மட்டங்களிலும் பூரண கல்வியை பெற்று எமது கல்லூரியில் பரீட்சையை எழுத முடியும்.

| Course Schedule | Mon -Tue-Wed-Thu-Fri | Sat & Sun |
|---|---|---|
| Duration | 2 Months (100 hours) | 3 Months (100 hours) |
| Time | 8.30.10.30 a.m 10.30.12.30 p.m | 8.30.11.30 a.m |
| Commencement | 18.05.2011 | 21.05.2011 |

Registration : Rs 500/= Course Fee :100 /= per hour

வகுப்புகள் 18.05.2011 ஆரம்பம்

CITY COLLEGE OF ENGLISH
(திருநெல்வேலிச் சந்திக்கும் கல்வியங்காட்டுச் சந்திக்கும் இடையில்)
143, Adiyapatham Road, Thirunelvely. T.P: 0213216027 - 0778803887

(C-3180)

இறைச்சிக் கோழி விற்பனை

CSI

சுத்தம் செய்த நிறை Kg - 420/=
முழுநிறை Kg - 270 /=

வரணி மிஷன் பாம், வரணி

தொடர்புகளுக்கு: 0777715367

(4895)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.05.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.